கிரந்தகம் / கிடப்பனை

இலங்கை யாழ்ப்
பாணம்.

14.19

O22:4198G
M87
114521

148 1-

3616

ஸ்ரீ

ஸ்ரீராமஜயம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீமத்வேதாந்தகுரவேநம:

# கங்காயாத்ராப்ராபவம்.

கவித்தலம்

துரைசாமிமூப்பனரால்

செய்யப்பட்டு

Registrar of Books, Madras

சென்னை

மிமோரியல் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

ஸர்வஜித்து வருஷம் வைகாசிமீ

*Copy right Reserved.*

71

ஸ்ரீ

ஸ்ரீராமஜயம்.

# அறிவிப்பு.

இந்நூல்செய்தவர் செய்தபுத்தகங்கள்.

| | | |
|---|---|---|
| | | அணா |
| ஸ்ரீஅயோத்திமாநகரமான்மியம் | ... | ,, |
| ஜாநகிபரிணயம் | ... | ,, |
| பிரசந்நராகவம் தபாற்கூலியுள்பட | ... | 6 |
| அமிசசந்தேசம் | ஷை ... | 3 |
| கருடபுராண வசனம் | ஷை ... | 13 |
| ஸ்ரீமத்கயாமான்மியம் | ஷை ... | 3 |
| கங்கா்யாத்ராப்ரபாவம் | ஷை ... | 11 |

இவற்றில் முன்னைய விரண்டுங்கிடைக்கா கருட புராணவசன மிரண்டாம்பதிப்பு வெளிதடக்க வரு றது ஏனையபுத்தகங்கள் வேண்டுவோர் கபிஸ்தலத் திருக்கும் ம-ள-ள-ஸ்ரீ; விசுவநாதராயரிடம் தபால் மூ மாய்த் அகையநுப்பிப் பெற்றுக்கொள்ளலாம் தபா லேபிலு மனுப்பலாம் கபிஸ்தலத்தில் போஸ்டாபீ இருக்கின்றது.

ஸ்ரீ

# குறிபத்திரம்.

| | பக்கம். | மார்க்கம். [ர்க்கம். |
|---|---|---|
| ரேணுகுண்டா. | ௩ | திருப்பதிக்குச்செல்லும் மா |
| குண்டுகல். | ௧௦ | கிஷ்கிந்தைக்குப்போகும்மா |
| கிஷ்கிந்தை. | ,, | ர்க்கம்.* |
| அதோனி. | ௧௧ | |
| துங்கபத்திராநதி. | ௧௨ | |
| ராயச்சூர். | ,, | |
| கிருஷ்ணாநதி | ௧௩ | |
| வாடி. | ,, | ஹைதராபாத்துக்குச் செல் |
| ஷோலாபூர் | ,, | லும் மார்க்கம். * |
| பார்சிரோட்டு. | ௧௪ | பாண்டுரங்கத்துக்குச் செல் |
| | | லும் மார்க்கம். |
| டோண்டு | ௧௫ | குயுக்கேசெல்லும்மார்கம்* |
| புனா. | ௧௬ | |
| கார்லி. | ,, | |
| கண்டாலா. | ௧௭ | கார்லிகுகைக்குப்போகும்மா |
| கர்ஜட்டு. | ௧௮ | ர்க்கம். [க்கம்* |
| கலியாணி. | ,, | பம்பாயிக்குப் பிரியும் மார் |
| டாணா. | ,, | கன்னேரிக் குகைகளுக்குப் |
| ஷை குகைகள். | ௧௯ | போகும்மார்க்கம். |
| பம்பாய். | ௨௦ | |
| நாசிக்ரோட்டு. | ௨௩ | |
| பஞ்சவடி. | ௨௫ | |
| கங்காப்பூர். | ௨௭ | |
| திரியம்பகம். | ,, | [தேறுமிடம். |
| மன்மாடு. | ,, | டோண்டி லிருந் திறங்கி வந் |
| புசாவல். | ௨௮ | நாகப்பூருக்குப்போகும்மார் |
| பர்கான்பூர். | ௨௯ | ககம். * |
| கண்டுவா | ,, | இண்டோர்மேலே ஆஜ்மீருக்கு |
| | | ப்பிரியும் மார்க்கம். * |
| பட்டிபாத்து. | ,, | உஜ்ஜினிக்குப்பிரியும்மார்கம்* |
| உஜ்ஜினி. | ,, | |
| ஹார்டா. | ௩௦ | |
| இட்டார்சி. | ,, | பூபாலுக்குப் பிரியும் மார்க் |
| ஸோஹாக்பூர். | ,, | கம். * |
| பிப்பேரியா. | ௩௧ | பச்சுமாரிக்குப்போகும்மார் |
| மீராகஞ்சு. | ,, | க்கம். |

| | பக்கம். | மார்க்கம். |
|---|---|---|
| ஜப்பல்பூர். | ,, | நர்மதை. |
| மாணிக்கப்பூர். | ஙஉ | சித்திரகூடத்துக்குப் பிரியும் மார்க்கம். * |
| வான்மீகியாச்சிரமம். | ,, | |
| சிதாபூர். | ஙஅ | |
| சித்திரகூடம். | ,, | |
| பிரயாகை. | சா0 | திருவேணிசங்கமம். |
| மொகல்சிரே. | சாரு | ஸ்ரீகாசிக்குப் பிரியும் மார்க்கம். * |
| ஸ்ரீகாசி. | ,, | |
| கங்கை. | ருஅ | |
| திருவயோத்தி. | எக | |
| இரகுநாததாஸ்சுவாமிகள் சரித்திரம். | எஎ | |
| திருவிலச்சினை. | எகூ | |
| சுவர்ணவிக்கிரகம். | அரு | |
| லக்னோ. | ,, | |
| சாண்டிலி. | அகூ | நைமிசாரணியத்துக்குப் போகும்மார்க்கம். |
| நைமிசாரணியம். | ,, | |
| பரங்கிபூர். | கூ0 | கயாவுக்குப் பிரியும் மார்க்கம். * |
| ஸ்ரீமத்கயா. | ,, | |
| கான்பூர். | கூஎ | லக்னோவுக்குப்பிரியும்மார்க்கம். * |
| டூண்டலா. | ,, | ஆக்ராவுக்குப்பிரியும் மார்க்கம். * |
| ஆக்ரா. | ,, | |
| ஹாத்ரஸ். | ,, | மதுரைக்குப் பிரியும் மார்க்கம். * |
| மதுரை. | ,, | |
| கோகுலம். | க0உ | |
| விருந்தாவனம். | க0ச | |
| தீர்த்தப்பிரசாதம். | ,, | |
| கோவர்த்தனகிரி | க0ரு | |
| டில்லி. | க0சா | |
| சாரங்கப்பூர். | க0கூ | அரித்துவாரத்துக்குப் பிரியும்மார்க்கம் * |
| அரித்துவாரம், | ,, | |
| ருஷிகேசம் | கக0 | |
| வதரியாச்சிரமம். | ககங | |
| சப்தபுரி. | ககச | |
| கங்காயாத்திரைக்குக்காலம். | ,, | |


* இவ்வடையாளமுள்ள மார்க்கங்களைத் தாமசகட மார்க்கங்களாகக் கொள்க.

ஸ்ரீ

ஸ்ரீராமமயம்.

ஸ்ரீமந்நிகமாந்தகுருவேநம:

# கங்காயாத்ராப்ரபாவ சாரசங்கிரகம்.

இது கங்காயாத்திரையே யன்றி பிறவற்றையு மூணர்த்தியதேனும் தலைமைபற்றிக் கங்காயாத்ரா ப்ரபாவம் எனப் பெயர்பெற்றது.

இப்புவியை மூன்று பாகுபாடுசெய்து அவற்றுக்கு வருணமும் இலிங்கமும் பாஷையும் குணமும் தெய்வமும் இதன்பதால் கூறியவற்றையும் அம்மூன்றுள் கூறுபாட்டில் திராவிடதேயத்தை யொழித்து திருவேங்கடமுதல் இமாசலம் வரையிலுமுள்ள தீர்த்தங்களையும் க்ஷேத்திரங்களையும் புகலப்புகுந்த வாற்றையும் திருவேங்கடக்ஷேத்திர மான்மியத்தையும் ரகுநாதர் சுக்கிரீவனை நட்டு வாலியை யட்டுத் தேவியாரை நாட வானரசேனையை விடுத்த க்ஷேத்திரமாகிய அம்பி என்னும் கிஷ்கிந்தாபுரியின் மாண்பையும் துங்கபத்திரை கிருஷ்ணைகளைப் பற்றியும் பாண்டுரங்க க்ஷேத்திரத்தைக்குறித்தும் நாசிகை, பஞ்சவடிகள் மாண்பையும் சுங்காப்பூர், திரியம்பகங்களைப்பற்றியும் உஜ்ஜினி என்னும் அவந்தியைப்பற்றியும் புஷ்கரக்ஷேத்திரத்தைப்பற்றியும் நருமதாநதத்தைப்பற்றியும் வான்மீகியாச்சிரமத்தைக்குறித்தும் அம்மகாவிருடியார் திவ்யசரித்திரத்தையும் சித்திரகூடவிசேஷத்தையும் பிரயாகக்ஷேத்திரமகிமையையும் கங்கைக்கும் யமுனைக்கும் வாதநேரிட்டு கங்கையுடன்பட்டதையும் ஆங்குப் பரத்துவாச மாமுனிவர் ஆச்சிரம மிருந்ததையும் ஸ்ரீகாசி ஆதியில் வைஷ்ணவ க்ஷேத்திரமாயிருந்து பின்பு சைவ க்ஷேத்திரமாகியதையும் ஸ்ரீகாசியவிறப்போர் இளைப்பாறும் பொருட்டுப் பார்வதிதேவியார் உத்தரிகத்தால் காற்றுவீச அவ்விறப்போர் காதில் சிவபெருமான் ஓதப்படுவ

அ ஸ்ரீராமதாரகப் பிரமமந்திரமே என்பதையும் அட்டாக்ஷர பஞ்சாக்ஷரங்கள் இராமநாமத்தாலே விளங்குகின்றனவென்பதையும் சிவொதனருக்குப் பிரமன் கொடுத்த வரத்தாலே சிவாதி தேவரெல்லாம் ஸ்ரீகாசியை நீங்கிப் பின்பு அதனை அடைந்தவாற்றையும் கன்னாபிராஜ்ஜியிருந்த சக்கரத்தாலே அங்காரிசெலந்த விதத்தையும் மாசனுசியில் சிவராத்திரியில் உற்சவம்செய்யும் விதத்தையும் விஸ்வேச்வரஸ்வாமிமுதலிய கடவுளர் கோயில்களும் மடங்களும், சத்திரங்களும் அரண்மனைகளும் உள்ளவாற்றையும் முத்திபெற காசிக்ஷேத்திரத்தின் இறக்கவேண்டிய விடத்தையும் கங்கையின் உற்பத்தியையும் அதன் சிறப்பையும் அதில் கழுகுதான் இன்னவென்ற எலும்பு விழுந்த கதையையும் கங்கையில் அஸ்திசேர்க்கவேண்டிய விதத்தையும் பாகீரதியை யருச்சிக்கும் விதத்தையும் அதில் மீன் முதலியவற்றைச் செய்து விடவேண்டிய விதத்தையும் திருவயோத்தி சரயு இவ்விரண்டின் உற்பத்தியையும் இரண்டிலுமுள்ள ஸ்நான தீர்த்த விசேஷங்களையும் நந்திக்கிராமத்தைக் குறித்தும் இராமாநந்தாள் ஸ்வாமிகள் சரித்திரத்தையும் நைமிசாரணியத்தின் உற்பத்தியையும் அதன் சிறப்பையும் அதில் பரமர் சூதபுராணிகரை கொண்டருளியதையும் ஸ்ரீமத் கயாக்ஷேத்திரத்தின் உற்பத்தியையும் அதன் மகிமையையும் அதில் சிராத்தாதிகள் செய்யும் விதத்தையும் ஸ்ரீமதுரை கோகுலம் பிருந்தாவனம், கோவர்த்தனம் இந்திரனின் மானத்தையும் கண்ணபிரான் திருவவதாரஞ்செய்து திருவிளையாட்டயர்ந்ததையும் அரித்துவாரத்தின் சிறப்பையும் வதரியாச்சிரமத்தின் மகிமையையும் மேலேகூறிய க்ஷேத்திரங்களுக்குச் செல்லும் மார்க்கத்தையும் அதோனி, ராய்ச்சூர், ஷோலாப்பூர், டோண்டு, அஹமத்நகர், பன்டாம்பா, புனா, லொநவ்லி, கார்லிகுகைகள், கர்ஜட், கலியாணி, கன்ஹெரிக்குகைகள், பம்பாய், மன்மாடு,



அங்கேடங்கேகோட்டை, எல்லோராகுகைகள், பாமார் முழைஞ்சுகள், அஜண்டாமுழைகள்; கண்டுவா, இண்டூர், ஆஜ்மீர், புசாவல், பர்கான்பூர், மீரகஞ்சு, மாணிக்கப்பூர், இருவி, மொகலசிரே, லக்நௌ, டைனுப்பூர், பாங்கிப்பூர், கான்பூர், ஆக்ரா, டெல்லி, மீரட், லாகூர், அட்டாக்கு, இமயமலைமேலே ஸ்ரீநகரம், பண்டிகேசுவம் என்னும் பட்டினங்களைப்பற்றியும் குகைகளைப்பற்றியும் திருவேங்கடமுதல் வதரியாச்சிரமம் வரையிலுமுள்ள இன்ன ரெயில்வே ஸ்டேஷனில் இன்னவிடத்திலிறங்கலாம் இறங்கலாகாது தங்குவதற்கு விடம்முதலியவை கிடைக்கும் அவை கிடைக்கா என்பதையும் இது கூறுகின்றது.

தொல்காப்பியம், பிரயோக விவேகம், சிலப்பதிகாரம், ஸ்ரீமத்கம்பராமாயணம், நாற்றெட்டுத் திருப்பதியந்தாதி, திராவிட வேதமாகிய நாலாயிரப்பிரபந்தம், ஆரியப்பப்புலவர் பாகவதம், நாலடி, காசிகாண்டம், திருவரங்கக்கலம்பகம், திருவரங்கத்தந்தாதி, திருவள்ளுவர், வாக்குண்டாம், இருசமயவிளக்கம், பெரியபுராணம், பாத்மோத்தரபுராணம், வில்லிபுத்தூராழ்வார் பாரதம் காஞ்சிப்புராணம், திருவள்ளுவர்மாலை, சொலிமயத்தல்என்னும் இவ்விருபது புத்தகங்களிலிருந்து சிலவாக்கியங்களும் பாட்டுக்களும், சேதுகருமம், அத்தியாத்மராமாயணம், நாரதீயபுராணம், என்னும் இம்மூன்றினின்று மொழிபெயர்க்கப்பட்ட சில அத்தியாயங்களும், பாதுகாசகஸ்ரம், வடமொழிநைஷதம், சுபாசதகம், விசுவகுணாதர்சம், சிற்பசாஸ்திரம், இவ்வைந்து புத்தகங்களின் சில சுலோகார்த்தங்களும், வேறுசில சுலோகங்களும் ஆங்காங்கு உதாகரித்துப் பதிக்கப்பட்டிருக்கின்றன.



ஸ்ரீ

ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்.

# ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமந் நிகமாந்த குரவே நம:

# ங்காயாத்ராப்ரபவம்.

## நூன்முகம்.

வகளந்த உத்தமன் ஓரடியுள் அடக்கிய இவ்வுல
மாசலமுதல் கன்னியாகுமரிகாறும் மூன்று கூறு
சய்து அவற்றுக்கு வருணமும், லிங்கமும், பாஷை
ணமும், தெய்வமும், பாராசர சிற்பநூல் பகரும்.

அப்பனிமலைமுதல் விந்தைமலைவரையிலுள்ள பூமி
க்கு பிராமணசாதி, புல்லிங்கம், நாகரபாஷை, சாத்து
விகுணம் முகுந்தன் தெய்வமாம். அப்பருப்பதமுதல்
கிருஷ்ணாநதி வரையில் உள்ள நிலனுக்கு வணிகசாதி,
நபுஞ்சகலிங்கம், வேசரபாஷை, தாமதகுணம் சிவன்
தெய்வமாம். அந்நதிமுதல் கன்னியாகுமரிவரையிலுள்
ள புவிக்கு அரசகுலம், ஸ்திரீலிங்கம், திராவிடபாஷை,
ராசதகுணம், பிரமன் தெய்வமாம்.

"சத்துவகுணத்தை புல்லிங்கமெனவும், ரசோகு
ணத்தை திரீலிங்கமெனவும் தமோகுணத்தை நபுஞ்சக
லிங்கமெனவும் இவை சாத்திரலிங்கமெனவும் கொள்
வர்" என்றார் பிரயோகவிவேகநூலார். இங்ஙுப்படலம்.
நாற்பத்துநாலாம்பாட்டுரையிற்காண்க.

தமிழ் கூறும் நிலனுக்கு கிருஷ்ணாநதியைவடவெல்
லையாக சிற்பநூலார் கூறினாரேனும் "வடவேங்கடம்
தென்குமரி; யாயிடைத்தமிழ்கூறும் நல்லுலகத்து" என்
று ஆசிரியர்தொல்காப்பியரும் "குணகடல் குமரிகுடகம்
வேங்கடம்" நெடியோன்வரை என்று பிறரும் எல்லை
கூறினமையால் அவர் மதம் பற்றி வேங்கடத்தை யெல்
லையாகக்கொண்டு மேலே கூறிய அம்மூன்று கூறுபாட்
டில் அரிசிலை நுனைபோன்ற திராவிட தேயமாகிய கடைக்
கூற்றை யொழித்து ஏனையிரண்டனையும் ஈண்டு உரை
ப்பாம்.

இதற்குப்பயன் யாதோ எனில் வடதேயம்
செல்லும் திராவிட தேயத்தோர்க்கு அவ்வட
[illegible] இயல்பையும், சிறப்பையும் அறிவித்தலு
காட்டலுமாம். யாம் இதனில் சொல்லும் மா
* தூமசகடமார்க்கமாய் யாத்திரைசெய்வோர் செ
மார்க்கமாம்.

விந்தமலைக்கு வடக்கு பார்கபத்தியமானம்
வும், அம்மலைக்குத்தெற்கு சௌரசாந்திரமான
வும், அச்சௌரசாந்திரமானத்துக்குப் பார்கபத்தியமா
னம் பன்னிரண்டாண்டு அதிகம் உடைத்தெனவும்,
சோதிடநூலார் சொல்லுவர்.

இப்பேதம் விந்தபருப்பதத்தால் உளதாயிற்று. நா
ரதபகவான் செய்த கலகத்தால் இம்மலை ஓங்கி யுலகளந்
த உத்தமனைப்போல இரவி இயங்கா வண்ணம் மேலோ
ங்கி வளர்ந்தது. அப்போது தேவரெல்லாரும் வேண்ட
அகத்தியமாமுனிவர் அச்சைலத்தைப்புவியில் அழுத்
தினர். இதனை காசிகாண்டத்திற்பரக்கக்காண்க.

* தூமசகடமெனினும், புகைவண்டியெனினும், புகைத்தேரெ
னினும், தூமசாடு எனினும், புகைச்சாடு எனினும், தூமரதமெனி
னும் ஒக்கும்.



மத்கம்பராமாயணம் ஆரணியகாண்டம்
அகத்தியப்படலம்.

யாகம்உறுபேர் உயிர்கள்தாம்உலையுறுமல்
குநெறியாதென மிதித்தடியின்ஏறி
மகெடுமாலைதவழ் விந்தைஎனும்விண்தோய்
ாகமதாகாசமுற நாகம்என நின்றுன்."

ருகுழிகேட்போனிருகாற்கேட்பின், பெருகநூ
மூபாடிலனே, முக்காற்கேட்பின், முறையறிந்து
ம்" என்றார் இலக்கணநூலார் அவர் கூறியாங்கு
மும்முறை யாத்திரை செய்து இது எழுதுவோமேல்,
றிது முறையறிந்துரைப்பாம் அதற்குப் பெற்றிலம்
இருமுறை யாத்திரைசெய்தே இஃது வரைந்தாம் யாம்
மொழியும் ஊர்களையெல்லாம் தூமசகடம்சற்றேநின்று
செல்லுமிடங்களாகக்கொள்க.

ரேனுகொண்டா-திருவேங்கடத்திற்குச் செல்வோ
ரிறங்கவேண்டிய ஸ்டேஷனிதுவென்பதும், அத்திரு
மலை யிதற்கு நான்கு மயில் தூரத்திலுள்ள தென்பது
ம், பிறவும் யாரும் அறிவார்களாகையால் அவற்றை விரி
ாது க்ஷேத்திர மகாண்மியத்தை மாத்திரையீண்டுச்
மொழிவாம்.

மபதநாதனுக்கு ஸ்தானமாகிய சேஷாத்திரியை
கேயன் வரைப்பு என்று மொழிவாரு மிக்காலத்
லருளர். சமதக்கிமகா இருடியார் திருக்குமார
த்தியமாமுனிவர் முதன்மாணக்கருமாகிய திரு
க்கினியாரென்னும் இயற்பெயர் வாய்ந்த தொல்
மாமுனிவர் செய்தருளிய தொல்காப்பியப் பாயி
திரவுரையுள் "நிலங்கடந்த நெடுமுடியண்ணலை
யுலகம் தவம் செய்து வீடுபெற்ற மலையாதலா
ல்லாரும் அறியப்படுதலானும் வேங்கடத்தை
ரக்கூறினர்" எனவும், குமரியுந்தீர்த்தமாகலி

கம்-மலை-பாதாளம்.

னெல்லையாகக்கூறினர் எனவும், இவ்விரண்டினை
லையே யோதுவார்க்கு நல்வினை யுண்டாமென்று
யிவற்றையே கூறினர்.'' எனவும், புறச்சமயத்
ய்த பஞ்சகாவியத்துள் ஒன்றாகிய சிலப்பதிகார
"நெடியோன் குன்றமும் தொடியோள் பௌ
எனவும், கூறியிருக்க முருகக்கடவுள் வேங்க
தைக் காத்துவருவதுபற்றி அவ்வேலனுக்குரிய ம
று சொல்லுவது மதவெறியால் உரையாசிரியர் உ
டுமாறுகொண்டு முறையிகந்து தொல்காப்பியப்பா
சூத்திரத்துக்கு பொருள் உரைப்போர் போலியுரையா
என்க. தைத்திரியம், பௌடிகம், தல்வகாரம், சாம
என்று பெயர் பெற்றிருந்த வேதத்தை வேதவியாச பக
வான் சில்வாழ்நாட் சிற்றறிவினோர் உணர்தற்கு நான்கு
கூறு செய்து இருக்கு, எசு, சாமம், அதர்வணம், என
று சொல்வதற்கு முன்னமே தொல்காப்பியம் செய்யப்
பட்டது. இதனை தொல்காப்பியச் சிறப்புப்பாயிரத்துள்
காண்க.

வேங்கடாத்திரிக்கு பத்து அத்தியாயத்திலும் நா
அத்தியாயத்திலும் இரண்டுதல புராணங்கள் உள்ள
அவற்றில் சுப்பிரமணிய சுவாமிவரை காவலன்
மையைக் காணலாம். புராணங்களே யன்றி இ
மாகிய ஸ்ரீமகாபாரதத்துள், வேங்கடாத்திரி
யம் கூறும். சேஷதன்மம் நாற்பத்தெட்டாம
ரண்டு மொழிபெயர்க்கப்பட்டது.

### யுதிட்டிரர் வீடுமனை வினவுகின்றார்.

தருமபுத்திரர் கங்கா புத்திரரை வணங்கி,
ஸ்ரீநிவாசப்பெருமான் மகிமையைச் சிரவணம்
விரும்புகிறேன். சமஸ்த தேவருக்கும் ஈசனு
வியாபகனுமாகிய அவ்வாதி பகவான் விருஷா
யாங்னம் அடைந்தான் அடியேனுக்கு நவி
என, பீஷ்மாசாரியார் யுதிட்டிரரைப் பார்த்து,



சனகர்க்கு மானச புத்திரரும் தேவ இருடியாரும் ஆகிய நாரதமாமுனிவர், ஸ்ரீ அச்சுத பிரானைச் சேவடி தொழும் பொருட்டு வைகுண்டம் சார்ந்தனர். அத்தனி முதற் கடவுளை ஆங்குக் காணாது மீண்டு வருகையில் பகவான் வேதவியாசரும், அகத்தியரும் மற்றைய முனிவர்களும் அவரைக்கண்டு வலம் வந்து தண்டன் சமர்ப்பித்து அவர்களில் பகவான் வியாசர் தைரியத்தோடு பகவான் யாழ்முனிவரை நோக்கிப் பெரியீர் யாவருள்ளும் தேவரீரே கிருதார்த்தராயினீர். சகத் சொரூபனும், சம்சாரத் தொடக்கறுத்து வீடளிப்போனுமாகிய முகுந்தபிரான் தேவரீரால், ஆராதிக்கப்படுகின்றான்; தியானிக்கப்படுகின்றான்; நாமசங்கீர்த்தனம் செய்யப்படுகின்றான்; தரிசிக்கப் படுகின்றான்; ஆதலின் தேவரீரை யொப்பவர் யாங்களும் யாரும் இலர். எம்பெருமானே; அவ்வறவாழியந்தணனை வழிபடு பாக்கு, அடியோங்கள் போதந்தோம் என்று கூற பகவான் யாழ்முனிவர், வியாசரே வேதங்களை நான்கு கூறாக்கிய புனிதரே, உம்மை நிகர்வார் யார் நீவிரெல்லீரையும் தரிசித்தமையால் கிருதார்த்தனாயினேன் ஆனந்த சொரூபனாகிய பகவான் ஸ்ரீவைகுண்டம் நீங்கிச் சேஷாத்திரியில் சுவாமி புஷ்கரணிக் கரையில் பெரியபிராட்டியாரோடு விளையாடி அருளுகின்றான் என்று கேட்டுத் தேவரெல்லாரும் அங்கு அம்முதற்கடவுளைத் தரிசிப்பான் சென்றனர். நானும் ஆங்கே செல்லுகின்றேன் என்றனர். பகவான் வியாசாதிமுனிவரெல்லாரும் ஆகாய வழியைச் சென்று, சுவாமி புஷ்கரணிக்கரையை அணைந்து, ஆங்கு தேவரிர் சிலர் அத்தீர்த்தில் புனலாடித் தன்னந்தனிய னாகிய பாகவானை தரிசிக்கப் போதலைக்கண்டு அப்புஷ்கரணியின் மேலைக்கரை போய் ஆங்கு நின்று தென்கரைவந்து அந்தக் கரையில் அசுரரும், இராக்கதரும் மற்றையோரும் பகவானை நமஸ்கரித்துத் துதித்தல் செய்தலைப் பார்த்துக் கிழக்க

ளைவந்து இந்திராதி தேவரும், யக்ஷ, கின்னரகந்திருவ,
சாரண, சித்தகிம்புருடரும் கேசவபிரானைத் தியானம்
செய்துகொண்டிருத்தலைக் கண்டு வடாகரை சார்ந்தனர்
அவ்விடை முனிவரும் அந்தணரும் பலதேயத்து அரச
ரும் பிறரும் ஒருங்குகூடி அவரில் சிலர் துதித்தல் செய்
கின்றார் சிலர் தொழுது தொழுது எழுகின்றார் சிலர்
ஆனந்த பாஷ்பத்தோடு ஆடுகின்றார் சிலர் கரணம் செய்
கின்றார். சிலர் நாமசங் கீர்த்தனம் செய்கின்றார். சிலர்
ஸ்ரீநிவாசப்பெருமானை மஞ்சன மாட்டுகின்றார். சிலர்
கர்ப்பூரம் சாத்துகின்றார். சிலர் சந்தனம், புஷ்பம்,
தூபம், தீபம், பூரணகும்பம், சுவர்ணகும்பம் ஆலவட்
டம் முதலியவற்றால் சாமவேதமோதி ஆராதனஞ்செய்
கின்றார் சிலர் ஏ முராரி, கேசவா, புருஷோத்தமா, என்
றஞ்சலி கரம் குவிக்கின்றார். சிலர் தியானம் செய்கின்றார்.
இவ்வண்ணம் வேங்கடாசலத்தில் அன்னவர் ஆதிபகவா
னை அருச்சனை புரியா நிற்கையில் அவ்வாலத்தில் மலர்
மாரி பெய்தது. பேரி, மிருதங்கம், படகம், நிச்சாளம்,
டிண்டிமம், சங்கம் முதலிய இயங்கள் இயம்பினமேரு
கிரியை யொத்த அநேக விமானங்கள் கூடின உட
னே பிரமன் சிவன் சந்திர சூரியர், இந்திரன் எமன்,
அக்கினி, குபேரன், வருணன், நிருதி, வாயு, வசுக்கள்,
அசுவினி அசுரர் முதலியோர் வந்து வேங்கட நாத
னைத்திருவடி தொழுதனர் அடியார்கள் எளிதில்தன்னைச்
சேவிக்கும் பொருட்டே ஸ்ரீவைகுண்ட நிகேதனன்
வேங்கடாத்திரியில் எழுந்தருளி யிராநின்றனன். சகல
தேவரும்முனிவரும் ஸ்ரீநிவாசப்பெருமானைச் சேவிக்கும்
பொருட்டு அம்மலையில் எப்போதும் வதியாநின்றனர்.
மக்கட்பிறப்பினராயோர் தம்முயிர் ஈறு பெறுமுன்னர்
அப்பெருமானை ஒருகாலாயினும் சேவித்தல் வேண்டும்
தருமபுத்திரரே, நீர்சென்று ஸ்ரீநிவாசப்பெருமானைத்
திருவடி தாழ்வீராக. அப்பரந்தாமன் தன்னைத் தரிசிப்



போருக்கு இகத்தில் போகமும், பரத்தில் மோக்கமும்
வரையாது கொடுக்கின்றான். திருவேங்கடத்தைத் தரி
சிக்க ஒருவன் புறப்பட்டவுடனே அவன் சகலபாபமும்
ரோகமும் நீங்குகின்றான். அவன் குலப்பிதிரரும் முத்தி
பெறுகின்றார் வேங்கடாத்திரி மகான்மியமாகிய இதனை
படிப்போரும் கேட்போரும் பாபம்நீங்கி வீடுபெறுவார்
என்றருளினார்.

நாற்பத்தெட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

---

ஸ்ரீமந்நாதமுனிகள் குலதிலகராகிய திருவரங்கப்
பெருமாளரையர்திருவேங்கடம்சென்று ஸ்ரீநிவாசப்பெரு
மானைத் தரிசித்து பண்ணிசை தாளத்தோடு சேவிக்கும்
போது வேங்கடநாதன் திருவுளமுவந்து சிரக்கம்பனம்
செய்து வந்து பதின்மர்பாடிய பெருமானேயென்று பாடு
ம்போது கம்பனம் செய்யாமலிருக்க அரையர் அதுக
ண்டு இத்துணையும் திருவுளமுவந்து சிரக்கம்பனம்
செய்த நீ இப்போது யாது குற்றங்கண்டு அதுசெய்யா
து ஒய்ந்தனை யென்று தாளத்தால் திருமுடியில் மோதப்
புக, பரம கருணாநிதி அப்பேற்றைச் சோழியன் கெடுத்
தான், யான் யென்செய்கோ என்று பதற்றைச் சினம்
போக்கி அருளினன் என்னுங்காதை சான்றோர் செவிக்
கு இன்னும்நல் விருந்தாயிராநின்றது.

சோழியன் கெடுத்தலாவது கவித்தலத்துக் கணித்
தாகிய திருமண்டங் குடியில் பிராமண குலத்தில் திருவ
வதாரம் செய்தருளியவனமாலிகாம்சராகிய தொண்டர
டிப்பொடி ஆழ்வார் மங்களாசாசனம் செய்யாமையால்
திருவேங்கட முடையான் ஒன்பதின்மர் பாடிய பெருமா
னேயாவன். பகவத்சின்னமிசபூதர்களாகிய ஆழ்வார்கள்
பதின்மரும் பாடிய பெருமான் சீரங்கநாத னொருவனே
யாவன், ஆதலால் தன்னை பதின்மர்பாடிய பெருமானே

யென்று அரையர் பாடியதை ஸ்ரீநிவாசப்பெருமான் திருவுளம் பற்றுது சிரக்கம்பனம் செய்யானாயினன்.

திருவேங்கடம் வைணவ சிமார்த்த மதஸ்தர்களுக்கு முக்கியஸ்தலமல்லதும் மாத்துவர்களுக்கு * முக்கிய ஸ்தலங்களாகிய எட்டில் ஒன்றாயது.

(நூற்றெட்டுத்திருப்பதியந்தாதி)

"தானேசரணமுமாய்த்தானேபலமுமாய்த்
தானேகுறைமுடிக்குந்தன்மையான்—தேனேய்
திருவேங்கடந்தொழுதேந்தீயவிதிக்குள்
மருவேங்கடந்தனெமிவ்வாழ்வு".

ஆழ்வார்களருளிச்செய்த பதிகங்களை யெல்லாம் ப[illegible]பின் விரியுமென்று கௌஸ்துபாம்சராகிய குலசேகராழ்வார் அருளிச்செய்த ஒன்றனை மாத்திரைபதிக்காம்.

கொச்சகம்.

தன்யாசிராகம்-திரிபுடைதாளம்.

ஊனேறுசெல்வத்துடற்பிறவியான்வேண்டேன்
ஆனேறேழ்வென்றானடிமைத்திறமல்லால்
கூனேறுசங்கமிடத்தான்றன்வேங்கடத்துக்
கோனேரிவாழுங்குருகாய்ப்பிறப்பேனே. (க)

ஆனாதசெல்வத்தரம்பையர்கள்தற்சூழ
வானாளுஞ்செல்வமும்மண்ணரசும்யான்வேண்டேன்
தேனார்பூஞ்சோலைத்திருவேங்கடச்சுனையில்
மீனாய்ப்பிறக்கும்விதியுடையேனாவேனே. (௨)

பின்னிட்டசடையானும்பிரமனுமிந்திரனும்
துன்னிட்டுப்புகலரியவைகுந்தநீள்வாசல்
மின்வட்டச்சுடராழிவேங்கடக்கோன்றானுமிழும்
பொன்வட்டிற்பிடித்துடனேபுகப்பெறுவேனாவேனே. (௩)





ஒண்பவளவேலையுலவுதண்பாற்கடலுள்
கண்டுயிலும்மாயோன்கழலிணைகள்காண்பதற்குப்
பண்பகரும்வண்டினங்கள்பண்பாடும்வேங்கடத்துச்
செண்பகமாய்நிற்குந்திருவுடையேனாவேனே. (௪)

கம்பமதயானைக்கழுத்தகத்தின்மேலிருந்து
இன்பமருஞ்செல்வமுமிவ்வரசும்யான்வேண்டேன்
எம்பெருமானீசனெழில்வேங்கடமலைமேல்
தம்பமாய்நிற்குந்தவமுடையேனாவேனே. (௫)

மின்னனையநுண்ணிடையாருருப்பசியும்மேனகையும்
அன்னவர்தம்பாடலொடுமாடலவையாதரியேன்
தென்னவெனவண்டினங்கள்பண்பாடும்வேங்கடத்துள்
அன்னனையபொற்குவடாமருந்தவத்தனாவேனே. (௬)

வானாளும்மாமதிபோல்வெண்குடைக்கீழ்மன்னவர்தம்
கோனாகிவீற்றிருந்துகொண்டாடுஞ்செல்வறியேன்
தேனார்பூஞ்சோலைத் திருவேங்கடமலைமேல்
கானாறாய்ப்பாயுங் கருத்துடையேனாவேனே. (௭)

பிறையேறுசடையானும் பிரமனுமிந்திரனும்
முறையாயபெருவேள்விக் குறைமுடிப்பான்மறையானான்
வெறியார்தண்சோலைத் திருவேங்கடமலைமேல்
நெறியாய்க்கிடக்கும் நிலையுடையேனாவேனே. (௮)

செடியாயவல்வினைகள் தீர்க்குந்திருமாலே
நெடியானேவேங்கடவா நின்கோயில்வாசல்
அடியாரும்வானவரு மரம்பையருங்கிடந்தியங்கும்
படியாய்க்கிடந்துன் பவளவாய்காண்பேனே. (௯)

உம்பருலகாண்டொரு குடைக்கீழுருப்பசிதன்
அம்பொற்கலையல்குற் பெற்றாலுமாதரியேன்
செம்பவளவாயான் திருவேங்கடமென்னும்
எம்பெருமான்பொன்மலைமே லேதேனுமாவேனே. (௧௦)

மன்னியதண்சாரல் வடவேங்கடத்தான்றன்
பொன்னியலுஞ்சேவடிகள் காண்பான்புரிந்திறைஞ்சிக்
கொன்னவிலுங்கூர்வேற் குலசேகரன்சொன்ன
பன்னியநூற்றமிழ்வல்லார் பாங்காயபத்தர்களே. (௧௧)

குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம்.

ரேணுகொண்டாவுக்கு ௭௨-மயில் தூரத்தில் கடப்பையும், அதற்கு ௬௬-மயில் தூரத்தில் குத்தியும் அதற்கு ௧௮-மயில் தூரத்தில் குண்டுக்கல்லும் இருக்கின்றன. கிஷ்கிந்தைக்குச் செல்வோர் குண்டுகல்லில் வேறுவண்டியேறி பல்லாரிக்குப்போய் ஆங்கிருந்து சதரன் மராட்டாரயில்வேமார்க்கத்தில் ஓப்பட்டு ஸ்டேஷனில் இறங்கவேண்டும், அவ்வோப்பட்டுக்கு ௮-மயில் தூரத்தில் ஆம்பி என்னும் கிட்கிந்தாபுரி இராநின்றது.

கிஷ்கிந்தையாவது ரகுநாதன் ஆஞ்சநேயரைக்கண்டருளி அவர் மூலமாய் சுக்ரீவனை நட்பாளனாக்கி வாலியைக்கொன்று தேவியாரை நாட வானரச்சேனையை விடுத்த விடமாம், கிஷ்கிந்தை திருப்பதிகளில் ஒன்று அன்றியும் தாரகப்பரமன் சின்னாள் எழுந்தருளியிருந்த காரணத்தால் யாத்திரைசெய்யத்தகுந்த க்ஷேத்திரமேயாகும், வடதேயத்தோர் யாவரும் யாத்திரைசெய்வர், சுக்ரீபாதி வானரசிரேட்டர்கள் முற்காலத்தில் வசித்தனர் என்பதற்குச்சான்றாக விசித்திரரூபமுடைய பலவானரங்கள் இருக்கின்றன. கிட்கிந்தை துங்கபத்திரை நதிக்கரைமேலே சோலைகளாலும் ரிசியமூகம் முதலிய பருப்பதங்களாலும் சூழப்பட்டு கண்ணுக்கினிதாய் விளங்கும். யாத்திரை செய்வோர்க்கு வதிய இடமுதலியயாவும் கிடைக்கும் கிட்கிந்தையில் மாசிமாதத்தில் உத்ஸவம் பிரபலமாய் நடக்கின்றது. ஆங்கு சீதாநாயகன் நரசிம்மன் முதலியோர் சந்நிதிகளிருக்கின்றன. அக்கிட்கிந்தைக்குச்சமீபத்தில் பம்பாசரசு இருக்கின்றது. கவந்தன் அவனுடலைநீத்து தேவசரீரம்பெற்றுச்சீதாநாயகனுக்கு வாக்குசகாயம் செய்யும்போது பம்பாசரசில் நெய்க்கட்டிபோன்றமீன்கள் உள்ளன எனவும், அவற்றை இளையபெருமாளால் பாகம்செய்து உண்க எனவும், அச்சரசுக்கு மேலைப்பக்கத்தில் சவரி ஆச்சிரமம் இருக்கின்றதெனவும், நெடுநாளாய்த்தேவரீர் வரவை அச்சவரி அன்னையார்



எதிர்நோக்கி இருக்கின்றமையால் அவர்பாற் செல்க எனவும், ஆங்குமதங்க மகா இருடியாரது மாணாக்கர்கள் பகவதாராதனார்த்தமாக மலர்கொய்துவந்தபோது அவர்களது திருமேனிகளினின்று பொடித்த வேரெல்லாம் பலவிதப் பூக்களாய்ப் பூத்திருக்கின்றனவெனவும், இன்னும் சில அற்புதங்கள் ஆங்கண் உளவெனவும் அவற்றையெல்லாம் கடாக்ஷித்தருள்க எனவும் சொல்லிப்போயான். தாசரதி அவ்வாறே அவ்வாச்சிரமத்துக்கு எழுந்தருளி சவரித்தாயார் சுவைபார்த்து வைத்திருந்த கனிவர்க்கங்களை சுவீகரித்து அத்தாயை சாத்துவிக ஆகாரத்தை மிதமாயுண்கின்றாயா என்று அளவளாவியருளினன் பின்பு சவரியார் ரகுநாதனை துதித்து தேவரீரைச்சேவித்து பிறவாப்பேறு பெற்றேன். அடியேன் ஆசாரியரது பாதமூலம் அடைகின்றேன். அருள்கவெனப் பிரார்த்தித்து, அக்கினிப் பிரவேசம் செய்து உடலை நீத்துத் தேவர் எதிர்கொள்ள வேகினர்.

சவரி அம்மையார் சுவைபார்த்துவைத்திருந்த கனி என்றமையால் அவர் நாவால் சுவைபார்த்து வைத்திருந்த கனிஎன்று சம்பிரதாயமாய் மொழிவர் என ஸ்ரீமத் கோவிந்தராசர் வியாக்கியானத்தில் சொல்லுவர்.

வைஷ்ணவர்களெல்லாம் சரமசுலோகத்தில் ஆசாரியன் திருவடியை அடைந்ததொன்று எழுதுவது சவரியார் என்று ஆசாரியர் பாதமூலம் அடைகின்றேன் என்று ஓதிய ஆற்றானும் பிறவாற்றானும் என்க. குண்டுக்கல்லினின்று ௩௪-மயில் தூரத்தில் அதோனியிருக்கின்றது.

அதோனி:—ஸ்டேஷனுக்குச் சமீபத்தில் இருக்கின்றது. ஸ்டேஷனில் மாட்டுவண்டியும் சிறிது முயற்சியால் தங்குவதற்கு ஊரில் இடமும் கிடைக்கும். இவ்வூரில் காலங்களில் மழைபெய்யாதாயின் உண்ணீர் அகப்படுவது அரிது. பல்லாரிஜில்லாவுக்குள் இதுவரையோக்கி

யமானவிடமாயும் பஞ்சுமுதலியபலவிதவியாபாரம்நடக்கும் இடமாயும், தாலூகா, முனிசிப், முனிசிபல் முதலியகச்சேரிகளும் வயித்தியசாலையும் பெரியகடைகளும்சோற்றுக்கடையுமுள்ளதாயும் இருக்கின்றது, பட்டினத்துக்கு இரண்டு மயில் தூரத்தில் பார்ாங்கல்லில் ராமகுல்னியென்று ஒரு பாய்கால் எக்காலத்தும் நீர் பெருகிக்கொண்டிருக்கின்றது அது உண்ணீர் கொடுத்து அதோனியை ஆதரிக்கின்றது, இவ்வூருக்குப்பக்கத்தில் உள்ள குறுங்காடு சூழ்ந்த சிறுகுன்றுகளில் சிறுபுலிகள் உள்ளன அவைகள் இரவில் ஊருள் வந்து இரைதேடி உலாவும் அதுகண்டு ஊரார் ஆயுதம் கொண்டு அவற்றை யோட்டுவர் சென்னையிலிருந்து ஒரே பிரயாணமாய் வருவோர் தங்கிச்செல்வதற்கு அதோனி தகுதியான இடமாம்.

துங்கபத்திரை:—இது புண்ணியநதிகளில் ஒன்று ஸ்டேஷனுக்கு அரைமயில் தூரத்தில் சிறு பார்ப்பனச்சேரியும் தர்மசாலையும் இருக்கின்றன, இங்கு இறங்க விரும்புவோர் அரிசிமுதலிய யாவும் கையில் கொண்டுபோகவேண்டும் வழியெல்லாம் கருங்கற்சல்லிகள் பரவி இருத்தலால் கால்வழியிலேலார் நடந்து நதிக்கரைசேர விதி அயர்வார் வாகனம் கிடைக்காது, கங்காஸ்நாநம் துங்காபானம் என்ப, துங்கபத்திரைநீரையுண்ணின் தாம் பெற்ற குழவியைத்தழுவுதலை யொக்கும்போலும், நீருக்குச்சில இலக்கணம் கூறி இவ்விதப்புனலை உண்ணல் குழவியைத் தழுவுதலை யொக்குமென்று விக்கிரமாதித்தியன் சுவச்சம் சத்ஜன சித்தவத் என்னும் சுலோகம் செய்தான் இந்நதியின் வடகரைமுதல் ஐதராபாத் நிஜாமிராச்சியத்தைச்சேர்ந்தது.

ராயச்சூர்:—சென்னைமுதல் இதுவரையில் தூமசகடமார்க்கம்மதராஸ் ரெயில்வேகம்பெனியாரது இது முதல் ஜப்பல்பூர்வரையில் கிரேட்இந்தியன்பெனின்சுலா ரெயில்வே கம்பெனியாரது மூன்றாவதுவகுப்பில்செல்வோர் இவ்விடத்தில் மரப்பாலமேறி வேறுவண்டி ஏற வேண்டும். முதல் இரண்டுவகுப்பில் செல்வோர்க்கு அது இல்லை சுவேதர்கள் இவணில் உண்டியுண்பராகலால் புகைத்தேர் அரைமுகூர்த்தநாழிகை நின்று செல்லும், இந்த ஸ்டேஷனில் கம்பெனியார் சுதேசிகளுக்கும் சோறு அமைத்துக்கொடுக்கின்றனராம், ஸ்தலசுத்திபாத்திரசுத்தி சோறு அமைப்போன் குலம் ஆசாரம் இவை கிடக்க, அரைமுகூர்த்தகாலத்தில் புழுமலக்கூட்டைக் கழுவி ஊற்றை யழுக்குகளைப்போக்கி ஒலித்த வாடை புனைந்து புண்டரம்பொறித்து ஒரு தெய்வநாமத்தைச் சொல்லி கும்பிட்டு உண்டுசெல்வோன் சுதேசரில் யாவனோ அறியேம்.

கிருஷ்ணா:—ராயச்சூருக்கு சகூ-மயில் தூரத்திலிருக்கின்ற இந்நதி மகாபிலேச்சுரத்தினின்று தோன்றிப் புண்ணியநதிகளிலொன்றாய்ச்சமுத்திரம் சாருகின்றது. பீமாநதியும் துங்கபத்திரையும் இதனோடு சங்கமமாகின்றன. நதியின்பெயரே ஸ்டேஷன்பெயராயிருக்கின்றது. ஸ்டேஷனுக்கு கால்மயில் தூரத்தில் நதியும் அதன் கரைமேலே பெரிய தருமசாலையும் கடையுமிருக்கின்றன.

வாடி:—ராயச்சூரிலிருந்து அறுபத்தேழாம் மயிலில் உள்ள இது ஐதராபாத்துக்குப் போவோர் வேறு வண்டி ஏறுமிடமாயும், தங்குவதற்கு தர்மசாலையுள்ளதாயும் இருக்கின்றது. பத்திராசலத்துக்குச் செல்வோர்க்கும் இதுவே மார்க்கம் ஸ்ரீமத் ராமதாச ஸ்வாமிகள் காதையால் பத்திராசல க்ஷேத்திர மான்மியத்தை யாவரும் அறிவார்களாகையாலும், அதற்குச் செல்லும் மார்க்கமெமக்கு தெளிவாய் தெரியாமையாலும் அவற்றைப் புகன்றிலெம்.

ஷோலாப்பூர்:—வாடியிலிருந்து தொண்ணூற்று மூன்றாம்மயிலிலிருக்கிற இந்தஸ்டேஷனுக்கு மத்தியில்

ஷஹாபாத், குல்பர்கா, என்ற இரண்டு பெரிய ஸ்டேஷன்களும் மிலேச்சர் வாசஸ்தலங்களாகவும், தருமசாலைகள் இல்லாதன வாகவும் இருக்கின்றன ஷோளாப்பூரில் தர்மசாலையும் அருக்கராலிழைத்த கோட்டையும், நகரத்துக்கு மூன்று மயில் தூரத்தில் எழுமயில் சுற்றளவுள்ள ஏரியு மிருக்கின்றன. நான்கு பெரிய உத்தியோகஸ்தர்களு மிருக்கின்றனர் வண்டிகள் கிடைக்கும்.

மொஹல்:—ஷோளாப்பூருக்குஇருபத்தொருமயில் தூரத்தில் இருக்கின்ற அவ்வூரிலும். அதற்கு பத்துமயில்தூரத்தில் இருக்கிற அங்காரிலும் அதற்குஎட்டுமயில் தூரத்தி லிருக்கின்ற மாதாவிலும் தர்மசாலைக ளிருக்கின்றன. மேலே சொன்ன மொஹலில் வண்டி கிடைக்கும் மாதிரவில் இரண்டு பெரிய உத்தியோகஸ்த ரிருக்கின்றனர்.

பார்ஷிரோட்:—மாதாவுக்கு பதினாறுமயில் தூரத்தி லிருக்கின்ற இந்த ஸ்டேஷனுக்கு பார்ஷிஎன்றவூர் இருபது மயில் தூரத்தில் உள்ளது. இந்த ஸ்டேஷனுக்கு முப்பது மயில் தூரத்தில் உள்ள பாண்டு ரங்கக்ஷேத்திரத்துக்குச் செல்வோர் இங்குஇறங்கிப் போகவேண்டும். வாகனம் கிடைக்கும் பாண்டுரங்கம் பீமாநதிக்கரைமேலுள்ளது. ஆங்குச் செல்வோர் யாவரும் ஜே. ஜே. விட்டல் என்று நாமசங்கீர்த்தனம் செய்து கண்ணபிரானை ஆலிங்கனம் செய்வர். இப்பாண்டு ரங்கம் நாதப்பிரமம் எனவும் ஜகந்நாதம் அன்னபிரமம் எனவும் ஸ்ரீமக்காயாக்ஷேத்திரம் பிண்டப்பிரமம் என்வும் சொல்லுப.

கெம்:—பார்ஷிரோட்டுக்கு கக-மயில் தூரத்திலுள்ள இந்த கெம்மிலும், இதற்கு கo-மயில் தூரத்திலுள்ள ஜூவரிலும், இதற்கு கஅ-மயில் தூரத்திலுள்ள பொம்மல்வாரியிலும், இதற்கு கஉ-மயில் தூரத்திலுள்ள டிக்ஸாலிலும் தர்மசாலைகள் இருக்கின்றன. பொம்மல்வாரி



க்கும் டிக்ஸாலுக்கும் ஒரு மயில்தூரத்தில் பீமாநதி ஓடுகின்றது.

டோண்டு:—இவ்வூருக்கணித்தில் தர்மசாலையுள்ளது
பீமாநதி ஒருமயில்தூரத்தில் ஓடுகின்றது, இந்த ஸ்டே
ஷனிலிருந்து டோண்டு, மன்மார் ஆமசகட மார்க்
மாய்ச்செல்வாரும் உளர், முதல் வகுப்புக்கு எ-ரூபா
யும், இரண்டாம் வகுப்புக்கு கூஉ-ரூபாயும், மூன்
ரும் வகுப்புக்கு உ-ரூபாயும் ஆகிய பொருள் லாபத்தை
நோக்கி இக்குறுக்குமார்க்கம் செல்வோர் பஞ்சவடியில்
சக்கிரவர்த்தித்திருமகனார் சேவையும் கோதாவிரி ஸ்நா
நத்தையும் ஒருஙகிழப்பர் அன்றியும் புனப்பட்டினத்
தையும், கார்லி, கன்னெரிக்குகைகளையும் * மும்பபுரி
யையும் புகைத்தேர் பருவதங்களில் நுழைந்து செல்
லுதலையும், காணார் இந்த ஸ்டேஷனிலிறங்கி இம்மார்க்க
மாய்ச்செல்வோர் தங்குவதற்கு ருக - மயில் தூரத்தில்
ஆமத்துநகரும் அதற்கு ருச-மயில்தூரத்தில் பண்டாம்
பாவும் இருக்கின்றன, அவற்றில் ஆமத்துநகர் தீர்த்த
வசதியும், தர்மசாலைகளும், பலவிதகரிகாய்களும், கீரை
களும், கனிவர்க்கங்களும் உள்ள இடமாயும் மதில்குழ்
ந்த பட்டினமாயும் ஸ்டேஷனுக்கு மூன்றுமயில் தூரத்
திலுள்ளதாயு மிருக்கின்றது, ஸ்டேஷனுக்குச் சமீபத்
தில் நதி ஒன்று ஓடுகின்றது குதிரை பூட்டிய டாங்கா
வண்டிகள் கிடைக்கும். பண்டாம்பாஸ்டேஷனுக்கு உ-
மயில் தூரத்தில் பழைய மதிலால் சூழப்பட்டு கோதா
விரிநதிக்கரைமேலே இருக்கின்றது தங்குவதற்கு அந்
நதிக்கரையில் கட்டிடங்க ளிருக்கின்றன இரவில் தங்க
லாகாது சகல சாமான்களும் கிடைக்கும்.

பதாஸ்:—டோண்டுக்கு எ-மயில் தூரத்திலுள்ள இவ்வூரில் நாகேச்வரசுவாமிகோயிலும் தர்மசாலையும்

---

* மும்பபுரி-பம்பாய்.

இருக்கின்றன, பெரிய உத்தியோகஸ்தர் ஒருவர் இருக்கின்றனர்;

கிட்கெயான்-தருமசாலை உள்ளது.

புணா:—இம்மாநகர்வாசயோக்கியமாய் அனேககாலத்தும் சீதோஷ்ணம் மிதமாகவேயிருக்கும் ஜனத்தொகுதி ருடுஅ. கார்ப்பருவத்தில் மும்பாபுரி ராஜாங்கத்தார் இதில் வதிவர் முள்ளாவென்னும் மோட்டாவென்னும் இரண்டுநதிகள் இப்பட்டணத்தருகில் கூடுகின்றன, இந்நகர்க்குத்தென்மேற்கில் ஒருமலையின்மேலே பார்ப்பதிகோயில் இருக்கின்றது அது கண்ணுக்கினிதாய் விளங்கும் மகாபிலேச்சுரம் என்னும் க்ஷேத்திரம் புணாவிலிருந்து எழுகாத தூரத்தில் இருக்கின்றது, பேசுவைகளால் இப்புணா சிக்கப்பெயர்பெற்று வித்துவான்களுக்குத் தலைச்சாலையாயிருந்தது பரிபூண்ட வண்டிகளும் தங்குவதற்கு மனைகளும் கிடைக்கும், இந்நகரில் வண்டியோட்டியெல்லாம் வெகுயோக்கியர் ரூபாய் ஒன்று சத்தம் பேசி, வாங்கும்போது பேசினது ரூபாய் இரண்டென்பார்.

தால்கயான்:—புணாவுக்கு உக-மயில் தூரத்திலுள்ள இவ்வூரில் தருமசாலையிருக்கின்றது இந்திராணிநதியும் பீமாநதியும் சமீபத்தில் கிடக்கின்றன.

கார்க்காலா:—தால்கயானுக்கு கூ-மயில் தூரத்திலிருக்கின்ற இவ்வூர்ப்பக்கத்தில் இந்திராணிநதியோடுகின்றது தருமசாலையிருக்கின்றது.

கார்லி:—இரண்டுமயில் தூரத்தில் ஊரும் மூன்றுமயில் தூரத்தில் கார்லிகுகைகளும் இருக்கின்றன. பிலங்கள் அவ்வூரிலிருப்பதால் அப்பெயர்த்தாயின, அம்முழஞ்சுகள் பௌத்தர்களால் வெகுகாலத்திற்கு முன்னமே மலைகளைக்குடைந்து செய்யப்பட்டன அவற்றுள் ஒன்று கஉசு-அடி நீளமும் சரு-அடி அகலமும் உடையது அதனுள் விசித்திரத்தொழில் அமைந்தனவாய்



சங-கம்பங்கள் நிற்கின்றன இப்போது அம்முழை யுள்ளிருக்கின்ற இலிங்கத்தின்மேலே ஒரு மார்க்கத்தால் சூரியவொளிபடுகின்றது குகையென்றமையால் சிங்க முதலிய மிருகங்கள் புகுந்திருக்குமோவென்று அஞ்சவேண்டுவதில்லையாயினும், அஞ்சுமாறுசெய் சிங்கங்கள் அதனுள் இருக்கின்றன மஞ்சரையும் மாதரையும்போல உருவங்கள் இருக்கின்றன, கந்தரம் உள்ளே பரிசுத்தமாகயிருக்கின்றது, அதிகம் விரித்துச்சொல்வதால் என்னை, கார்லீகுகைகளை யொப்பான குகைகள் யாண்டுமில. வாகனமும் இடமும் முயற்சியால் பெறவேண்டும்.

லோனாவி:—புகைச்சாட்டுக்கு வேண்டிய கருவிகளெல்லாம் இவ்வூரில் செய்யப்படுகின்றன. அதுமூலமாய் அனேக ஊணர்கள் தொழில் பூண்டிருக்கின்றனர். சுவேதர்களில் கார்லிக்குகைகளைப்பார்க்க விரும்புவோர் இவ்வூரிலிறங்கி கண்டாலாவி லிருந்து வாகனம் வரவழைத்துக்கொண்டு செல்வர். இந்திராணி நதிக்கு இவ்வூர் உற்பத்தி ஸ்தானமாயிருக்கின்றது. மேலே சொன்னகார்லிக்கும் இவ்வூருக்கும் மத்தியில் லோஹார் கர் என்னும் மலைக்கோட்டை யிருக்கின்றது பேசுவைகள் பூனாவை யாண்டகாலை அதனைச் சிறைச்சாலையாய் உபயோகபடுத்தினார்களாம். புகைத்தேரில்செல்லும்போது அதனைக்காணலாம்.

கண்டலா:—தருமசாலையிருக்கின்றது. இவ்வூருக்கு ஐந்துமயில் தூரத்தில் கார்லிக்குகைள் இருக்கின்றன. நரவாகனமும், குதிரையும், எருது பூண்டவண்டியும் கிடைக்கும். அவற்றை யூர்ந்துபோய் அக்குகைகளைப் பார்த்து வரலாம். இவ்வூராரொருவனை கூலிகொடுத்து உடன்படுத்திக்கொள்ளின் கூடவந்து பிலங்களைக் காட்டுவான். கார்காலத்தில் இக்கண்டாலா கண்ணுக்கினி

* குகை, பிலம், முழஞ்சு, முழை, கந்தரம், எல்லாம் ஒருபொருட்கிளவி.

தாய்த்தோன்றும். கார்விகந்தரகளைப்பார்க்க விரும்பும் சுதேசிகள் இந்த ஸ்டேஷனி லிறங்கவேண்டும்.

கர்ஜட்டு:—ஸ்டேஷனும் தருமசாலையும் மலைச்சாரலில் இருக்கின்றன. இப்பிரதேசமெல்லாம் கண்ணுக்கு விழாவாக இருக்கும் கண்டாலாவுக்கும் இவ்வூருக்கும் இடையில் பதினாறு மயில்தூரம் உளது, இப்பதினாறு மயில் தூரத்திலும் மலைகள் நெருங்கி அருவியாறுகளிருக்கின்றன. புகைச்சாடு செல்ல மலைகள் தொளைக்கபட்டும் ஆறுகள் பாலங்கட்டபட்டு மிருக்கின்றனகார்காலத்தில் இவ்வழிச்செல்லின் வெள்ளமிகுதியால்பார்க்க அச்சமும் வியப்புமுண்டாகும். பாங்கரெல்லாம் ஆறுபோல அருவிகள் பேரொலியோடு ஓடும். புகைத்தேர் குகைகளில் செல்லும்போது அமாவாசை இரவில் கண்புதைத்தாலும் அமையாத இருளைக் காணலாம். பதினாறு மயில் தூரத்திலுமுள்ள காடுகொன்று மலை தொளைத்து வழியுண்டாக்க எட்டு ஆண்டு சென்றதாம். காடுகொல்லாமலும் மலை தொளைக்காமலும் அதிகப்பொருளைச் செலவிடாமலும், உத்தமமாகிய மருதநிலத்தில் செந்நெல்விளையும் வயலைச்செறிது குப்பை மண்ணாற் றூர்த்து எருது வண்டிகளைப்போல சிறுவண்டிகள் செய்து வரையறுத்த ஜனத்தொகுதியினும் அதிகம் அடைத்து மூட்டைப்பூச்சியைப் போக்காது பிடுங்கச்செய்து பணம்பறிக்கும் தென்தேயப்புகைத்தேராரை இகழாதாரும் இப்புகைத்தேராரைப் புகழாதாரும் யாரும் இலர்.

கலியாணி:—கர்ஜட்டுக்கு ௨௧ மயில் தூரத்தில் உள்ள இவ்வூரில் தருமசாலை இருக்கின்றது. மும்பைபுரிக்குச் செல்லாதுநேரே செல்வோர், இறங்கி வேறு வண்டி ஏறவேண்டும் மும்பபுரிக்குச் செல்லும் மார்க்கத்தை மொழிவாம்.

டாணா:—தருமசாலையிருக்கின்றது இதற்கு ௬ மயில் தூரத்தில் கன்னெரிக்குகைக ளிருக்கின்றன. அவற்றில்



இரண்டு மயில்தூரம் எருது வண்டியிலும், நான்கு மயில் தூரம் நடந்தும் செல்லவேண்டும். ஆங்கு நெருங்கிய வனமத்தியில் மலையில் சிறியனவாயும், பெரியனவாயும், நூறுகுகைகளிருக்கின்றன. அவற்றில் ஒன்று எண்பத்தெட்டடி நீளமும் முப்பத்தெட்டடி அகலமும் உள்ளது. அதனுள் சிங்க உருவத்தின்மேல் செய்யப்பட்ட தாமரைப் பூவின் மேலே பௌத்ததெய்வமிருக்கின்றது பௌத்தவதாரம்பகவதவதாரங்களி லொன்று.

ஸ்ரீ ஆரியப்பப்புலவர்பாகவதம்.

மாயவன் அமிசாவதாரமுரைத்த அத்தியாயம்.

புனிதன்கீகடதேயத்திற்புத்தனென் றுதித்தும்
றனிசெய்வெங்கலியிறுதியிற்றுரகமாயெழுந்தும்
பனிசெய்தெண்டிரைப்பாரினிற்பகைஞரைத்தணித்தே
இனிதுநல்லறநிலையினிறுத்தவனியால்.

அக்கந்தரத்தில்சுரங்கம்போலகீழேஒருபிலம் முப்பத்தினான்குகம்பங்கள் நிறுத்திச்செய்யப்பட்டிருக்கின்றது. மற்றச்சிறியமுழைகளின் முன்பெல்லாம்தாழ்வாரமிருக்கின்றது. அம்முழைஞ்சுகளைக்கடந்து அப்புறம்மலைமேலே செல்லின் ஆங்குச் சிலகுகைக ளிருக்கின்றன. அக்கந்தரங்களின் வாயில்களுக்கு நேரே மலையினுச்சியி லிருந்து சிறிது புனல் ஒழுகுகின்றது அக்குகைகளைக்கடந்து சிறிது தூரம் வடாது திசை செல்லின் ஆண்டு அநேககுகைகளிருக்கின்றன அவற்றின் அருகில் சபைமுழையொன்று தொண்ணூற்றாறரையடி நீளமும் நாற்பத்திரண்டேகால் அடி அகலமும் உடையதாயிருக்கின்றது, அதனுப்பண் கொலுவீற்றிருக்கும் பீடமொன்றிருக்கின்றது, அம்முழஞ்சுக்கு முன்னர் எட்டுக்கம்பத்தோடு தாழ்வாரமிருக்கின்றது, இதற்கு முன்னர் இயற்கையாயுண்டாகிய ஒரு பெரிய குகையும் அதற்கு அப்புறம் முப்பது குகைகளும் பெரியோர்களால் வதியப்பட்டனவா யிருக்

கின்றன, மலையின் ஓர் புறத்திலுள்ள சிகரத்தின்மேலே நிஜால் சால்கட்டியென்ற தீவையும் அதன் பாங்கருள்ள மும்பைபுரியையும், அதன் கண்ணுள்ள துறைமுகத்தையும் பாசீன் என்ற பட்டினத்தையும் காணலாம், பௌத்தர்கள் மேலே கூறிய கார்லியிலின்று நம்மதத்தர்களால் அரத்தப்பட்டபின்பு இக்குகைகளை நிர்மாணம் செய்தார்போலும் என்பர் நான்குமயில் தூரம் நடக்க அஞ்சுவோர் மும்பைபுரிசென்று அங்கிருந்து பரோடாவுக்குச்செல்லும் புகைச்சாட்டிலேறி இருபத்துமூன்று மயில் தூரத்திலிருக்கும் பார்வாலிஸ்டேஷனி லிறங்கி அதற்கு நான்குமயில் தூரத்திலிருக்கின்ற இக்கன்னெரிக்குகைகளை பரியூர்ந்துவந்துபார்க்கலாம், அந்த ஸ்டேஷனில் குதிரைகள் கிடைக்கும்.

**பாரல்:**—இவ்வூரினின்று புகைரதம் புறப்பட்டு சூரத்து, பரோச்சு, பரோடா, ஆமதாபாத்து, ஆஜ்மீர் சென்று, ஆங்கு ஹோல்கார் இராச்சிய புகைத்தேரைச் சந்தித்து ஜய்ப்பூர், பண்டுக்கிமார்க்கமாய் டில்லிக்குப் போகின்றது.

**மும்பபுரி:**—கல்லியாணிக்குமுப்பத்துநான்குமயில் தூரத்திலுள்ள இம்மாநகர்க்கு ரெயில்வே ஸ்டேஷன்கள் மயிலுக்கு ஒவ்வொன்றாக பத்துக்கு மேலிருக்கின்றன, எத்தேயத்தோரும் இப்புரியைக்குறித்து கேள்வியுற்றிருப்பார் ஆகலின் ஈண்டு விரித்துப்புகன்றிலம். பலவிதஜாதியார் பலதொழில் பூண்டு வசிக்கின்றனர். அவரது அணிகளும் ஆடைகளும் பாண்டகளும் தோற்றங்களும் வெவ்வேறாயிருக்கின்றன, அந்திப்பொழுதில் ஆவணத்தெருவில் எள் விதைப்பினும் விழா, கவிச்சக்கரவர்த்தியார் இக்கடைத்தெருவைக்கண்டே இப்பாடல் அருளிச்செய்தார் போலும்.



கிஷ்கிந்தாகாண்டம் பம்பைப்படலம்.

“கள்ளவிழ்வள்ளைமுதலகண்ணகன்
தளமலர்ப்புள்ளொடுதயங்கவின்னதோர்
கிளவியென்றறிவருங்கிளர்ச்சித்தாதலால்
வளநகர்க்கூலமேபோலுமாலம்பறு.”

மனைகளெல்லாம் ஏழடுக்குகளுடையனவாய் பெரியனவாய் பளிங்குத்தொழில் அமைந்தனவா யிருக்கின்றன இந்நகரம் நேத்திராநந்தமாய தாயினும் வாசயோக்கிய மாயதன்று. இம்மாப்புரி சிலர்க்கு கந்திருவநகரம் போல காணப்படுமாயினும், புண்ணியநதியில்லாமையாலும் புண்ணிய க்ஷேத்திரமல்லாமையாலும் ஆசாரவிவகாரபிராயச்சித்த காண்டங்களில் முதற்காண்டம் பயிலாமையாலும் சான்றோர்க்கு நரகலோகம் போலவே தோன்றும் இவ்வூர் பார்ப்பாரெல்லாம் பாத்திரத்தை வாயில் வைத்து நீர் பருகுவர் சூத்திரர்போல தாலத்திலும் உண்பர் திராவிடதேயச்சூத்திரசாதியாருள்வேளாளவகுப்பாரிற் பலர், தாமுண்ணுங் கலத்தில் தாமுண்பரேயன்றி பிறர்கலத்திலுண்ணார் தமது கலத்தையும்பிறர்க்குக் கொடார் இப்பட்டணத்தில் அந்தணருண்ணும் சோற்றுக்கடைகளில் உண்கலங்களே விளக்கி அடுக்கப்பட்டிருக்கின்றன சூத்திரனை வேளாளனென்பதும் வேளாளனைச் சூத்திரனென்பதும் பண்டை வழக்கு. திராவிடதேயத்தோரும் மும்பபுரியில் குடியேறியிருக்கின்றனர். பார்சிசாதியார் மிகுதியாயுள்ளர். அவருள்விலைமாதரும் யாசகருமிலர் மற்றைய வருணத்தாரில் பொருட்பெண்டிர் அதிகமுளர். அப்பொதுமகளிர் ஊணர் மிலேச்சர் முதலிய எச்சாதியாரையும் வரையின்றிச் சேர்வர்.

நாலடியார்.

“நார்த்தொடுத்தீர்க்கிலென்னன்றாய்ந்தடக்கிலென்
பார்த்துழிப்பெய்யிலென்பல்லோர்பழிக்கிலென்
தோற்பையுணின்றுதொழிலறச்செய்தூட்டும்
கூத்தன்புறப்பட்டக்கால்.”

இப்பாட்டை பார்சிசாதியார் நன்கு கடைப்பிடித்திருக்கின்றனர் போலும். அவரில் மரித்தோரை தகனமும் புதைப்பதும் செய்யாது சைலன்டவர் என்று பெயரிட்டு வைத்திருக்கின்ற மலையி னுச்சியில் குளம்போல பெருங்குழிதொட்டு அதன்மேலே போட்டிருக்கின்ற இருப்புப்பந்தரிற்பெய்வர். பருந்துங் கழுகும் அப்பிணத்தைப் பிடுங்கித்தின்றபின்பு என்பு அக்குழியினுள்ளே விழும். இவ்வண்ணம் செய்ய அவர்கருத்து யாதோவெனின் பறவை முதலியவற்றின் உடலை தமக்கு இரையாக்குதலின், மரித்தபின்பாயினும் தமதுடலை அவற்றுக்கு உணவாக்க வேண்டுமென்பதாம். இவர் கருணை இருந்தபடி யென்னே, இது எந்த அறநூலின் துணிபோ.

நாலடியார்.

துக்கத்துட் டூங்கித் துறவின்கட் சேர்கலா
மக்கட் பிணத்த சுடுகாடு - தொக்க
விலங்கிற்கும் புள்ளிற்கும் காடே புலன்கெட்ட
புல்லறிவாளர் வயிறு.

பார்சிசாதியார் பறவைகளுக்குத் தமது வயிற்றைச் சுடுகாடாக்கி தமக்கு அவற்றின் வயிற்றைக் காடாக்குகின்றார்போலும், இனி கல்லியாணியிலிருந்து செல்லவேண்டிய மார்க்கத்தைப்புகல்வாம்:-

**ஷஹாப்பூர்:**—தருமசாலை ஊரின் கண்ணது, வண்டி கிடைக்கும், பெரிய உத்தியோகஸ்தர் ஒருவரிருக்கின்றார்.

**கேஸரா:**—தருமசாலை சுவேதர்களுக்கும் சுதேசிகளுக்கும் பொதுவாய் ஒன்று இருக்கின்றது, இவ்விடத்தில் புகைவண்டி மேட்டின்மேலேறிச் செல்லுகின்றது, பின்புறத்திலும் இயந்திரவண்டியொன்று பூட்டியேற்றுவர்; பார்க்க வியப்புண்டாகும்.

கோடி.
ப்பில்கயான். } இரண்டிலும் தருமசாலைகள் உள்ளன;



**நாசிக்ரோட்:**—கல்லியாணிக்கு ௮௩-மயில் தூரத்திலிருக்கின்ற இந்த ஸ்டேஷனுக்கு வடமேற்கில் ௬-மயில் தூரத்தில் நாசிகைப்பட்டினமிருக்கின்றது, இந்நாடு வளமிகுதி யுடைத்து எப்பருவத்திலும் வெயிலும் பனியும் குறைவு மிகுதியின்றி மிதமாகயிருத்தலால் வடதேயத்துப் புண்ணியக்ஷேத்திரங்களுள் வாசயோக்கியமாயது இந்நாசிகையேயாம், எருது பூட்டுவதுபோலக் கழுத்தில் நுகம் வைத்து குதிரை பூட்டிய டாங்கா வண்டிகளும் தங்க இடங்களும்கிடைக்கும், நாட்டுக்கோட்டையார் சத்திரமுமிருக்கின்றது, நாசிகா வாசிகளாகிய பார்ப்பார் தலைச்சாத்தும் குப்பாயமு முடையராய்ப் புகைச்சாடுபோதரும்போதெல்லாம் ஸ்டேஷனில் காத்திருந்து யாத்திரைகாரரை யழைத்துச்செல்வர் அவ்வேதியர் வேடத்தாலும் ஒழுக்கத்தாலும் எத்திறத்தராயினும் குற்றமும் பேராசையுமற்றவர் ஒருகாசு கொடுப்பினும் அதனைப்பெற்று மகிழ்வர் வடதேயத்துள் மேலைப்பிரதேசத்துக்கு நாசிகைமாநகரை ஸ்ரீகாசியென்றும் கோதாவிரிமாநதியை கங்கையாறு என்றும் சொல்லுப, கோதாவிரிக்கு விருத்தகங்கையென்றும் பெயர் நாசிகைப்பட்டினத்துக்குள் யாத்ரார்த்தமாய்ச் செல்வோரில் பயிராகி சந்நியாசி யல்லாதார் தலை ஒன்றுக்கு அணா ௪-சுங்கம் கொடுத்தல்வேண்டும், ஆறிலொன்றை யன்றி சுங்கமும் அரசர்க்கு உரித்தாயினும் மக்களுக்குச்சுங்கம் வாங்குவது "வேலொடுநின்றா னிடுவென் றதுபோலுங், கோலொடுநின்றானிரவு" என்பதை ஒக்கும் எவ்வித அநிதவரியாலும் பொருள் பறிக்கக் குசாக்கிரபுத்தியுடைய நமது சென்னை ராசாங்கத்தார் மனத்தில் இது தோன்றாதிருப்பது ஏழைசனங்களின் தவமகிமையாலென்க, ஸ்ரீரங்கம் ஏகாதசி தில்லை திருவாதிரை முதலிய உற்சவங்களில் இவ்வரியை விதித்தால் அளவிறந்த பொருள் கைகூடுமே அந்தோ வியர்த்தமாய்விட்டிருக்கின்றனரே,

## ஸ்ரீமத்கம்பராமாயணம்.

### ஆரணியகாண்டம் சூர்ப்பநகைப்படலம்.

புவியினுக்கணியாய்ஆன்ற பொருள்தந்து புலத்திற்றாகி,
அவியகத்துறைகள்தாங்கி ஐந்திணைநெறியளாவி
சவியுறத்தெளிந்து தண்ணென்றொழுக்கமுந்தழுவிச்சான்றோர்
கவியெனக்கிடந்தகோதாவிரியினைவீரர்கண்டார்.

சான்றோர் கவியெனக்கிடந்த கோதாவிரியினை யென்றார். அவ் யாற்றுக்கு அவர் பாடலே யொப்பாகும். நதியின் தென்கரையில் நாசிகைமாநகரமும், வடகரையில் பஞ்சவடியுமிருக்கின்றன. கோதாவிரிக்குப் பாலமில்லாமையால் நாசிகையிலிருந்து பஞ்சவடிக்குச் செல்வோர் கட்டப்பட்டிருக்கிற அணையின்மேலே நடந்தாயினும், கூலிக்குச்சுமந்துவிடுவோர் முதுகிலுட்கார்ந்தாயினும் போகவேண்டும். சுமப்போர் நதிக்கரையில் காத்திருப்பர்.

### சூர்ப்பநகைப்படலம்.

அணையதோர்தன்மையால்அவ் அருவிநீர்ஆற்றின்பாங்கர்
பனிதருதெய்வப்பஞ்ச வடியெனும்பருவச்சோலை
தனியிடமதனைநண்ணித் தம்பியால்சமைக்கப்பட்ட
இனியபூஞ்சாலையெய்தி யிருந்தனன்இராமனிப்பால்.

அறங்காப்பான் ஸ்ரீ அயோத்திமாநகரில் திருவவதாரம் செய்தருளிய தாசரதியார் பஞ்சவடியில் சிலமாதங்கள் எழுந்தருளியிருந்தனர். ஜானகியார் ரகுநாதனை நோக்கி அரக்கரிடுக்கண் தீர்த்துக் காப்பேனென்று அருந்தவர்க்கு அபயமருளினீர் தேவரீர் திருவடிக்கு அபராதம் செய்யாத அரக்கரை யாங்ஙனம் கொல்வீரென்று வினவ, என்னுயிரை யாயினும் நின்னையாயினும், இலக்குமணனை யாயினும் விடுத்து வாய்மை நிறைவேற்றுவேனென்று கூறி யருளியவரதே அந்நாதர் பிராட்டியாரைப் பிரிந்ததுமன்றி காரன் முதலியோரைக் கொன்றதும் அவ்வூரிலென்க.



பஞ்சவடி இப்போது சிறு ஊராக இருக்கின்றது ஐந்து ஆலவிருக்கமுள்ள காரணத்தால் அவ்வூர் அப்பெயர்த்தாயிற்று. அவ்விருக்க மத்தியில் சுரங்கமொன்றிருக்கின்றது. காகுத்தர் கரதூஷணாதிகளோடு போர்புரிந்த காலை, அப்பிலத்துள் சீதாபிராட்டியாரை எழுந்தருளி இருக்க வைத்து, இளையபெருமாளை காக்கச்செய்தனரென்றும் காசுகொடுத்து உள்ளே புகுந்து பார்க்கலாமென்றும், அக்குகையைக் காத்திருப்போர் சொல்லுவர். இக்குகை ஊருக்குப் புறம்புள்ளது ஊர் மத்தியில் அழகிய முன் மண்டபத்தோடு சக்கரவர்த்தித் திருமகனார் சந்நிதி புனஸீமந்தனால் கட்டப்பட்டு பாஞ்சராத்திரவைகானசவிதிப்படி யல்லாமல் ஒருவிதமாய் நித்யநைமித்தியங்களும் நடந்து வருகின்றன. அக்கோயிலுள் சீதாலட்சுமண பரதசத்துருக்கன அநுமத் சமேதராய் தாருரூபராய் ரகுபுங்கவர் எழுந்தருளியிருக்கின்றனர்.

பஞ்சவடியில் சிருங்கேரி சங்கராசாரியார் முதலியோருக்கு மடங்களிருக்கின்றன. ராகவபிரான் அகத்தியாச்சிரமத்தில் சில மாதங்கள் எழுந்தருளியிருந்தபின்னர் தனக்கோர் உறைவிடம் தெரிந்து சொல்க என்று வேண்ட ஒரு முகூர்த்தகாலம் மோனமாயிருந்து அம்மாமுனிவரால் பஞ்சவடி சொல்லப்பட்டது.

### ஆரணியகாண்டம்.

### அகத்தியப்படலம்.

ஓங்கும்மரனோங்கிமலையோங்கிமணலோங்கி
பூங்குலைகுலாவுகுளிர்சோலைபுடைவிம்மி
தாங்குதகையாறுதவஞ்சூழல்சேர்குன்றின்
பாங்குளதாழ்வரையுள்பஞ்சவடிமஞ்ச

கன்னியிளவாழைகனிஈவகதிர்வாலின்
செந்நெலுளதேனொழுகுபோதுமுளதெய்வ
பொன்னியெனலாயபுனலாறுமுளபோதா
அன்னமுளபொன்னிவளொடன்பின்விளையாட.

எங்கினியவ்வயிலிருந்தநறையினென்றுன
மேகநிறவண்ணனும்வணங்கிவிடைகொண்டான்
பாகனையசொல்லியொடுதம்பியரிலிற்பின
போசமுனிசிறைதொடாக்கடிதபோனான்.

பாட்டினுரைத்தவாறே கோதாவிரி காவிரியைப் போல எக்காலத்தும் மாடவு முண்ணவுங் குற்றமற்ற நீருள்ளது காங்காதி யேனையவோ வெனில், பருவவேற்றுமையால் வேறுபடும் விருத்த கங்கை யிருகரையிலும் சுககாலயங்களும், காட்டுவென்னும் ஸ்நாநகட்டங்களும், ராமதீர்த்தமுதலிய தீர்த்தங்களுமுள்ளன. யாத்திரைசெய்து கங்கை கொணர்வோர் நாசிகை வந்து தீர்த்தங்களை யாராதித்து கொணர்ந்தகங்கை கடத்துள் விருத்தகங்கை நீரைச்சிறிது சேர்த்துப் பதனஞ்செய்யவேண்டுமென்ப. நாசிகையில் பார்ப்பார் பதினாயிரம்பேர்களும் மற்றையார் இருபத்தையாயிரம் பேர்களுமுளர்.

இளைய பெருமாள் சூர்ப்பநகையினது கொடி மூக்கை யரிந்தவிடமாகலானும், சிவன்தானே அதனை அரிந்து கொண்ட தலமாகலானும், இந்நகர்க்கு நாசிகையென்னும பெயர் உண்டாயிற்று. சங்கரன் பிரமகத்தியால் பிடிக்கபட்ட காலை இடபம் அப்பெருமானைப்பிரிந்து நாசிகையில் வந்திருந்தபோது உழுவதற்கு இவ்வெருது நன்றென்று தன்னைப் பிடிக்கவந்த பிராமணரை எல்லாம் கொன்று, அதனால் வந்த பிரமகத்தியை ராமதீர்த்தத்தில் நீராடிப் பஞ்சவடியில் நம்அரும்பெறலடிகளைத் தரிசித்துப் போக்கியிற்க, அது காலை உருத்திரன் ஆங்கு வர, விடைவணங்கி முன்னிகழ்ந்ததை யுரைக்கக் கபாலி அத்தீர்த்தத்திற்புனலாடிப் பஞ்சவடியிற்பரமனை ஆயிரம் செண்பகப் பூக்கொண்டுச் சிலநாள் அருச்சித்து வர, ஒருநாள் ஒருபூக்குறைய நாசியை அறுத்து அருச்சிக்க சீதநாயகன் பெருமகிழ்வு பூத்து எதிர் தோன்றி அத்திதோஷத்தைப் போக்கியருளினான். இக்கதை வர



கூர் ஸ்ரீகோல மகாபாகவதர் சொல்லினர் எப்புராணத்திலுள்ளதோ அறியேம்.

இது விஷ்ணு கண் ஒன்றைப் பிடுங்கி சிவனையருச்சித்து, அநரதியாய், வேதோபநிஷதங்களாலும் இதிகாசபுராணங்களாலும் துதிக்கப்பட்டதாய்ப், படைக்கலவரசாய்த், தன்னை ஆராதித்த சிவனுக்குச் சூலப்படை தந்ததாய், விளங்கும் சக்கரத்தாழ்வானைப் பெற்றானென்று கூறும் கதையை முற்றும் ஒத்துளது. சிவன் சக்கரத்தை ஆராதித்துச் சூலம்பெற்றதை வடமொழிஎழுத்துப்பிரதி ஸ்ரீமகாபாரதம் கன்ன பருவத்திற் காண்க.

நாசிகைக்கு எட்டுமயில் தூரத்திலிருக்கின்ற கங்காபூரில் கோதாவிரி நதி, மலையினின்று விழுகின்ற தோற்றம் நேத்திரானந்தமாயிருக்கும். ஆங்கு ஒன்பது கோயில்களிருக்கின்றன. இரண்டு ஜாம நேரத்திற்போய் பார்த்து வரலாம். நாசிகைக்கு ஈசான திக்கில் எட்டுமயில் தூரத்திலிருக்கின்ற சுமார் வீணுகுகைகளை நல்லமார்க்கமில்லாமையால் போய் பார்ப்பாரிலர். நாசிகையிலிருந்து இருபது மயில்தூரத்தில் கோதாவிரி உற்பத்தி ஸ்தானமாகிய திரியம்பகமிருக்கின்றது. அதற்கும் மார்க்கம் நன்றாய் இலது யாத்திரைசெய்வோர் பிணியுடலை அலைக்காமல் இரண்டு மூன்று தினம் வதிந்து சுகப்படுத்திச் செல்வதற்கு இந்நாசிகை தகுந்த இடமாம்.

**நீபட்.** தருமசாலை யுளது இரண்டுமயில் தூரத்திலுள்ள பட்டினத்தில் ஒருபெரிய உத்தியோகஸ்தர் இருக்கின்றனர்.

**லாசல்காம்.** தருமசாலை இருக்கின்றது எருதுவண்டி கிடைக்கும்.

**மண்மாடு.** தங்க இடம் உளது வாகனம் கிடைக்காது இதற்கு நான்கு மயில் தூரத்தில் அங்கேடங்கேன்றுகோட்டையும் அதன் அருகில் தூய நீர்ச்சுனையு மிருக்

கின்றன. அக்கோட்டைக்குச் செல்லும் மார்க்கத்தில் கோயில்களும் குகைகளு மிருக்கின்றன. டோண்டி லிறங்கிச் செல்வோர் இவ்வூர்வந்து இம்மார்க்க வண்டி ஏறுவர் இவ்வூர் நாசிகைக்கு ௪௫ மயில் தூரத்திலுள்ளது.

**நாண்டுகயான்.** மன்மாடுவுக்கு ௧௬-மயில் தூரத்திலுள்ள இவ்வூரினின்று ௪௪-மயில் தூரத்தில் எல்லோரா குகைகள், ௩௦-இருக்கின்றன. அவற்றுள் ஒன்றுக்கு கைலாயமென்று பெயர். ஆங்குப்போக எருது வண்டி கிடைக்கும். நாண்டுகயானில் பெரிய உத்தியோகஸ்தர் ஒருவர் இருக்கின்றார்.

**சாலிஸ்கயான்.** சிரா என்னும் தர்மசாலை இருக்கின்றது. அவ்வூரினின்று எழுபது மயில் தூரத்தில் பாமார் குகைகளும் முப்பத்தெட்டுமயில் தூரத்தில் பிம்பால் நீர்பிலங்களும், ஆங்குச் சில கோயில்களு மிருக்கின்றன.

**பாசோரா.** சிரா இருக்கின்றது. இவ்வூரினின்று முப்பத்திரண்டு மயில் தூரத்தில் அஜண்டாமுழைகளிருக்கின்றன. அவற்றுக்கு முப்பது மயில்தூரத்திலுள்ள பர்தர்பூர் என்னும் கிராமந்தான் அப்பிலங்களுக்கு அணித்தாயது.

**மசாவாட்.** இவ்வூரினின்று நாற்பது மயில் தூரத்திருக்கின்ற ஒருகோயிலுள் பிலத்தினின்று வெந்நீரகப் புனல் எப்போதும் பெருகாநின்றது.

**ஜால்கயான்.** சிரோயும் ஒருமயில் தூரத்தில் பட்டினமும் அதன்மேல் பக்கத்தில் கிருஷ்ணாநதியுமுள்ளன.

**பாட்டிலி.** சிரோயும் ஒன்றரைமயில் தூரத்தில் நசிராபாத் என்னும்பட்டணமும் அதற்குச்சமீபத்தில் வடமேற்கில் அனேககுகைகளும் கோயில்களும் உள்ளன.

**பசாவால்.** மன்மாடுவுக்கு ௧௧௪-மயில் தூரத்திலிருக்கின்ற இந்நகரத்தினின்று நாகப்பூருக்கு புகைத்



தேர் புறப்படுகின்றது இரண்டு பெரிய உத்தியோகஸ்தரிருப்பதோடு இருநூறு சுவேதர்கள் குடியேறி யிருக்கின்றனர். இதற்கு இரண்டுமயில் தூரத்தில் அரைமயில் அகலமுள்ளதாய் தப்தி நதம் பெருகாநின்றது. கீட்டிசை தோன்றி மேற்றிசை செல்லும் ஆற்றுக்கு நதமென்று பெயர். சிரோயுள்ளது.

**நாவா.** சிரோயுளது.

**பர்காம்பூர்.** பசாவாலுக்கு ௩௪-மயில் தூரத்திலிருக்கின்ற இந்தஸ்டேஷனுக்குப் பக்கத்தில் சிரோயும் அதன் பக்கத்தில் சிறுகால் வாய்களும், நடைவாவிகளும் பலவிருக்கங்கள் நிறைந்ததோட்டமும், மூன்று மயில் தூரத்தில் பட்டினமும், ஒன்றரை மயில்பரப்புள்ளகோட்டையும், தப்திநதமும் இருக்கின்றன.

அப்பட்டணத்துக் கருகிலுள்ள மலையருவி நீருகால் வாயாகிப் புவியின் கீழே கட்டப்பட்டிருக்கும் சுரங்கத்தூடு நகர்க்கு உபயோகமாய்ச் செல்லாநின்றது எருதுவண்டி கிடைக்கும்.

**சாண்டினி.** சிரோயிருக்கின்றது. ஆறுமயில்தூரத்தில் அசிர்கர் கோட்டையும் அதன்மேலே அசுவத்தாமா கோயிலு மிருக்கின்றன.

**கண்டுவா.** பெரிய சிரோயிருக்கின்றது வாகனம் கிடைக்கும் பிரயாணிகள் தங்கிச்சிரம பரிகாரம் செய்து போக இது தகுந்த இடம் ஒல்கார் ராச்சிய புகைத்தேர் இதனின்றுபுறப்பட்டு ௮௫-மயில் தூரத்திலிருக்கிற இண்டூர் அதற்கு ௨௫-மயில் தூரத்திலிருக்கிற பட்டிபாத், ரத்லாம், மந்தசூரி, நீமச், நசீராபாத் மேலே சென்று, அஜ்மீரில் ராஜபுட்டாணு புகைவண்டியைச் சந்திக்கின்றது. அஜ்மீருக்கு சமீபத்தில் புஷ்கர க்ஷேத்திரமிருக்கின்றது. அவ்விடனில் முகுந்த பிரான் தீர்த்தரூபியா யிருக்கின்றான் என்ப. உஜினிக்குச் செல்வோர் மேலே கூறிய பட்டிபாத்தில் இறங்கி வேறுவண்டி

ஏறவேண்டும். பட்டிபாத்துக்கும் உஜ்ஜினிக்கும் மத்தியில் பதினாறு மயில் தூரம் உள்ளது அவந்தியாகிய உஜ்ஜினி முத்தி தரும் நகர் ஏழிலொன்று. இது பெரிதாய பட்டினம். கிருஷ்ணபரமாத்துமன் இந்நகர வாசியாகிய சாந்திபனமகருஷியிடத்தில் வேதாத்தியயனம் செய்தருளினன். கண்ணபிரான் சந்நிதியும் சங்கராலயமு மிருக்கின்றன. அவந்திக்கும் அச்சம்புவுக்கும் கிருதயுகம்தவிர மூன்றுயுகங்களுக்கும் மூன்றுபெயர்கள் உள்ளன.

காசிகாண்டம்.

சத்தபுரியின்சிறப்புரைத்த அத்தியாயம்.

ஆதியகமொழிந் தவருமூன் றுசத்தமா காளமவந்திமற்றை
யோதுவனஞ்சிறந்த தவந்தி முசுக்கினியெனுநகரிலுடன் றுகூறறைக்
சாதிபேதமா கேசுரர்தாரகேசுரர்மாகாளரென்னச்
சோதி[illegible]தருவினிழலினிதுறையுமாமனடிதொழுதுபோனான்.

[illegible]ரடா:—பெரியசிரோயிருக்கின்றது, இரண்டு மயிலுக்கப்புறம் பட்டினமிருக்கின்றமையால் இங்கு இறங்குவோர் [illegible]த்தவ்யமும் கையில் கொண்டுபோதல் வேண்டும்.

சியோனி:—வெள்ளைக்காரருக்கும் சுதேசிகளுக்கும் பொதுவில் சிரோ ஒன்றிருக்கின்றது எருதுவண்டி கிடைக்கும்.

இட்டார்சி:—சிரோயிருக்கின்றது குதிரைவண்டியும் எருதுவண்டியும் கிடைக்கும்.

பாகிரா:—ஒருமயில்தூரத்தில் பாராராதாவா என்ற நதியும் அதன் கரையில் ஒருகோட்டையும் இருக்கின்றன. அந்நதியின்கீழே கட்டப்பட்டிருக்கும் சுரங்கத்துடு நடந்து ஆற்றைக்கடக்கவேண்டும் அப்பக்கமெல்லாம் பார்க்க களிப்பும் அச்சமுமுண்டாகும்.

ஷொகாபூர்:—சிரோ, மேலேகூறியாங்கு இருவர்க்கும் பொதுவிலிருக்கின்றது. அதன்பக்கத்தில் தோட்டமும் சிறிதுதூரத்தில் ஒருநதியும் கிராமமும் இருக்கின்



றன. உணவுக்கு வேண்டிய எல்லாம் சிரோயிலும் கிடைக்கும் சுவேதர்சமுகம் நோவிடின் தங்கத்தகுந்ததாம்.

பிப்பேரியா:—பச்சுமாரி யென்ற மலை அநேக குகைகளுடையதாய், அருவிச்சுனைகள் உடையதாய், முதுவேனிற்காலத்தில் சுவேதர்கள்வசிப்பதாய்க் கண்ணுக்கு இனியதாய் இதற்கு ௯௨-மயில் தூரத்திலிருக்கின்றது, ஆங்குச்செல்வோர் பல்லக்கு, குதிரைவண்டி, எருதுவண்டிகளை அப்பச்சுமாரியிலிருந்து வரவழைத்துக் கொள்வர்.

பாங்கெரி:—சிரோயுள்[illegible]து.

காதர்வாரா:—சக்கர்[illegible] சமீபத்தில் ஓடுகின்றது இருவர்க்கும் பொதுவாய் சி[illegible]ரோஒன்றிருக்கின்றது.

காரீலீ:—சிரோயிருக்[illegible]றது.

நரசிங்கப்பூர்:—சி[illegible] தூரத்தில் இரு[illegible]கின்ற ஊரில் சிரோயும் [illegible]யிலும் [illegible]க்கின்றன அக்கோயிலிலெ [illegible] நரசிங்[illegible]ஜீ என்று மூர்த்தருளியிருக்கும் [illegible] திருநாமம்.

மீராகஞ்சு:—இதற்கு இரண்டு மயில் தூரத்தில் நருமதாநதம் ஒருமலையினின்றுவிழுகின்றது அது கண்ணுக்கு விழாவாயிருக்கும் ஜப்பல்பூரிலிருந்து வண்டியின்மேலே வரலாம் இம்மீராகஞ்சி லிறங்குவோர் ஆங்கிருந்து வாகனம் வரவழைத்துக்கொள்வர்.

ஜப்பல்பூர்:—இதுமுதல் கல்கத்தா, டெல்லிவரையிலும் உள்ள மார்க்கத்துக்கு ஈஸ்ட் இந்தியன் ரயில்வேயென்றுபெயர். ஸ்டேஷனுக்கு அதிசமீபத்தில் சிரோ ஒன்றிருக்கின்றது பட்டினத்திலும் தங்க இடங்கிடைக்கும் குதிரைவண்டிகளிருக்கின்றன இது காலாட்படைகளிருக்கும் இடங்களில் ஒன்று புண்ணியநதி ஏழிலொன்றாகிய நருமதாநதம் இந்நகர்க்கு ௬-மயில் தூரத்திலிருக்கின்றது, கார்த்தவீரியார்ச்சுனன் இந்நதத்தில் மங்கை

ரோடு நீர்விளையாட்டாடியகாலை, இலங்கேசன் அவனைக் கட்டினன்டான். இக்காதை உத்திர ஸ்ரீராமாயணத்தில் உள்ளது. தயரதசக்கரவர்த்தியார்க்குத் திருத்தந்தையாகிய அஜமகாராஜன் போஜபூபனுக்குத் திருக்குமாரத்தியாகிய இந்துமதியைத் திருமணம்புரியப் போஜநாடுசேர்வான் அந்நன்மனத்தையக்கடக்கும் காலை மதங்கமகருஷி இட்ட சாபத்தால் யானையுருப்பெற்றிருந்த பிரயம்வதன் என்ற கந்தருவன் அந்நகத்தினின்று எழுந்து அரசனால் அவ்வுரு நீங்கிச்சென்றான் இது ரகுவம்சத்தில் சொல்லப்பட்டது. நர்மதா தீரத்தில் ஸ்நான சட்டத்துக்கருகில் இருக்கின்ற சிறியவூரில் உபாத்தியாயம் செய்யும் பார்ப்பார் பலருளர்.

மாணிக்கப்பூர்:—இதற்கு உ௬-மயில் தூரத்திலுள்ள சித்திரகூடம் [illegible]வார் இதில் இறங்குவர். தங்க இடமும் ஆங்குச்செல்ல ஒற்றைமாட்டு வண்டி [illegible]. மாணிக்கப்பூ[illegible] சித்ரகூடத்துக்கு பதினைந்து நாழிகையில் போகலாம். மேடு பள்ள மணலின்றி மார்க்கம் செவ்விதாயிருக்கும், மாணிக்கப்பூருக்கும் சித்திரகூடத்துக்கும் மத்தியில் வான்மீகிநதியும் அப்பகவான் ஆச்சிரமமும் சிறுஊருமிருக்கின்றன. வான்மீகி ஆச்சிரமமென்னும் அப்புண்ணியபெயரே ஊர்ப்பெயராயிருக்கின்றது, அவ்வூருக்கு சிறிது தூரத்தில் நதிக்கரையில் ஒரு சிறுகுன்றின்மேலே பகவான் வான்மீகி ஆச்சிரமம் சிலபாகவதர்களால் சூழப்பட்டிருக்கின்றது ஆங்கு போய் விக்கிரகரூபியாயிருக்கிற மகா இருடியாரைச் சேவிக்கலாம்.

வடநூலார் யாப்பிலக்கணமோர்ந்தது இவராலென்க. இவர் ஸ்ரீமத்ராமாயணம் செய்தருளிய முன்னர் உலகில் விருத்தபேதங்களே இல்லை. விருத்தங் கற்பித்தவ

* நெடுங்கழுத்தல் ஒட்டகம்.



ரே வான்மீகிபகவானாகலால் அவர் செய்தருளிய ஸ்ரீமத்ராமாயணம் ஆதிகாவியமெனப்பட்டது. அது பற்றிக் கவிச்சக்கரவர்த்தியாரும் "வாங்கரும்" என்று எடுத்துப் பாடினார்.

நாட்டுப்படலம்.

வாங்கரும்பாதனான்கும் வகுத்தவான்மீகியென்பான்
தீங்கவிசெவிகளாரத் தேவரும்பருகச்செய்தான்
ஆங்கவன்புகழ்ந்தநாட்டையன்புறுகாதன்மாந்தி
மூங்கையான்பேசலுற்று லென்னயானெமாழியலுற்றேன்.

பகவான் வான்மீகி மகாமுனிவர் உச்சிப்பொழுதில் கடன் கழிப்பான் தமசாநதிதீரம் சாரும்போது, கிரௌஞ்சமிதுனத்தில் காமமோகிதமாயிருந்த சேவலை ஒரு மாரிஷன் அம்பால் கொல்லக்கண்டு, முன்னர் தாமும் அச்செய்கையரேனும் பின்னர் அறத்தொடு தொடர்ந்த திருமனத்தராகிய அம்முனீந்திரர் அவ்வேடனைச் சபித்தார். அச்சாபமொழி அக்[illegible] இல்லாத சுலோகரூபமாய்வெளிப்பட்டது மாநிஷாத என்னும் அது அவ்வேடனுக்கும், இராவணனுக்கும் சாப மொழிப்பொருளையும் இலக்குமிகாந்தனுக்கு வாழ்த்துப் பொருளையுமுடைத்து. முனிவர் தாம் அறியாமலே தமது திருவாயினின்று தோன்றிய சுலோகம் கானயோக்கியமாய வாறு என்னை என்று தம்முள்ளே வியந்து உகந்து ஆச்சிரமம் வந்து யோகம் செய்தருளினர். அக்கணமே பிரமன் அவருக்கு எதிர்தோன்றி பகவத் கடாக்ஷத்தாலே மனக்கண்ணாலே பார்த்து நீர் ஸ்ரீமத் ராமாயணம் செய்யுமென்று பணித்தருள, அவரும் அவ்விதிகாச சிரேட்டத்தைச்செய்தருளினர். அப்பகவான் அது செய்தபின்னர் வடநூலார் யாவரும் கோடியுமல்ல பலநூல்களைச் செய்தனர்.

சரசுவதிதேவி உன்னைப்போல சத்தியலோகத்தினின்றும் பூலோகத்திற்கு வரவேண்டுமென்றெண்ணி

முதலில் எவரைத் தனக்கு இடமாகக் கொண்டாரோ;
அந்த வால்மீகி முனிவர் திவ்யமான வாக்கை எனக்குக்
கொடுக்கக்கடவர் என்று, எம்மையாளுடைய கண்டா
வதார சர்வதந்திர சுதந்திர சுவாமிகள் பாதுகாசகஸ்ர
த்தில் சாதித்தருளினர். இவ்வாறே மகாகவிகளெல்லாம்
தாம்செய்யுங் காப்பியத்துள் ஆதிகாவியஞ் செய்தருளி
ய வால்மீகி பகவானைத்தவிராது வாழ்த்துவர்.

வடநூல் வல்லாருள் இராமசரிதையைப் புகலாத
வர் ஒருவருளரோ இலரோ வென்று ஆசங்கிக்கு மாறு
மகாவித்வான்களெல்லாம் இராமசரிதையைப் பாடினர்.
அவரையல்லாமல் புராணங்கள் பாடும் என்றபடி சிவ
னாரும் ராமசரிதையைப் பாடினார். அது

## திருவரங்கக்கலம்பகம்.

"வில்லையானதிலையென்று நீக்கமுத்தம் வெய்தந்தமுத்தாகில்
வெற்பாவியப்பால், இலையார் புனலப்பள்ளி நாராயணன்பால்எந்தா
யரங்கரவி[illegible]ளாயிர், தலையாலிரக்கும் பணிப்பாய்
சுமக்கும் தன்குலையவர் தாமரைத்தாள் விளக்கும், அலையாறு
குடும் புராணங்கள் பாடும் ஆடும்பொழிப்பூசியரங்கமே."

வான்மீகம்போலத் தலையெடுக்கவில்லை பகவான்
வான்மீகரோடு மாறுகொண்டு போதாயன மாமுனிவ
ரும், அவர் மாணாக்கரும் அறுபதினாயிரம் சுலோகத்
தால் செய்த ராமாயணமும், அநுமான் செய்தருளிய
ராமாயணமும், பிரமனிட்ட சாபத்தால் சிதைவுண்டன
ஆஞ்சனேயர் செய்தருளிய ராமாயணத்தில் ஒரு சுலோ
கத்தின் உத்திரார்த்த மெழுதிய கல்லென்று கடலினி
ன்று அகப்பட்டு போஜராசன் சபையில் காளிதாச மகா
கவினார் பூர்வார்த்தம் சொல்லின ரென்று சொல்லுப.
வேதசிகரத்தில் உறையும் பரம்பொருள் தயரதச்சக்கர
வர்த்தியிடத்தில்இராமாவதாரம் செய்தருள அவ்வேதம்
பகவான் வான்மீகரிடத்தில் ஸ்ரீமத்ராமாயணமாய் அவ
தரித்ததென்று கூஅப-சங்கரபகவான் செய்தருளிய அத்



தியாத்மசராமாயணம் அயோத்தியா காண்டம் உமாம
கேசுரசம்வாதம் ஆறாம் சருக்கத்தில் வான்மீகி பக
வான் உற்பத்தியைச் சொல்லும் பாகம் அதிக தோத்
திரங்களை ஒழித்து ஈண்டு மொழி பெயர்க்கப் பட்டது
அவ்விராமாயணத்தில் வித்தியார்ண சுவாமிகளால் அத்
துவித மதத்துக்கு அநுகுணமாய் சில சுலோகங்கள்
சேர்க்கப்பட்டனவாம். அவைவருமிடத்து வித்தியார்
ணகிருதமென்று சொல்லுவர்.

இராமபிரான் சீதாலக்ஷுமணரோடு பரத்துவா
சாச்சிரமம் வந்து அவரைத் தண்டன் சமர்ப்பித்து
அன்று அவரோடு உறைந்து மறுநாள் யமுனையாற்றைக்
கடந்து சித்திரகூடத்தில் பகவான் வான்மீகி முனிவர்
ஆச்சிரமம் வந்து, அம்முனி சிரேஷ்டரைத் திருவடி
தொழுதருளினான் இலக்குமீ காந்தனும், சம்சாரத்தொ
டக்கறுத்து வீடளிக்கின்றவனும், நித்தியனும், நின்ம
லனும், மாயையால் மானிட வுருவ[ம்]எடுத்தவனும்,
சடாமகுடம் தரித்தும் கோடி மன்மதரை யொத்தவ
னும், கருணை மடை திறந்தொழுகும் செந்தாமரைபோ
ன்ற திருக்கண்ணுடையானும், ஆகிய அப்பகவானைவான்
மீகிமாமுனிவர் மார்புறத் தழுவி விதிப்படி அருச்சித்து,
அதிமதுரமான கந்தமூல பலாதிகளை அமுது செய்தரு
ளச்செய்தார். தாரக வாச்சியன் முனிவரைநோக்கி அஞ்
சலிசெய்து வினயத்தோடு, எம்பெருமானே, அடியே
ன் தந்தை பணித்தாங்கு வனவாசம் செய்ய வந்தேன்
மனக்கண்ணால் யாவும் உணரவல்ல தேவரீருக்கு அடி
யேன் புகல்வது என்னை, சிறிதுகாலம் வசிக்க ஒருஉறை
விடம் தேவரீர் நியமித்தருள வேண்டுமென்று வினவ
முனிபுங்கவர் முறுவலோடு, ஏபரந்தாமா, சகலஉலகங்
களுக்கும் நீயே உறைவிட மாயினை சராசரங்க ளெல்லா
வற்றினும் நீயே உறைகின்றனை. சீவகாருணிய முடைய
பரமபாகவதரது இதயமும், தர்மாதர்மங்களைத் தவிர்த்

ஆச்சானந்தியோடு நின்னை யெப்போதும் தியானிப்போருடைய மனமும், எக்கருமஞ்செய்யினும் உனக்கு அருப்பணஞ் செய்கின்றோருடைய சிந்தையும், தேகம்வேறு ஆத்துமாவேறு என்றறிந்து சம்சாரத்தினின்று நீங்கியோருடையநெஞ்சும், யாவருடைய இதயத்திலும் அகலாது நீயே வசிக்கின்றனையென்று நினைப்போருடைய அகமும், இராம என்னும் நின்து நாமத்தை எப்போதும் சொல்லுவோருடைய உள்ளமும் நினக்கு உறைவிடமாகும்.

ஏ ராமசிறந்த நாமமகிமையை முற்றும் அறிவார் யாவர் நினது நாமமகிமையாலே யானும் பிரமருஷியாயினேன். நினது நாமமகிமையையும் அத்தியாச்சரியமான என்னுடைய சரித்திரத்தையும் சொல்லுகின்றேன் கேட்டருள்க. யான் பிரமகுலத்திற் பிறந்து அக்குலமேன்மையையும், ஆசாரத்தையும் சிறிதும் உணராமலே வேடுவரோடு கூடி அவர் குலாசாரம் பூண்டு சூத்திரஸ்திரியைப்புணர்ந்து மகவுகளைப்பெற்றுக்கள்வரோடு கலந்து வில்லும் அம்பும் பற்றிய யமனைப்போல யாங்கணும் திரிந்து வழிச்செல்வோர்களை அலைத்து, அவர் கைவசத்துள்ளதனைப்பறித்து வாழ்க்கைபுரிந்தேன். திருடரும் என்னைக்காணின் அஞ்சும்படியான களவாடி வாழுநாளில் பிரமாண்ட ஆரணியத்தூடு சூரியன்போலவும், அக்கினிபோலவும் பேரொளியுடைய முனிவரர் எழுவரைக்கண்டு அவர்பாலுள்ளதைப் பறிக்கவேண்டி நின்மின் நின்மின் என்று உரறிக்கால்விசைத்தோடினேன். அம்மகா விருடியார் என்னைப்பார்த்து அடா மூடா யாண்டு வருகின்றாயென, என்னுடையமனைவியும் மக்களும் பசித்திருக்கின்றார்கள் அவர்களுடைய பசியைத்தீர்ப்பான் நும்பால் உள்ளதனைக் கவர்தலுக்கு வந்தேன் என, அம்மகாவிருடியார் என்னைப்பார்த்து அடா ஏழை, யாம் இப்போது கூறுகின்றபடி செய்வாயேல் எம்



முழை இருப்பதை யாங்களே கொடுக்கின்றோம் நீ இன்னெசென்று மனைவிமக்களைப்பார்த்து நாள்தோறும் தீவினை பலபுரிந்து உங்களைக் காப்பாற்றுகின்றேனே பாபத்தில் உங்களுக்கும் பங்குளதோ இலதோ பாபத்தை நீங்களும் பாகுபாடு செய்துகொள்ளவேண்டுமென்று உரைத்து அவர் தரும் மொழியை வந்து செப்புதி நீ மீண்டு வருந்துணையும் யாங்கள் இங்ஙனே இருக்கின்றோம். ஐயப்படாதியென யானும் சென்று பெண்டு பிள்ளைகளைக் கேட்க அவர்களும் நீ கொணரும் பொருளையன்றிப் பாபத்தைப் பங்கிட்டுக்கொள்ளேம் என நான் நடுங்கி வில்லை முறித்தெறிந்துவந்து அடியேன் உய்யுமாறு கருணைசெய்யவேண்டுமென்று அப்பெரியோர்கள் தாளில் விழுந்து எழாமற் கிடந்தேன். கருணையால் நிறைந்த சித்தமுடைய அம்முனிவர்கள் அடா எழுக எழுக என்று சொல்லவும் யான் எழுந்து கரங்குவித்து நின்றேன். அப்போது முனிவர்கள் இவன் பிராமணன் தீய ஒழுக்கத்தாலே இழிவடைந்தான் இவனைத்திருத்தவேண்டுமென்று அருள் கூர்ந்து தம்முள் உரையாடி ஏ இராம? நின்னுடைய திருநாமத்தை முன்னெழுத்தைப் பின்னும், பின்னெழுத்தை முன்னுமாகமாற்றி மரா மரா என்று உபதேசித்து நாங்கள் மீண்டுவருந்துணையும் ஓரிடத்திலிருந்து இதனை எப்போதும் ஜபஞ்செய்தி என்று கூறியருளிப் போயினர் அன்றுமுதல் யான் ஜபஞ் செய்யச் செய்ய சித்தம் சுவாதீனமாயிற்று, உலகத்தை மறந்து யான் ஜபஞ் செய்யவே என்மேல் புற்று வளர்ந்து கொடிகள் படர்ந்தன. ஆயிரம் யுகம் சென்றபின்னர் அம்மகா விருடியார் மீண்டும் எழுந்தருளிப் புற்றிடம் வந்து என்னைக்கூவி வெளியில் வாவென நானும் வெளியில்வர அவர்கள் நீ புற்றினின்றும் வந்தமையால் வான்மீகி என்று பெயர் பெறுக, என்று மொழிந்துபோயினர். இரகுகுல சிரேட்டனாகிய ஏ ராமா, நின்னுடைய நாமப்பிரபாவத்தால் வீடுபெற்றேன் நின்னை இப்போது சேவித்து வீடும்பெற்

றேனென்று நவின்று வசிக்க இடங் காட்டுகிறேன் வரு
கவென்று அழைத்துப்போய்ச்சித்திரகூடத்தின் மத்தி
யில் தம்மாளுக்காரேல் பன்னசாலை இரண்டு செய்வித்
து சீதாலக்ஷ்மணரோடு கருணாமூர்த்தியை ஒன்றில் வ
தித்தருளச்செய்து மற்றொன்றில் தாமும் வதிந்தருளி
னர்.

பகவான் வான்மீகமாமுனிவருடைய சரித்திரம் இ
ன்னும் விரிவாய் ஸ்ரீமகாபாரதத்தில் சொல்லப்பட்டிரு
க்கின்றது. அம்மாமுனிவர் மேலே வளர்ந்த புற்றை வ
ருணபகவான் கரைத்தமையால் அவ்வடிகளுக்கு பிரசே
தசர் என்னும் திருநாமம் உளது. வான்மீகி ஆச்சிரமத்
தில் தங்க இடம் கிடைக்கும். மாணிக்கப்பூருக்கும் வா
ன்மீகியாச்சிரமத்துக்கும் மத்தியில் சில கிராமங்களும்,
அவ்வாச்சிரமத்துக்கும் சித்திரகூடத்துக்கும் மத்தியி
ல் சில ஊருகளும், கிர்வியென்ற பட்டினமும் உள்ளன.
அந்நகருக்கணித்தில் மந்தாகினி என்னும் நதி ஓடுகின்
றது பிரவாக காலத்திற் செல்வோர் நாவாயால் ஆற்
றைக்கடந்து அக்கரையில் வேறு வண்டி அமைத்துக்
கொள்வர்.

**சீதாப்பூர்:**—கிருவிபட்டணத்துக்கு ௬-மயில் தூர
த்திலிருக்கின்ற இவ்வூர் மந்தாகினி இருகரைப்பக்கத்தி
லும் வீடுகளும் வீதிகளும் நெருங்கி ஒருதென்னை பிர
மாணம் எங்கும் மேடுபள்ளங்கள் உள்ளதாய் பிராகின்
றது. நதிக்கரையில் சக்ரவர்த்தி திருமகன் சந்நிதியிருக்
கின்றது, யாத்திரை செய்வோர் மந்தாகினியில் தீர்த்த
மாடி தீர்த்த சிராத்தம் செய்து அப்பரமனைத் தரிசிப்
பார். இம்மூதூரில்பெரும்பாலார் தென்னாசாரியர் சம்பி
ரதாயஸ்தர்களாக இருக்கின்றார் இடமும் சித்திரகூடம்
செல்லப்பல்லக்கும், டோலியும் குதிரையும்கிடைக்கும்.

**சித்திரகூடம்:**—சீதாப்பூருக்கு ௩-மயில் தூரத்
தில் இருக்கின்ற வேதசிகரம்போன்ற இப்பருப்பதத்



துமுன்றிலில் சில வீடுகளும் கடைகளும் கம்புப்பக்கத்
தில் அனேக தேவாலயங்களும், பலதேயத்தாசர்கள் இ
யற்றியிருக்கின்ற வாசயோக்கியமான பொதுச்சாலைகளு
ம், அன்னசத்திரங்களும், ஆசாரிய பரம்பரையாய் வரு
ம் மடங்களும், உழுதொழிலோர்வதியும் சிறு கிராமங்க
ளும், கோதுமம் முதலிய விளையும் செய்நிலனும், அடிக்
கொன்றுள்ளன யாண்டும் வெறுநிலத்தைக் காணேம்; ம
லைக்கு நாற்றிசையிலும் ஒருகாதவழித்தூரம் வளமிகுந்
திருக்கும் எக்காலத்தும்பஞ்சம்ஆங்குவருவதில துமலைச்
சாரலில் *இட்டிகைபரப்பிவெண்சுதையால்மெழுகப்பட்
டிருக்கின்றது, கால்வலியுள்ளோர் நடந்துபோய்ச்சேவி
த்து வரலாம், வாகனத்தின்மேலே செல்லின் கங்காதீர
த்திலிருந்து பரதஜீ இந்த க்ஷேத்திரத்துக்கு காலால்
நடந்துவந்தார் சீதாப்பூரிலிருந்து நீ வாகனத்தில் வரு
கின்றாயோ என்று ஆங்குள்ளார் இகழ்வார். தாசரதி
யார் சீதாலக்ஷ்மணரோடு இச்சிகரியில் பத்துவருடம்
சிலமாதங்கள் எழுந்தருளியிருந்தனர், யாத்திரைகாரர்
மலையடிசார்ந்த உடன் காந்தர்நாத சுவாமிசந்நிதியில் த
ண்டன் சமர்ப்பித்து எழுந்து அஞ்சலிகரத்தராய் வலம்
வரும்போது மலைச்சாரலிலிருக்கின்ற வானரங்களுக்குக்
கடலைமுதலிய உணவுகளை வாங்கி இடுவர்; மலைமேலெல்
லாம் காட்டாகையால் பிரதக்ஷணம் செய்வதன்றி அதன்
மேல் ஏறக்கூடாது. பருவதத்துக்குச் சிறிது தூரத்தில்
லக்ஷ்மணஜூலா யென்று ஒரு சிறுகுன்றிராகின்றது. சி
த்திரகூடஸ்தலமான்மியம் ௧௨-அத்தியாயத்திலிருக்கின்
றது. மற்றைய விசேடங்களை அதனாலுணர்க. வருடமொ
ன்றுக்கு முப்பஃதாயிரம் ரூபாய் வரும்படியுள்ள ஒரு ஜெ
மீன்தார் மலைச்சாரலிலிருக்கின்றார். மேலேகூறிய மா
ணிக்கப்பூரிலிருந்துச் சித்திரகூடத்துக்கு தூமசகட மா
ர்க்கம் வேலை நடந்துகொண்டு வருகின்றது. இனியாத்
திரைசெய்வோர் வருந்தாது புகைத்தேரிற் செல்லலாம்.

பிரயாகை. இது பெரியபட்டினமன்றியும் உத்தமோத்தமமாகிய புண்ணிய க்ஷேத்திரம், ஸ்டேஷனுக்கு மூன்றுமயில் தூரத்தில் திருவேணி சங்கமமிருக்கின்றது. சரஸ்வதி நதி அந்தர்வாஹினியாகலால் கங்கையமுனையைக் கூடுவதோ யமுனை கங்கையைக் கூடுவதோ என்று இருவர்க்கும் கலகமுண்டாகி பிரம சந்நிதியில் பாகிரதி, நான் ஓங்கி யுலகளந்த உத்தமனது திருவடியினின்று தோன்றிச் சங்கரன் சடையைத் தானமாகக்கொண்டு சுருதி ஸ்மிருதி இதிஹாசபுராணங்களால் துதிக்கப்படுகின்றேன் என்னை நிகர்வார்யார் யானும் ஒருத்திமாட்டுப் போவதுளதோ என்பால் யமுனையே வரக்கடவளெனக்காளிந்தி, யானவ என்னினும் ஏற்றமுடையளோ சர்வேசனது ஸ்ரீபாதத்தில் தோன்றிய மாத்திரையால் அவள் அத்தனை பெருமிதங் கூறுவளேல், அப்பகவான் திருமேனி முழுதும் அணைந்தயான் எத்தனைபேசவேண்டும். அப்பெருமான் கிருஷ்ணாவதாரஞ்செய்து நீர்விளையாட்டு முதல் பலவிளையாட்டயர்ந்தது என்மாட்டன்றோ நதிநங்கையர் யாவரினும் கங்கையாள் பெரியாள் அவளினும் யான்பெரியேன் அவளே என்பால் வரக்கடவளென உரையாட பாகிரதி உடன்பட்டு நதியவளிடம் சார்ந்தனள். சானவி சூரிய புத்திரியைச் சார்ந்த குறிய இக்காலத்தும் காணலாம். பிரயாகை க்ஷேத்திர மகாத்மியம் பன்னிரண்டு அத்தியாயத்திலிருக்கின்றது. இந்தக்ஷேத்திரத்தில் வடவிருக்ஷமொன்றிருக்கின்றதெனவும், சிவன் அதன் மூலத்திலிருந்து அதனைக் காத்து வருகின்றானெனவும் வடபத்ர சாயியாகிய முகுந்தன் அத்தருவின் இலையில் என்றும் பள்ளிகொண்டிருக்கின்றானெனவும், பிரளய காலத்தில்மார்க்கண்டேயர் முதலிய முனிவர் அத்தனி முகுந்தனது திருவயிற்றில் புகுந்திருந்தனரெனவும் அம்மான்மியம் கூறுகின்றது.



திருவரங்கத்தந்தாதி.

இடமலைக்கும்புயங்கமலைக்குமிலங்குமகல்
இடமலைக்குமிருங்கமலைக்குமிறைவசங்கம்
இடமலைக்கும்புனலரங்காவெய்த்தமார்க்கண்டன்கண்டி
இடமலைக்குமுலகுமிபாலனிருந்ததென்னே.

காசிகாண்டம்.

சத்தபுரியின் சிறப்புரைத்த அத்தியாயம்.

"உடைதிரைநீர்ப்பிரளயத்துமார்க்கண்டன்முதன்முனிவருறைவதாய, வடதருவைப்புனிறமதியலைபுரட்டுங்கங்கையோடுவளைந்தவேணிக், கடவுளைவெண்மதிகொழிக்கும்பாலாழிக்கறந்துசெழுங்கமலையோடு, மடியாதுயாகத்துவலென்றினி தடைந்த மாதவனையாக்குகண்டான்."

பிரயாகைமான்மியம் கேட்ட யுதிட்டிரா அருசொன்ன மார்க்கண்டேயரை நோக்கி இந்த க்ஷேத்திரத்தைக்குறித்துப் புராணப்பிரமாணமல்லது, வேறு பிரமாணமுளதேல் சொல்லுக என்று வினவ சிதாசிதசங்கமத்தில் நீராடுவோர் வீடுபெறுவரெனச் சுருதிப்பிரமாணமுமுளதெனக் கூறினரென்று அம்மான்மியஞ் சொல்லாநின்றது. அதனை அதிவீரராமபாண்டியனும் மேற்படி அத்தியாயத்துள் இப்பாட்டால் கூறினான்.

பெறலரியதருமத்தின்பேறெல்லாம்விரிதெண்ணீர்ப்பிரயாகை
யாற்று, ஊறலில்லொருதண்மறைத்துநீத்தார்துறக்கமொடும்பாவமுடனை
யாற்று, அதுபெயர்கேட்பினுமுடிந்துமாதிருமாண்டிவதித்து
த்துமன்ன, குறையில்பாகதிபடைந்தவிறதிருப்பரெனமறை
யிர்விட்டோரும், கள்கூறக்கேட்டான்.

சிதாசிதமென்பதற்குப் பொருள் வெளுப்புக்கறுப்பு எனப. வெளுப்பைக்கங்கையெனவும் கறுப்பைக்காளிந்தியெனவும்கொள்வராகலால்பிரயாகைக்குச் சிதாசிதக்ஷேத்திரமென்று பெயர். பிரயாகாமுண்டம், காசிதண்டம், கயாப்பிண்டம் எனவும் பிரயாகம் தீர்த்தராஜா எனவும் சொல்லுப. திருவேணி சங்கமத்தில் புனலிறங்கிப்பேணும், உடலைக் கண்டங்கண்டமாய்ச் சேதித்து பறவை

சட்டு இரையார்கியேனும் உயிர் நீத்தல் வேண்டுமெனப் பிரயாகை மான்மியம் இக்காமத்திரயம் அன்றியும் தை அமாவாசை முதல் மாசி அமாவாசை வரையிலுமான மாகமாதத்தில் அச்சங்கமத்தில் நீராடின் வரும் பயன் எல்லை இகந்ததாகும் துலாமாதத்தில் ஜூனக்கா சிராப்பள்ளி, முதலிய க்ஷேத்திரத்திலுள்ளோரும் நீராடுவதற்கு ரங்கக்ஷேத்திரம்வருதல் போலமாகமாதத்தில் ஸ்ரீகாசி, ஸ்ரீஅயோத்தி, முதலிய க்ஷேத்திரங்களிலுள்ளோரும் பலதேயத்து அரசர்களும் தீர்த்த க்ஷேத்திரம் வருவர் அம்மாதத்தில் பிரயாகையைப் பார்க்க இருத்தல் வேண்டும்.

சகலலோகங்களுக்கும் இதம் செய்கின்றவனும் சச்சிதானந்தனும் பகவானும் ஆகிய சிவனிடத்தில் உத்தர மீமாம்சையாலேயே தேவதா நமதி எப்படிப்பண்ணப்பட்டிருக்கிறது அப்படி இந்த மகாராசனிடத்தில் தமயந்தியாலே பர்த்தாவாக அநுமதி பண்ணப்படவில்லை எனவும் ஜ்யேஷ்டாபிஷேககாலத்தில் மந்திரத்தில் அதிஷ்டானம் பண்ணியிருக்கின்ற புருஷோத்தமன் எந்த ஸ்திரீகள் கண்களால் சேவிக்கப்படுகிறானோ அந்த ஸ்திரீகளால் நளமகராஜன் பார்க்கப்படுகிறான் எனவும், யாதொரு ஸ்திரியால் மாகமாதத்தில் யமுனாசங்கமத்தில் நீராடப்பட்டிருக்கிறதோ அந்த ஸ்திரியானவள் நளசக்கரவர்த்தி படாக்ஷத்துக்கு பாத்திரமாகி ஸ்திரீரட்டு ஆவள் எனவும் ‘‘வேதைர்வசோபி, தாபிர்த்ரியத’’ என்னும் சுலோகங்களால் ஸ்ரீ அர்ஷன் என்னும் கவிச்சிங்கம் பகவத் குணானுபவத்தையும் பகவத்சேவையை [illegible] திரிவேணி ஸ்நானத்தையும் வடமொழி நைடதத்தில் விளக்கினான்.

வடதேயத்துள்ள தபோதனர்களெல்லாம் மாகமாதத்தில் பிரயாகைவந்து மணற் பரப்பில் கொடிநாட்டி அதனடியில் தமது திருவாராதனப் பெருமாளை எழுந்த



ருளச் செய்து எல்லிலும் அல்லிலும் ஆங்கே இருப்பார். வெயிற்காலத்தில் ஐந்தீநாப்பணும் பனிக்காலத்தில் நீர் நிலையிலும் நின்று தவம் செய்வோர் வடதேயத்தில் இக்காலத்துமுளர் அக்காலத்திலும் நம்திராவிடதேயத்தோர் அவற்றினின்று தவம் செய்ததாய் யாண்டும் கண்டிலம். அங்ஙனமாயின் இக்காலத்தார் உச்சிப் பொழுதிலும் திருக்காவிரியில் நீராடாது ஒழிதல் ஏதமாமோ. வன்மையும் மென்மையும் உடம்புகட்கே யலது உயிர்க்கில்லையாகலால் கரு உண்டாக்கும் போதே சீதோஷ்ணங்களை பொறுத்துத்தவம் செய்யும் உடம்பினராய் வடதேயத்தோரையும், அதற்காகாத உடலினராய் திராவிடதேயத்தோரையும் நான்முகன் படைத்தானாயின், அத்திவினையால் அப்பரமன் கெடுக.

‘‘இரந்துமுயிர்வாழ்தல் வேண்டிற்
பரந்துகெடுகவுலகியற்றியான்.’’ என்று திருவள்ளுவரும் சபித்தார்.

‘‘நல்லாரைக்காண்பதுவு நன்றேநலமிக்க
நல்லார்சொற்கேட்பதுவு நன்றே - நல்லார்
குணங்களுரைப்பதுவு நன்றேயவரோ
டிணங்கியிருப்பதுவு நன்று.’’

நெல்லுக்கிறைத்தநீர்வாய்க்கால்வழியோடிப்
புல்லுக்குமாங்கே புசியுமாம் - தொல்லுலகில்
நல்லாரொருவ ருளரேலவர்பொருட்
டெல்லார்க்கும்பெய்யு மழை.

என்றமையால் யாங்கணும் பெரியோர் இருப்பின் அவரால் எல்லாரும் அளவிறந்த நலம் பெறலாகுமன்றே. பிரய கவாலா என [illegible] ப்பார் அதில் பல [illegible] ய கின்றனர். அவர் குமாஸ்தாக்கள் [illegible] கலியாணி, நாசிகை, ஐப்பல்ப்பூர் முதலிய இடங்களில் காத்திருந்து யாத்திரைகாரரைக்கண்டு அநுவர்த்தித்து மார்க்கத்தில் புசிப்பால் வேண்டினும் கொடுத்து வேண்

டிய உதவி செய்து தமது சுவாமி இடம் அழைத்து வந்து விடுவர். தீர்த்தக்கரையில் செய்யும் கருமங்களெல்லாம் பிரயாகவாலர்செய்து வைப்பர். இவருள் சாளிகிராம் சீதாராம் என்போர் வைதீக அநுஷ்டானமும் சாத்துவீக குணமும் யாத்திரைக்காரரை ஆதரிக்கும் சக்தியும் உடையவர் திருவேணிக்குச் சமீபத்திலுள்ள தாராகஞ்சத்தில் திராவிடதேயப் பார்ப்பார் குடியேறியிருக்கின்றனர். ஆங்குத் திரிதண்டிமட மொன்றிருக்கின்றது திராவிடதேயத்து முகலி ஒருவன் தாராகஞ்சத்தில் ஸ்ரீவைஷ்ணவன்போல திருமண்தரித்து பூணூல்பொருத்து, யாத்திரைக்காரரையும் தன்னையும் கெடுத்துக்கொண்டு இருந்து இதற்கு நான் வருடத்திற்கு முன்னர் மாண்டான். இப்பெற்றியோர் வடதேயத்தில் சிலர் இருக்கின்றனர் அவரையும் பார்ப்பாருள் யோக்கியரையும் அறிந்து வைதீககாரியத்தில் உடன்படுத்தல் வேண்டும் பிரயாகக்ஷேத்திரம் சார்ந்த உடனே க்ஷவரம் செய்துகொள்ளவேண்டும், இது எல்லா க்ஷேத்திரத்துக்கும் உரித்தாயினும், பிரயாகாமுண்டம் என்றபடியால் அதுவே அதற்கு முக்கியமாயது. யாத்திரையெல்லாம் முடித்துக்கொண்டு பிரயாகம் வந்து தீர்த்தம் எடுக்கும்போது மூன்று புடவைகளோடும் ஆராதன திரவியங்களோடும் திருவேணியில் கங்கை யமுனை சரசுவதிகளை ஆராதித்து அப்புடவைகளை மூன்று பிராமணஸ்திரிகளுக்குக்கொடுத்து அறுசுவையுண்டி அருத்துவதும் அறனாகும் மனைவியோடு யாத்திரை செய்வோன் திருவேணிசங்கமத்தில் அவளைத்தனது [illegible]டியிலிருத்தி க்ஷ[illegible]தலை மூன்றாய் வகுத்து அணி[illegible]ப் பின்னி வேணியை அடியில் [illegible] அலகது நுனியிலாயினு[illegible]த்தில்வைத்துத் தக்கணையோடு தானஞ்செய்வது முறையாம். திருவேணிக்குச் சமீபத்தில் பரத்துவாசமகாமுனிவராச்சிரமம் இருக்கின்றது. காகுஸ்தர் வனம் செல்லும்போது அவ்வாச்சிரமத்தில் எழு



ந்தருளியிருந்து சித்திரகூடம் சென்றருளினார். பின்பு பரதாழ்வாரும் தம்முன்னை அழைக்கவந்தபோது ஆங்குத்தங்கினர். பரத்துவாசமகாவிருடியார் அவருக்கு விருந்தமைத்தபோது அவ்வாச்சிரமத்திலிருந்த அசுவத்த முதலிய தருக்களும் கொடிகளும் இயம் இயம்புவோராகவும் கூத்தியாராகவும் உருவெடுத்து வந்தனவாக ஸ்ரீமத்ராமாயணம் கூறும். யமுனையைக்கடந்து பிரயாகை செல்லவேண்டுமாகலால் கீழே புனலும் அதன்மேலே யானை குதிரைகளும் மனிதரும் அதன்மேலே புகைத்தேரும் செல்லும்படிப்பாலம் கட்டப்பட்டிருக்கின்றது. அதனுள்ளே சென்று பார்க்க மூன்று பைசா தக்கணை கொடுத்தல் வேண்டும் மிலேச்சச்சக்கரவர்த்தியாகிய அக்பர் என்போன் பிரயாகையில் கோட்டை ஒன்றிழைத்து அலகபாத் என்று பெயரிட்டான் அதனால் பின்பு அது அப்பெயருமாயிற்று.

பிரயாகையிலிருந்து ௯௫-மயில் தூரத்தில் மொகல்சிரேயென்ற ஸ்டேஷனும் அதற்கு ௬-மயில் தூரத்தில் ஸ்ரீகாசியுமிருக்கின்றன. ஸ்ரீகாசிக்குப்போக மொகல்சிரேயிலிறங்கி வேறுவண்டி யேறவேண்டும்.

ஸ்ரீகாசி:—சப்தபுரியிலொன்றும் கங்கையின் வடகரையிலுள்ளதுமாகிய இந்த மகாக்ஷேத்திரம் பார்வதியோடு வதிய சிவனால் படைக்கப்பட்டதென்று காசிகாண்டம் கூறும் இருவினை தொலைந்து உயிர்கள் வீடுபெறுவான் இவ்வாரணாசி முகுந்தபிரானாலே ஆதியில் கற்பிக்கப்பட்டுப் பின்பு சங்கரனுக்குக் கொடுத்தருளப்பட்டதென்று நாரதிய புராணம். கலியும் சிவன் காசியைப் பெற்றவாறு உரைக்கும் அத்தியாயம் ஒன்று மொழிபெயர்க்கப்பட்டது.

## பூர்வகதை.

உருக்குமாங்கத சரித்திரத்தில் அவ்வரசனது தேவி சந்தியாவலி என்பாள் தனது பதியை வருத்தும் மோ

கினிக்குக் கணவனுள்ளம் கலங்கச்செய்யும் மனைவிக்குமை
மாது யாண்டும் துன்புறுவாள் நீங்கொழுநனை மனம்
வருந்தச் செய்யாதே என்று பல கதைகளைக் கூறுவான்
தொடங்கிச் சூரியனால் அச்சந்தியாவளி தான் வாழ்க்கை
க்கு உடன்படு முன்னர் தனது தந்தையில்லத்திலிருந்
தபோது, ஒருகாஷ்டத்தினின்று கண்டு விரல் பிரமா
ணத்தில் வெண்ணெய்போல் மெழுகுபோன்று வெளிப்பட்டு
உடனே "காஷ்டேளா" என்ற பெயரோடு மானிடமங்
கையாகி எனக்கு ஓதிய கதையை நினக்கு ஓதுகின்றே
னென்று உரைக்கின்றாள்.

நாரதீய புராணம் முப்பத்திரண்டாம் அத்தியாயம்
உயிர் நாடிவரும் நமன்போன்று ஓடிவருகின்ற அர
க்கனை, அஞ்சிய அரக்கி வாணிகம் செய்துகொண்டு அங்
குவந்த பார்ப்பானைப்பார்த்து இம்மரத்தில் தொங்குகின்
ற சக்தியை எடுத்து பரமதுஷ்டனாகிய அவ்விராக்கதன்
மேலே விடுதி எனவும், அப்பிராமணன் அவளுரைத்த
வாறு செய்ய அச்சூலம் அவனைக்கொன்று சூரியன்போ
லபிரகாசமானதாய் இந்திரனிடம் சென்றது. உடனே
அரக்கி அவ்வேதியனை நோக்கி என்னோடு கூடி தேவ
மனுஷபோகங்களைத் துய்க்க என, ஒரு குகையுள் அழை
த்துப்போய், ஆங்குச் சேக்கையில் படுத்திருந்த காசி
அரசன் புத்திரியாகிய ரத்னாவளியை அவ்விப்பிரனுக்
காட்டி, இவள் அந்த க்ஷேத்திரத்திலுடைய எல்லையை
கடந்து உள்ளே மகாபாதகங்கள் செல்லாதில்லையோ, அக்
க்ஷேத்திரத்தில் இறந்தவர்கள் பிறப்பதில்லையோ, அந்த
க்ஷேத்திரமாகிய ஸ்ரீகாசியினின்று விவாகார்த்தமாய்ச்சற்
முன் நீர் கொன்ற எனது பதியாலே கொண்டுவரப்பட்
டாள். இவளும் இவள் கைவலத்துள்ள அந்தரங்க
ஜனம் நானும் உமக்கு உடன்பட்டோம். உமது பேரழ
காலே உம்மைக் காதலித்து கௌமாரகாலத்திலேமண
ம் புரிந்த எனது கணவனைக் கொல்வித்தேன். எம்மைக்
கைவிடாது நீர் பரிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தாள்



காஷ்டேளா சொல்லுகின்றாள், எனது கொழுநனாகிய
அப்பூசுரன் அச்சமுற்று அவ்வரக்கியைப் பார்த்து மங்
கையவளே நேசிக்கலாமென்று நீதிநூல் சொல்லாநின்றது.
என்னைக் காதலித்து நின்னை மணந்த மணாளனை மாய்
வித்தனை. என்னினும் அழகு மிக்கான் ஒருவனைக் காணி
ன் என்னைக்கொன்றிடுவை. விதிவயத்தால் நின் வய
த்தனாயினேன் என்று செப்பலும், அரக்கி ஏ அந்தண,
எனது கணவன் என்னை இகழ்ந்து இவ்ரத்னாவளியைக்
கொணர்ந்தமையாலே அவனைக்கொல்வித்தேன். நீர்என்
னை நம்பி இருத்தலாலே நும்மைக்கொல்லேன். நம்பினவ
னை மாய்ப்பின் பிரமகத்தி தோஷம் உளதாகுமென்ப.
நீர் சிறிதும் அஞ்சவேண்டாம் என்று உறுதிகூறி, அவ்
வரக்கி தான் ஒரு *பிடியாகி எனது பர்த்தாவையும்
ரத்னாவளியையும் மற்ற சாமக்கிரிகைகளையும் தனது
முதுகிற் சுமந்துகொண்டு மூன்று முகூர்த்தகாலத்தில்
ஸ்ரீகாசிவந்தது. வேதிய இக்காசிமா நகரம்பாப விருக்
ஷத்தைச் சேதிக்கவமைந்த கோடரியாகும். தீவினையா
லே இங்குறும் உயிர்களுக்கு நற்கதியைக் கொடாநின்ற
இந்த க்ஷேத்திரம் இக்காலை சிவஸ்தலமாயிருக்கின்றது.
அவைஷ்ணவ க்ஷேத்திரத்தில் முத்திகிடைக்காதாக
லால் இது ஆதியில் விஷ்ணுஸ்தலமென்று புராணங்க
ளாலே சொல்லப்படுகின்றது. திரிபுராந்தகனாகிய சிவன்
பிரமகத்தியாலே கஷ்டப்பட்டு இந்த வைஷ்ணவக்ஷேத்
திரத்தில் பிரவேசித்தலும் பிரமகத்தி இரனுள் புகு
தாது விருபாக்ஷனைவிட்டு எல்லைக்கப்புறம் நின்றது.

உடனே சங்கரன் அக்காலை இங்கெழுந்தருளியிருக்
த கேசவபிரானைத் திருவடி தாழ்ந்து சுவாமி தேவரீரு
டைய க்ஷேத்திரத்துள் நான்வருதலும் பிரமகத்தி என்
னைவிட்டு ஆங்கு நிற்கின்றது. இந்தக்ஷேத்திரத்தைக்கட
ந்துபோவேனேல் தவிராது என்னைப்பிடித்துக் கொண்

* பிடி - பெண்யானை.

டது சந்தேகமில்லை. தேவரீர் எனக்கு இந்த க்ஷேத்திர தானம் செய்தல் வேண்டும். இதனில் நான் வதியப்பெறின் பிரமகத்தியால் பிடிக்கப்படாமல் விருப்பது மன்றி சனங்களாலும் நன்கு பூசிக்கப்படுவேன் கருடத்துவசரான தேவரீர் எனக்குப் பிரசன்னராகவேண்டுமென்று பிரார்த்தித்ததும், திருமகள் காந்தன் எதிர் தோன்றி இக்காசியை அவ்வரனுக்குக்கொடுத்தருளினன்.

பிரமனே அதுமுதலிது சைவக்ஷேத்திரமாயிற்று. இது வைஷ்ணவ க்ஷேத்திரமென்று புராணங்களன்றிப் பெரியோர்களும் மொழிவார்கள். இந்த க்ஷேத்திரத்தில் ஸ்நான, தான, தவ, யோக, மௌனங்களை வருந்திச் செய்தலினும் உயிர்மாயப்பெறின் அவற்றால் வரும் பயனினும் அதிகம்வரும். முத்திபெறுவான் யாவனோ அவனே *இந்த க்ஷேத்திரத்தில் மாய்வான். மகாபாதகம் செய்தவனாயினும், இந்த க்ஷேத்திரத்தில் இறப்பின், திரநிசய இன்பவீடடைவான். இக்காசிமாநகர்க்கு பாபபரிகாரம் செய்கின்ற வாரணாசியென்றும, பாபங்களெல்லாம் முற்றும் விமோசனமாகின்றமையால், அவிமுக்த க்ஷேத்திரமென்றும்பெயர். கருமங்களை நாசம் செய்து முக்தியளிப்பதற்காகவே அச்சுதபிரானாலே இந்த க்ஷேத்திரம் கற்பிக்கப்பட்டதென்றான்.

முப்பத்திரண்டாம் அத்தியாயத்தில் ஸ்ரீகாசியைக் குறித்து முற்றிற்று.

ஸ்ரீகாசி திரிமூர்த்திகளுக்கும் ஸ்தானமென்று இப்பாட்டு கூறும்.

அகஸ்தியர் விந்தத்தை யடைந்த
அத்தியாயம்.

"மேவிருப்பிடமாய் முனிவர்க்கு முதற்றேவர்
மேவருதற்கரிதா மருண்முத்தியின் வீடாய்ப்
பாவம்நாசஞ்செய காசியின் வாழ்வுபடைத்தோர்க்குள்
யாவரவர்க்கரிதாய விறப்பொருளுயர்தேயே"



முத்திதரும் நகர் ஏழாயினும் காசியில் இறப்போர் தவிராமல் வீடெய்துவர் என்பது எல்லார்க்கும் ஒப்ப முடிந்தது. அதனைக்காசிகாண்டம் நாரதீயம் முதலிய புராணங்க ளன்றிராமோபநிஷதமுங் கூறுமாம். காசியில் மாய்வோர் காதில் பணவம்; அட்டாக்கரம், பஞ்சாக்கரம் ஆகிய இவற்றை உபதேசித்துச்சிவன் முத்தி அருளுகின்றனன் என்று மந்திரோபதேசம்பெற்றிகூறுவார் பலதிறத்தராவார். பணவம் அட்டாக்கரத்தில் ஒரு முத்தரகலாலும், அதனைச்சேர்த்தே பஞ்சாக்கரம் ஜபிக்கப்படுகின்றமையாலும் ஸ்திரீ சூத்திரர்காதில் பணவத்தை ஓதமாட்டாமையாலும் அறநூற்றுணிபால் அச்சூ ன்றும் * தடைக்கு உட்படுமாதலாலன்க. ஸ்திரீசூத்திரர் பணவத்தை நீக்கி நமோ அந்த மாய் பஞ்சாகரத்தை ஜபிக்கவேண்டுமென்று சூதசங்கிதை கூறியதேனும், அதனை நீக்கின் நாமமாத்திரையேயன்றி மந்திரமன்மை அறிக. ஸ்திரீசூத்திரர், சண்டாளர், நாய், நரி, புழு முதலிய எவ்வுயிரும் காசியில் மாயின் வீடெய்துதல் உறுதியாகலானும், நாமாதிகாரம் யாவர்க்கும் முனதாகலானும், காசியில் மரிப்போர் செவியில் சிவனால் ஓதப்படுவது தாரமாகிய ராமநாமமே என்று உறுதிகொள்க. ஸ்ரீகாசியிலுடல்நீப்போர்செவியில் சிவன் ராமதாரகப் பிரமமந்திரத்தை உபதேசித்துவிடுகின்றனனென்று அகத்தியராமஹூராசங்கிதை கூறும். பிராணப்பிரயாண சமயத்தில் விஷ்ணுநாமமே உச்சரிக்கத்தகுந்ததென்பது "பஜகோவிந்தம் பஜகோவிந்தம் மூடமதே" என்று சிவாவதாரமாகிய ஸ்ரீமத் சங்கராசாரியசுவாமிகள் ஓதியவாற்றானும் உணர்க.

இருசமயவிளக்கம் இராமதாரகப் பிரமமந்திர
உபதேசப்பரிச்சேதம்.

கண்ணுதலோன் சடைவாழ் கங்கையுமையாகுபதி கந்தனுடனே
காணவரியயர்க்கொளிர்விருந்த உகலர்க்குமுமாக நல்குவதுமேட்
டெண்ணவரியயோகியருஞானியருமெய்த்தவருமிந்[illegible]வரும்
பண்ணவருமட்பதியோ[illegible]டமும்படிபுகழ்ந்துறைவர்.

* தடை - ஆக்ஷேபம்.

புகலிடம்புகுவர்புகைத்தசெயமாலையர்பொருத்தசடையர்
அலசயநசிந்தையிலனாவகையெழுத்திலைவழுத்துமுறவோர்
நாமிலகுவற்கலையர்சேற்றிடியிரும்புருவர்சோர்மொழியவே
நாசிமுனைவைத்தருபனத்தருயர்முத்திதனைச்சுசதலுமே.

இத்தனைபமாதவமிருந்தவர்கள்காமியமெடுக்கரியதாம்
முத்தியெனிலாக்கதனையெப்படிசெரிந்திடமுடிக்குவமெனு
அத்தியையுரித்தருளுமற்புதனைத்தக்குமாறுடையவன்
புத்திசெயுமவ்வனவில்வந்தனன் உளர்மொலவுபுண்டரிகனே.

விக்ரமலராசனவேயீசன்மகப்புகைசுழிட்டருளியென்
புத்திக்கிருந்தருணைரச்பேயசெதனஇன்றெதிர்புகழ்ந்திடுதலும்
சிந்தைக்கினிசைந்தபொருள்யாக்செனக்கருள்சிறந்தனவெனத்
தெந்தையரிதனைபொருளில்லையெனவோர்தியிசைசத்தனசோர்.

செப்பரியமுத்திதருதெய்வமெனவென்னையிவர்சிந்தனைசெய்தே
இப்பெரியமாதவமிகழக்குணர்கண்மற்றிவருக்கின்னருளினுல்
ஒப்பரியபேறுபெறநாளுதவவேதியிருபாயமெனலும்
வைம்பையின்மிடற்றமலனுக்குயர்கிராணமதிவாசமலரோன்.

வண்மைபெறுதாரகமகப்பிரமமான திருமந்திரமுகத்
தன்மைபுபதேசமுறவோதியிஅசங்கைதிபொன்னையைமே
திண்மைபெறுகாயம்விடுவார்செவியினிடைதிருந்தவரும்
அண்மைபெறுமுத்தியுறவோவொன மறைந்தனனெடுப்பொழுதிலே.

அன்னவுபதேசவரமந்திரமெலாயினித்திந்தருளியே
மன்னுமிரத்தினையுமுத்தியுதவித்தானமகிழ்ச்சிபெறுமால்
இன்னசெலகத்தியவிராமவரசங்கினவியம்புமினவாம்
பன்னியுரைசெய்பினவசனடயுலகத்தின்மிருபாடமெனவே.

அட்டாக்கரத்தில் நாகாரத்தையும் பஞ்சாக்கரத்தில் மகாரத்தையும் நீக்கின் அம்மந்திரங்கள் நாயணாய நசிவாய என்று உச்சரிக்கப்பட்டு அட்டகம் * அயனத்தின் பொருட்டு இல்லையெனவும் பஞ்சகம் † சிவத்தின் பொருட்டு இல்லையெனவும் பொருளபடுதலால் அவ்விரண்டுமந்திரங்களும் ராமநாமத்தாலே விளங்குகின்றன

* அயனம் - மோக்ஷமார்க்கம்.
† சிவம் - மங்கலம்.



எனவும் தெற்றெனக்கூறுப. இப்பொருளை நாயணாய என்னும் சுலோகத்தால் தெரிக. அயனாய நாஸ்தியென்று வேதாந்தநூலில் யாண்டும் ஆள்ப-அட்டாக்கரம் மோக்ஷத்தின்பொருட்டென்பதும் பஞ்சாக்கரம் காமியத்தின் பொருட்டென்பதும் அம்மந்த்ரார்த்தங்களேசொல்லும்.

ஸ்ரீராமநாமம் எம்மந்திரத்துக்கும் மேலாயதென்றும், சிவன்செபிக்கும் மந்திரம் அதுவே என்றும் ராகாரத்தாலே பாபங்களெல்லாம் தொலையுமென்றும், மகாரத்தாலே பின்பு அவை அணுகாவென்றும் ஓதுப - உன்னுடைய நாமருசியை மகேசனே அறிவான் என்று "ஜாநாதிராம" என்னும் சுலோகத்தால் ஸ்ரீராமகர்ணாமிர்தா சாரியரும் கூறுவர்.

நாயணாயமுகதோவிநாஷ்டகம்
மௌனிதோபிநசிவாயபஞ்சகம்
ராமநாமஇதியஸ்யதாரகம்
தத்ததன்வயவனாஞ்சத்வயம்.

"கற்பாரிராமபிரானை யல்லால் மற்றுங் கற்பரோ" என்னும் "புலையறமாகிநின்ற" என்னும் ஆழ்வார்கள் சாதித்தருளினர்.

"கற்பாரிராமபிரானையல்லால்மற்றுங்கற்பரோ
புற்பாமுதலாப்புல்லெறும்பாதியொன்றின்றியே
நற்பாலயோத்தியில்வாழுஞ்சராசரமுற்றவும்
நற்பாலுக்குய்த்தனன்நான்முகனார்பெற்றநாட்டிலே."

"புலையறமாகிநின்றபுத்தொடுசமணமெல்லாம்
கலையறக்கற்றமாந்தர்காண்பரோகேட்பரோதான்
தலையறுப்புண்டுஞ்சாவேன்சத்தியங்காண்மினையா
சிலையினாலிலங்கைசெற்றதேவனேதேவனாவான்."

ஸ்ரீகாசியில் உயிர்துறப்போர் இனைப்பார உமாதேவி உத்தரிகத்தால் வீசிட சிவபெருமான் தாரக மந்திரமோதி முத்தியளிக்கின்றனன் என்று இப்பாட்டுப் பகரும்.

## அகஸ்தியர் விந்தத்தை அடைந்த அத்தியாயம்.

"இந்தவெய்யிற்றிறக்குநய்யாருயிரைப்பாற
வுந்தரிகங்கொரிமொதுமைமீதிடவுமையொர்பால்
வைத்தவருன்பொருள்மெய்யருசாரமறைபெயர்த்தி
முத்தியளிக்கிடிமிப்பதியார்விடமுயல்வாரே."

சீவரெல்லாம் இறந்து இறந்து படும் துன்பை நீக்குவான் கர்ம ஞானபக்தி யோகங்களைக் கற்பித்து அவற்றின் அருமைநோக்கி வினை தம்மையில் மரித்தப்பிறந்தாழும் சேதனர் இதில் மாய்ந்து ப்ரவாய பெறுபதாக என்று பரமகருணாநிதியாகிய பகவான் ஸ்ரீகாசி க்ஷேத்திரத்தைப் படைத்தான் போலும். சர்வேசன் படைத்தலும் காத்தலுமன்றி அழித்தலும் பேரருளாலே என்று தயாசதகத்தில் வேதாந்த தேசிகர் சாதித்தருளுவர்.

முக்திபெறுவான் ஸ்ரீகாசிவாசம் செய்வோன் மரணம் வந்தடுத்தகாலை சிவாங்கம் புசித்த மன்றேம்போல அதனை அகலின் எவர் செய்யலாகும். காசிவாசந்தடைப்பதரிதாகலால் வாழையும் உப்பக்கம் காணவல்லாரோ அவ்வாசம் பெறுவார். எண்ணிறந்தகாலம் காசி வாசம் செய்த அகஸ்த்தியர் தேவர்களாலே அதனைப் பிரிந்து பொதியம் சாரபோர வருந்தினரெனவும், பிரமன்மனு முலத்தரசனாகிய திவோதாஸனுக்குக் கொடுத்த வரத்தாலே, அவ்வேந்தன் ஸ்ரீகாசியாக்களையாளும்பொழுது தேவரெல்லாரும் அதனை நீங்கித் தமதுலகு சார்ந்தனரெனவும், அவருள் கண்ணுதல் கண்ணும் மனமும் ஸ்ரீகாசியிற் பிடப்பச்சென்று மந்தரவரையிலிருந்து ஸ்ரீகாசியை அகன்றமையாலே வருந்தி, அதனை மீண்டு மடையத் தேவர்களோடு சூழ்ச்சிபுரிந்து சிவகணங்கள் யோகினி சூரியன், பிரமன், கணபதி, முதலிய பலரையும்வாரணசிக்கேவி அவரெல்லாம் மீண்டு வாராமை கண்டு திருமாலைப்போக்கி, அப்பெருமாளால் காசியை அடைந்தனை



யெனவும் காசிகாண்டம் பகர்க்கப்படுகும். மகாக்ஷேத்திரமாகிய வாரணாசி கண்ணபிரான் விடுத்த சக்கரத்தாலே முன்னொருமுறை வெந்து சாம்பராயிற்று. ஸ்ரீகாசியரசனாகிய பௌண்டரகன் சம்புவை நோக்கித் தவம் செய்து கண்ணபிரானைப் போலத் திருவுருவம் அளித்தி என, அப்பெருமானும் அங்ஙனே தந்தனன். அவன் பின்னர் தானே வாசுதேவனென்று இறுமாந்து தன்னிடம் எழுந்தருளிய பகவான் நாரதமாமுனிவனை வாழ்த்தி என்னை யொப்பார் யாரெனக் கருக்கொடுவினவ, அம்மாமுனிவர் பௌண்டரிகன் மானத்திருவுளம்பற்றி மேலைக்கடலில் கண்ணனென்று ஒருவன் இருக்கின்றான். அவனைவென்னைவபோல் நின்னையொப்பார் யாருமிலரென்று கூறிப்போயினார். பின்பு பௌண்டரிகன் படையெடுத்துத் துவாரகாபுரிசார்ந்து போர்புரிதலும் கண்ணபிரான் சக்கரத்தால் அவனை விண்ணேற்றியருளினான். இக்கதையை ஸ்ரீபாகவதத்திலும் பாத்மோத்தரத்திலும் காண்க. பௌண்டரன் மாண்டபின்னர் அவன் குமாரன் கறுத்து தந்தையைக் கொன்ற கண்ணனைக்கொல்லமகேச்சுரனைக்குறித்து வேள்விசெய்து வரமும், மகேச்சுர கிருத்திமம் என்ற காளியும் பெற்றுத்துவாரகையை அழித்து முருக்குபிரானை முருக்குமாறு அவனை விடுத்தான். காளி துவாரகை சாரலும் கண்ணபிரான் தனதுதிருவாழியின் உகிரைக்கிள்ளி யெறிய அது திருவாழியாய்ச்சென்று கிருத்திமத்தைத் தாக்கலும், அக்காளி ஓடிகாசியுட் புகுந்தாள். சக்கரமும் ஆங்குச்சென்று அவ்வபிசாரப் பேயையும், பௌண்டரன் மகனையும் சுட்டு ஸ்ரீ காசியையும் தகனம் செய்துபோயிற்று. இதனை அரிவம்சத்திலும் பாத்மோத்தர புராணத்திலும் காண்க.

"செத்தாரைசாவார்சுமந்து" என்றுப்பட்டினத்துப்பிள்ளை பாடியபடி அது யாண்டுமுண்டு, சாவாரை சாவார் சுமப்பது ஸ்ரீகாசியிலுளது. மணிகர்ணிகை கட்ட

மயானத்தில், தத்தாத்திரையபெருமானது ஸ்ரீபாதங்கள் இருக்கின்றன. ஸ்ரீகாசிமரணத்தை விரும்பிய வடதேயத்தோருள் தமக்கு மரணம்வந்தடுத்தகாலத்தம்மை ஒரு கயிற்றுக்கட்டிலில் போட்டு எடுத்துப்போய் தருப்பைமேலே தத்தாத்திரயபெருமானது திருவடியில் முடியை வைத்து விடும்படிச்செய்து நாவுலர்ந்தபோது சிறிது கங்காதீர்த்தத்தைப்பருகி சர்வேசன் திருவடிநிழலை யடைவாருமுளர். இங்ஙனம் சிந்திபாதேயத்து முன்னொரு அரசனும் உயிர்நீத்தானும். காசியில் பிணியாளரை கங்கைக்கரையில் போட்டு பிழைத்தல் சாதல் இரண்டிலொன்றாக என்று கங்காசலத்தை கொடுப்பார்களாம் என்று நம் திராவிடதேயத்தோர் அந்தக பரம்பரையாய் சொல்வது இதுபற்றி என்க. தத்தாத்திரையர் பகவதவதாரமென்பதை பாகவதப்பாட்டால் உணர்க. காசிமரணத்தைக்கருதி ஆங்குவதிந்து * "மிக்கவிறைநிலையும்" என்றபடி ஈச்சுவரனையும் தன்னையும் நெறியையும் தடையையும் அவனது சர்வஜ்ஞத்துவத்தையும் இவனது கிஞ்சிஜ்ஞத்துவத்தையும் உணர்ந்து † உயிர்ப்பாரம் உயிர்ப்பாரமே அது தொலையுங்காலம் எக்காலமென்று உடலில் உவர்ப்புற்று ‡ "துப்புடையாரை" என்றும்

---

* மிக்க விறைநிலையும் மெய்யா முயிர்நிலையும்
தக்க நெறியுந் தடையாகித் — தொக்கியலும்
ஊழ்வினையும் வாழ்வினையு மோதுங் குருகையர்கோன்
யாழினிசை வேதத் தியல்.

† உயிர்ப்பாரம்-உடல்.

திராவிடவேதம் முதலாயிரம்.

‡ துப்புடையாரை யடைவதெல்லாஞ்சோர்விடத்துத் துணையாவரென்றே, ஒப்பிலேனாகிலும் நின்னடைந்தேனானைக்கு நீயருள் செய்தமையால், எய்ப்பென்னை வந்துநலியும்போதங்கேதுமானுன்னை நினைக்கமாட்டேன், அப்போதைக்கிப்போதேசொல்லிவைத்தேன் அரங்கத்தரவணைப்பள்ளியானே.



* "சாமிடத்தென்னை" என்னும் பெரியார் அருளியவாறு சர்வேசன் நாமத்தைச்சொல்லி புகல்புகுந்து தமதுஉடலுக்கு நோய் வந்தடுத்து அது இனிக்கொல்லாது மீளாது என்று அறிவுமிறந்த உடனே தர்பசயனத்தில் மேலேகூறிய தத்தாத்திரையபெருமானது திருவடியில் முடியை வைத்துப்பிராயோபவேசம்செய்து உயிர்மாய்வார் எய்தும் பேறுயார்க்கும் அரிதாகும்.

## ஸ்ரீஆரியப்பப்புலவர் பாகவதம்.

### மாயவனமிசாவதாரமுரைத்த அத்தியாயம்.

"வித்தைசேர்தத்தாத்திரையருவ்விண்ணவர்போற்ற
அத்திரிக்குரன்மகவெனவுதித்தலர்க்கருக்கும்
பத்தியாலரிஞான்வரப்போற்றுவோன்றனக்கும்
சித்தமைத்தெரிந்துரைத்தனன்றரணிமேலிறைவன்."

ஸ்ரீகாசியில் அரிச்சந்திரமகாராசன் காத்த மயானமிருக்கின்றது. வீரபாகு குலத்தாராகிய பறையர் இப்போது † அரையராய் விளங்குகின்றார். காசியிலுள்ள கஷட்டியரெல்லாம் கன்னியாமாதத்தில் நவராத்திரியில் துளசி தாஸ் சுவாமிகள் ராமாயண பாராயணம் செய்து அதன் கண்ணதாய அவசரங்களை எல்லாம் ஒன்பது நாளும் அவரவர்தோட்டத்தில் வேடம்பூண்டு நடித்துப் பத்தாம் நாள் ராவண சங்காரம் செய்து உற்சவபூர்த்தி செய்வர்.

ஸ்ரீகாசியிலுள்ள விச்வநாத சுவாமி, கேதாரேசன் பிந்துமாதவன், அநுமான், கணபதி அன்னபூரணிகோயில்களில் விசுவநாதசுவாமி கோயில் சற்றே பெரிதா

---

* சாமிடத்தென்னைக் குறிக்கொள்கண்டாய் சங்கொடுசக்கரமேந்தினானே, நாமடித்தென்னையனேகதண்டஞ் செய்வதாநிற்பர் நமன்றமர்கள், போமிடத்துன்திறத்தெத்தனையும்புகாவண்ணநிற்பதோர்மாயையல்லை, யாமிடத்தேயுன்னைச்சொல்லிவைத்தேனரங்கத்தரவணைப்பள்ளியானே.

† அரையர்—அரசர்.

யுள்ளது உதைக்காலம் தொடங்கி அர்த்தசாமம் வரையி லும், அபிஷேகமும் பூசையும் ஓயா. விசுவநாத சுவாமி யை எல்லாரும் பூசிக்கலாமென்பதை எல்லாரும் அறி வார். விசுவநாதன் பிந்துமாதவன் தண்டாயுதன் மணி கர்ணிகை அன்னபூரணி என்றிவரை முறையே சேவித் தல் வேண்டுமென்ப வாரணாசியில் எத்தேயத்திலுமுள் ள மடாதிபதிகள் எல்லாருக்கும் மடங்களும் தோட்டங் களும், அரசர்களுக்கு அரண்மனைகளும், அவரால் இய ற்றிய அன்னசத்திரங்களும் நாட்டுக்கோட்டையார் சத் திரமும் பொதுச் சாலைகளும் துளசிதாஸ் சுவாமிகள் கபீர்தாஸ் சுவாமிகள் முதலிய அநேகபாகவத சிரேஷ் டர்கள் மடங்களும் இருக்கின்றன. அவற்றுள் நாட்டுக் கோட்டையார் சத்திரத்தில் நான்கு நாளும் பண்ணியங்க ளொடு(எ௰)இருநாமங்களை அருந்துகின்றனர். நாட்டுக் கோட்டையாரில் தனிதாய்க் கங்காயாத்திரைசெய்வோர் ஒவ்வொருவரும் அச்சத்திரத்தில் ஒவ்வொருவருக்கு ஒருவருக்குத்தக்கு அன்னத்துக்குப்போதுமானபடி வரும்படிக்கு ரூபாய் - கூ முதல் வைக்கவேண்டுமென் பது விதியாம் ஏகதேசத்தில் ஒருவரோ யன்றி பலரும் சேர்ந்து ஒருமைப்பட்டு நடத்துவதினால் நாட்டுக்கோ ட்டையார் தருமங்கள் யாண்டும் சிறப்பாய் நடந்தேறி வருகின்றன. சூத்திரசாது என்றபடி தர்மத்தாலே நாட் டுக்கோட்டையார் சன்மமே சன்மம் அவர் தர்மமே தர் மம் கட்டிக்கணக்குப்பார்க்கும்போது அவர் அதர்மமே அதர்மம் பிறர் பொருளை வவ்வி தர்மம் செய்யின் பொரு ளுடையான் மேலே புண்ணியமும் வவ்வினவன் மேலே பாபமும் சேரும் யாசகம் செய்து தர்மம் செய்வோர் எவ்வளவு பாகம் பலன் எய்துவர் என்பதை யோசிக்க வேண்டும் நாட்டுக்கோட்டையாரில் சிலர் வைஷ்ணவ சின்னங்கள் தரியாவிடினும் வேதாந்த தேசிகன் திரு வடிகளில் விசேஷமாய் ஈடுபட்டு சொரூபஞான முடை யவர்களாக இருக்கின்றனர் நமது குலத்தில் ஒருவைஷ்ண



வன் பிறக்க வேண்டுமென்று பிதிரர் பிரார்த்திப்பரென் று தத்துவம் சொல்லும் விஷ்ணு புராணம் கூறும் விஷ் ணுபுராணமே தத்துவம் சொல்லுமென்று ஸ்ரீமத் சங் கராசாரியசுவாமிகள் கூறினர்.

திராவிடதேயத்தோரில் கங்காயாத்திரை செய்தோ ரைக் கணக்கிட்டால் நாட்டுக்கோட்டையாரே மிகுதி யாவர்.

அநுமந்த கட்டத்தில் திராவிடதேயப் பார்ப்பார் அநேகர் குடியேறி இருக்கின்றார். இனம் பற்றிச் சூழா மல் அவருள் தேவிபூசைசெய்யாதாரை அறிந்துசேர்க. வாரணாசியில் நள்ளிரவிலிறப்பினும் உடனே தகனமும் சஞ்சயனமும் செய்து வீடுவருவர். துறவிகள் வீடலை யின் கருங்கற் பலகையால் பெட்டிசெய்து அதனுள் சர்மவிக்கிரகத்தை வைத்து விருப்படியாவும் செய்துப் பெட்டியை நாற்புறமும் இருப்புக்கம்பியால் விசித்து அதனைத் தோணியிலேற்றிச் சானவியிலில் விடுவர். தக னம் செய்யக்கூடாத சிறுமகவு இறப்பின் அதனோடு ஒரு கருங்கல்லைச்சேர்த்துக் கட்டி ஆற்றில் விடுவர். அநா திப்பிரேதங்களை ஒற்றைமூங்கிலோடு சேர்த்து கயிற்றாற் சுற்றி இருவர் சுமந்து கங்கையில் பெய்வர்.

ஸ்ரீகாசியிலுள்ள சிஷ்டபிராமணரும் இடையர் கொ ணர்ந்தகங்காமிர்தத்தை சிராத்ததினத்திலும்உபயோகி ப்பர். அதுமாத்திரமோ அவர் பறைத்தெருமத்தியிலும் கூசாமல்செல்வர். சூத்திரசாதியாருள் இடைச்சாதியார் சாஸ்திரத்தால் உயர்த்தப்பட்டவர். மனைவினை முடிந்த சூத்திரமகளுக்கு சூத்தீ என்றும் அஃது முடியாதவளு க்கு சூத்ராஎன்றும் இடைமகளிரில் இருநிறத்தார்க்கும் மகாசூத்திரீ ஆபிரி என்றும்பெயர்.

சிவபக்தர்கள் அறுபத்துமூவரிலொருவராகிய திரு நாவுக்கரசுசுவாமிகள் கைலாயம் சாரச்சென்றபோது ஸ்ரீகாசிவந்து விசுவேசனைத் தரிசித்து யாதுகாரணத்தா

லோ தனியே பதிகம்பாடாராயினர். இதனை பெரியபுரா ணத்துள் அவர் புராணம் கூறும்.

இப்பாட்டு அதன் கண்ணது.

"அன்னநாடுகடந்தகங்கைகடந்துசென்றுவலங்கொண்டு
பின்னுவேணியர்வாரணசியிருப்பினேநீடணிந்துடன்
பின்னணைந்தவர்தம்மையங்கணொழிந்துகங்கைகடந்துபோய்
மன்னுகாதல்செய்காவின்மன்னவர்வந்துகற்சுரமுந்தினர்."

கங்கை எடுப்பது திரிவேணியிலாயினும் அதற்குப் பாத்திரங்கள் காசியில் வாங்கவேண்டும். பட்டிலும், நார்மடியிலும், ஜிழிலிலும், ஸ்ரீராமநாமம் முழுதும் பதித்த உத்தரிகங்களும், காசிபட்டும் வாரணசியில் விற்கப்படுகின்றன. காசிப்படம் கண்ட அத்தியாயமே ஒன்று காசிகாண்டத்திலுளது.

வாரணசியில் முத்திமண்டபம் முதலிய அநேகஸ்தான விசேஷங்களும் அநேக தீர்த்த விசேஷங்களும் உள்ளன. அவற்றை எல்லாம் காசிகாண்டத்தை படித்துக்காண்க. இதிவ்வியாப்தில் பெருகும்.

காசியாந்து மரணமுக்தி என்று கூறினும் ராமோபநிஷத்தாலே ஸ்ரீகாசிக்ஷேத்திரத்துள்சுட்டிக்கூறப்பட்டிருக்கின்ற அவ்விடத்திலல்லது அந்த க்ஷேத்திரத்துள் எவ்விடத்தில் இறப்பினும் உயிர்விடு பெறுமென்று கலையுணர்ந்தோர் துணியார். இதுநிற்க,

**கங்கையின் மகிமையைச் சிறிது உரைப்பாம்.**

இவ்வண்டம் குக்குடகருவியைச் சேர்த்தாற்போல உருண்டையாய், இப்புவியினின்று நாற்றிசையும் கீழும் மேலும் ஐம்பதுகோடியோசனைதூரமுள்ளதாய்ச்சத்தாவரணத்தால் மூடப்பட்டதாயிராநின்றது. வராணத்தால் மூடப்பட்டது என்று உரைப்பாருமுளர். சர்வேசன் உலகளந்தருளியகாலே சத்தியலோகம் சென்ற காலை பிரமன் மஞ்சனமாட்டி அத்திருவடிப்புனலைத் தனது கமண்டலுவிலேற்று அவ்வுலகில் பெருகச்செய்தனன்



* அண்டகோளகைப்புறத்ததாயகிலம்" என்றபடி மேலோங்கியதிருவடி அண்டத்தைப்பொதுத்து அப்புறம் சென்றமையால் முதலாவரணமாகிய புனல் அப்புழை யூடு ஒழுக பிரமன் திருவடியை மஞ்சனமாட்டி அம்புனலைத் தனது கமண்டலுவிலேற்றுச்சத்தியலோகத்தில் பெருகச்செய்தனன் என்பாருமுளர். எனவே கங்கை ஸ்ரீவிஷ்ணுபாத பிரக்ஷாளன தீர்த்த மென்பதும் அது மகாதீர்த்தமென்பதும் சான்றோர் எல்லாருக்கும் ஒப்பமுடிந்தது. அதனை ஆறுநிகரில் தேவிபத்தாகிய காளிதாச மகாகவிஞரும் "கோகத்தியா பிரமகத்தியா" என்னும் சுலோகத்தால் கூறினர். இச்சுலோகம் அவர் பிரமஹத்தம் உண்ணச் சென்றபோது சொல்லியது.

மத்துவமதத்தார் மகாதீர்த்தமாகியகங்கை சர்வேசனது சிர்பாததீர்த்தமாயினும், சிவன் சிரசினின்று ஒழுகலால் சிவநிர்மாலியமென்னும் தோஷம் கற்பித்துச் சிவநிர்மாலியமாகிய கங்கையும், அமேத்தியமாகிய அசுவத்தமும், உச்சிஷ்டமாகிய பாலும் தேனும், ஏகதேசகிரகணம் என்னும் சிறப்புவிதியால் எல்லார்க்கும் அருகமாகுமென்ப. ஏகதேசகிரகணம் ஏகதேசதியாச்சியம் என இரண்டு விதிகள் உள்ளன. தென்னுசாரியார் சம்பிரதாயத்துள்ளார் சஙைவியையும், பஞ்சகவ்வியத்தையும், திருவணையையும், சடைச்சார், சாணிச்சார், உபபுசார் என்று தோஷாரோபணம் செய்து மகாபாவன தீர்த்தமாய்த்தமது காலம்மிய நீரைத்தாமும்சுவிகரிப்பர்.

சுலோகம்.

அத்தம் பாக்கைத ரியான்னம்
அத்தம் பாஸீர் ஜலம்
அத்தம் விஷ்ணுபத தியானம்
அத்த மேகாதசி விரதம்.

---

* அண்டகோளகைப்புறத்ததாயகிலமன்றளந்த
புண்டரீகமென்பதத்திடைப்பிறந்தபூமகளூர்
கொண்டதீர்த்தமாயான்கொளப்பதிரதன்கொணர
மண்டலத்தலந்தடைத்ததிம்மாநதீமாதே.

சுலோகம்.

ஸர்வபாவிப்ரகோஷ்டீச
கங்காஸாகரஸங்கஸாலபம்
ஸர்வபாவைத்நவிபத்தி
ஸர்வபா பூர்தீசநா.

ஸ்ரீ அயோத்திமாநகரை ஆண்ட சகரமகாராசன் அயமகயியற்றுவான் பூவலம் வருமாறு பரியைவிட இந்திரன் அதனைப்பற்றிப் பாதாளத்தில் யோகத்தில் எழுந்தருளியிருந்த பகவநிஷிசாகிய கபிலமகாமுனிவர் பக்கல் விடுத்துச் செல்ல அரசன் தனக்குரியவரிருவரில் ஒருத்தி புத்திரராகிய அறுபதினாயிரவரையும் ஏவ அவர் கட்டு தொட்டு மண்ணுங்கி பாதாளம் சார்ந்து கபிலமாமுனிவரிடம் இவுளிகண்டு, அவர் திருவுளம் கலங்கச்செய்ததும் அம்மாமுனிவர் விழித்தியால் அறுபதரும் சாம்பராயவிய சகரமகாராஜன் அதனை ஒற்றரா லுணர்ந்து, மற்றொருத்திப்புதல்வனாகிய அசமஞ்சன்குமாரனாகிய அஞ்சுமானைப்போக்க, அவன் சென்று கபிலரைவணங்கி குதிரைகொணர, சகரன் வேள்விமுடித்துப்போனாகிய அஞ்சுமானுக்கு முடிசூட்டி விண்ணேறினன். அவ்வஞ்சுமான் அரசாண்டு தனது புத்திரனாகிய திலீபனுக்கு முடிகவித்து, தவம் செய்வான் வனமேக, "அத்திலீபன் ஒருகாலை தேவகாரியமாய் தேவலோகம் சென்று மீண்டுவருங்கால் கற்பகத்தருநிழலில் அமர்ந்திருந்த காமதேனுவைப்பார்த்தும், அதனை வலம்வந்து வணங்காமல், பூத் அப்புனலாடியத்தனது மனைவியைப்புணரவும், வையத்திலுறமெஞ்சுமென்றஞ்சியும் விரைவாய்வர, அக்கோபினந்து தனது வழிசமான ஒரு ஆனைப்பூசித்தாலலது மக்கட்பேறு பெறுவாயல்லை என்று சாபமிட, அதனை இறைவன் பகவான் வசிட்டமுனிவரால் உணர்ந்து, அவர் நியமனப்படி அவரது அக்கினிகோத்திர பசுவைப்பூசித்துப் பிதிர் பக்தியுள்ள பகீரதமகாராசனைப்பெற்று, அவனுக்கு அரசீந்து மாதவமிழைப்பான் அரணியம் சென்றனன்.



பின்னர் அப்பகீரத சக்கரவர்த்தி முனிவர் சாபத்தால் அவிந்த சகர புத்திரராகிய சாகரர் அறுபதரும் நற்கதிபெறுவான் உபாய மெண்ணி ஒருமலைச்சாரலில் மாதவம் செய்தனன். அத்தவத்தை மகிழ்ந்து பிரமன் எதிர்தோன்றி யருளச் சக்கரவர்த்தி அப்பிரமனைத் தொழுது, சாகரர் நற்கதி அடையும் பொருட்டு, கங்கைபுவிக்கண் வருதல் வேண்டுமெனப் பிரார்த்திக்க, அந்நான்முகன், உலகளந்த உத்தமனது பெருவிரலி னின்று தோன்றி யான் செய்மாதவத்தால் எனது உலகில் பெருகும் மகாநதி நின்னுலகு, வரின் அதன் வேகம் தாங்கக் கண்ணுதலுக் கல்லது பிறருக் கரிதென்று ஓத, வேந்தன் சிவனையும் கங்கையையும் குறித்துத் தவம் செய்தனன். சங்கரன் அவ்வரசனுக்கு எதிர் தோன்றிக் கங்கையைப் பரிப்பதாய்ச்சொல்ல, மந்தாகினி தன்னைத்தாங்குவதாய்த் துணிந்த சம்புவும் பாதாளத்தில் அழுந்துமாறு அதிவேகமாய் வர சிவன் அதனைச் சடையில் ஒளித்தனன். பகீரத பார்த்திபன் தனது பெரு முயற்சியால்வந்த வாநதியைக் காணாமல் திகைத்துநிற்க, அப்புராரிகலங்காதி என்று சிறிதுவிட, பாகீரதிவந்து மானதவாவியைநிரப்பி, அதனின்று கலாதினி, பாவனி, நளினி என்று முப்பிரிவாய் கீட்டிசையினும், சுசக்ஷு, சீதா, சிந்து என்று முப்பிரிவாய் மேற்றிசையினும் சென்று அளகநந்தை என்ற நாமத்தோடு மன்னவன் தேர் காற்சுவட்டோடு வந்து, வேகத்தாலே சன்னுமகா விருஷியார் செய்த வேள்வியை அழிப்ப, அம்முனிவர் அவ்வாற்றை ஆசமனம் செய்தனர். பின்பு அரசன்வேண்ட அவ்விருஷியார்செவியால் விடுப்பச்சென்று சாகரர் சாம்பரிற் றோய்தலும் அவர் எல்லாம் சுவர்க்கம் சார்ந்தனர்.

பகீரதன் கொணர்ந்தமையானும், சன்னுமா முனிவர் செவி வழிவிடுத்தமையானும் அவ்விருவர் புத்திரி என்பது தோன்ற பாகீரதி, சானவி என்று அளகநந்

னைக்குப் பொருளாயிற்று. இதற்குச் சுருதி ஸ்மிருதி இதிகாசபுராணங்களின் பிரமாணம் காண்க.

## இருசமயவிளக்கம்.

### கிருத்திவாசன் உபாசகனென்ற பரிச்சேதம்.

பனிப்பிளம்பிறைவேணியான் றன்னையம்பரத்தோர்
அனைவருக்கியகாரணன் திருவருட்கமைந்தாய்
மனுவிலங்கவன் மந்திரரகசியம்வைத்தாய்
புனிதமாயவன்பாததீர்த்தத்தையும்பொறுத்தாய்.

மகிமைதங்குமவ்வாமனன் வளர்ந்திடுமந்நாள்
சகலமங்கலங்களையாற்பங்கயாசனத்தான்
திகழுமன்புடன் திருவடிவிளக்கியசெய்கை
அகிலமேனுமேனைப்பவித்திரமாக்குதைக்கன்றோ.

விஷ்ணுபுண்ணியசன் மகீமேவினையேயென்
றஞ்சதப்புராழஞ்செசாலுமிருக்கின்றுன்றுன்றீச்
செஞ்சொட்டகத்தேதமோடொன்றுணவித்தியாயத்
திஞ்சமைந்துசோரா துமாயமைந்திடும்வருக்கம்.

"மனுவிலங்கவன் மந்திரரகசியம் வைத்தாய்" என்னும் வேதப்பொருட்கிசைய சிவனுக்கு அயன் திருமந்திரோபதேசம் செய்தமை ஸ்ரீநாரதீய புராணம் கூறும். "அகிலமேனுமேனைப் பவித்திரமாக்குதைக்கன்றோ" என்னும் பொருட்கிசைய "பவாங்கம்" என்னும் சுலோகத்தால் ஸ்ரீமத்ராமாயணம் கூறும். இச்சுலோகத்துக்கு வேறுபொருளுரைப்பாருமுளர்.

## ஸ்ரீஆரியப்பபுலவர் பாகவதம்.

### கபிலர்தத்துவமுரைத்த அத்தியாயம்.

"பலியளந்தவன்பொன்னடித்தாமரை
தலமுகந்தசையுந்தன் புனல்பொன்னின
அலர்கடாமுடி மீதணைத்தன்றுசொல்
சிவனுமேர்சிவத்தெத்திச்சூத்தனை."

இப்பாட்டு வடமொழி ஸ்ரீபாகவதம் "யச்சௌச" என்னும் சுலோகத்தை முற்றும் ஒத்தது. இச்சுலோகத்



தை வைதிக சமயத்தோரெல்லாம் கீழாடித் தென்றிசை நோக்கி உட்கார்ந்து மயிர் புலர்த்தும்போதுசொல்வர்.

அரசனென்ற பெயர்மாத்திரம் வாய்ந்த ஒருவன் பின்பு அரசும் பெற்றாற்போல சிவன் என்று நாமமாத்திரம்பெற்ற சங்கரன் எம்பெருமான் ஸ்ரீபாதபிரக்ஷாளண தீர்த்தத்தைச் சிரசில் தரித்தபின்பு அந்நாமப்பொருளாகிய மங்களத்தையும் அடைந்தனனென்று ஸ்ரீநாகவாரிகளும் உரை எழுதினர். அதுபற்றி அத்வைத சமயத்தோரெல்லாம் அச்சுலோகத்துக்கு அப்பொருளே கொள்வர். இதனை மறுத்து விஷ்ணு காலலம்பிய கங்காஜலத்தைச் சிரசில் தரித்தமையால் சிவன் தனதுப்பிராபவத்தால் மங்களம் குறைவடைய இல்லையென்று இடர்ப்பட்டுப்பொருளுரைப்பாருமுளர். அது பொருந்தாது.

ஸ்ரீமத் வான்மீகத்தில் கங்கோத்பத்தி சொன்ன இடத்தில் விஷ்ணுபாதத்தினுண்டாயிற்றென்றுசொல்ல இல்லை. ஒன்றனை ஒரே இடத்தில் கூறுதல் இவர்க்கு இயல்பாகலானும் கங்கை தோன்றியபோதே சிவன் சிரசில் வாராமையானும் என்க. ஸ்ரீ அயோத்தியாகாண்டத்தில் "விஷ்ணுபாதச்யுதாம்கங்காம்" என்னும் சுலோகத்தால் ஓதியருளினார்.

## ஸ்ரீ ஆரியப்பப்புலவர் பாகவதம்.

### நாவலந்தீவின் வளனுரைத்த அத்தியாயம்.

சாற்றுகங்கையைமனத்திடைநினைக்கினுந்தனிப்பேர்
போற்றிடினுமழிப்பாயினுங்காணினும்பொருந்தி
ஏற்றமாயகன்னீராடாழ்கினுமிவையும்
பெற்றையார்புரிப்பாரவர்முத்தியைபெறுவார்.

கங்கையாற்றிடைத்தங்குலப்பிதிர்க்களைச்சுருதி
அங்கையாற்றருப்பணமுவந்தொருமுறையாற்றின்
பங்கமாறநாகத்தழுந்தபடி நுமைக்குலத்தோர்
செங்கண்மாலபதஞ்சேர்குவரென்றுதலின்னம்.

தீக்குணின்றல்லறத்தினராய்ப்பழிசெப்பும்
தீக்கொடுந்தொழில்செய்குருமிதந்திடற்சிறிதா
ஆங்கையென்பொருவகையிலுலவருகங்கையங்கடலின்
ஊக்கமுற்றவரும்பர்தமுலகுபுக்குறைவார்.

இறந்துளோர்களுக்கங்கையினையும்புகினமையோர்
உறைந்தநாட்டிறைவராவொளிறுயிரொழிவதன்முன்
நிறைந்தவன்பொடுகங்கையிற்சென்றுநீராடச்
சிறந்துளோரொளிவர்பெறும்பேற்றையார்தெரிப்பார்.

வடமொழி ஸ்ரீபாகவதத்தில் சுகபிரம மகா விருஷியார் கங்கையைக்குறித்துச் சுருக்கமொழிய விரிப்பர்.

## ஸ்ரீபாத்மோத்ர புராணம்.

## திரிவிக்கிரமப்படலம்.

மலையனாயன்றாவெனதமனாலந்தமளையாட்டிமற்றுக்கேட்டி, தலையனாயன்கமண்டலநீர்தனைக்கொடயன்பதங்கழுவுதண்ணீர்மேக்க, மலையனையனருளதனுனீடாழியெனப்பெருகிநிறைந்ததன்னர், தலையனையன்காதலர்களுடனருந்திக்குளித்தாடிக்களித்தான்மன்னே.

பரமனடிப்புனிதுலவசப்பாவனக்குநிசெய்திடும்பொருட்டிப்பண்ணடமெரு, சிரமதனிலனகநந்தையெனவிழுசிவ்வுலகுசங்கரதேவியாகிச், சரமதனின்பிருதேவருலகினின்மந்தாகினியாய்ச்சக்கிரிசேயிப், புரமதனிற்போகவதியெனப்பொலிந்ததிந்நதியின்னுங்கேட்டி.

பொன்மலையினச்சிநிறைபொன்னமயின்புனலதனைப்போற்றிவாழ்த்தி, என்றலையிலணிகருக்கவெழிற்றேவருடமொரளநீராகாலம், அன்றலைவைத்திட்டதனாற்புகளைகண்டேனுச்சமத்தின்கத்தங்கண்டேன், பொன்றலைவிட்டொளியடைந்தேன்புனிதர்புகழ்ந்திடும்பேற்றைப்பொருந்திவாழ்ந்தேன்.

சிவமோக்கமங்கலையையெனக்கூட்டேவிக்கியல்பிற்சிறந்தசேமம், சிவவென்னவுண்டாகவிருவளமைந்ததொதாளுசிருத்தாமீச்க்கும், சென்னெனவந்தவவனிபிருந்தமங்கலசத்தார்மீவனிமாதிர், சிவனென்னத்தப்பொளடைந்தேன்றிருமாலினடியத்தமிழ்த்திரோட்டநேரனே.

சிவ என்னும்பாட்டு "புவியனந்தவன்" என்னும் பாகவதப்பாட்டின்பொருளைத்தழுவியது.



ஸ்ரீ விஷ்ணு பாதபிரக்ஷாளண தீர்த்தமென்று வேத சாஸ்திரங்களால் அறிக்கப்படும் கங்கை பார்வதிதேவி கைவிரலினின்று தோன்றிற்று என்று கந்தபுராணம் கூறும். காலவித்தியாசம் புருஷவித்தியாசம் தேசவித்தியாசம் இம்மூன்றும் புராணங்களுக்கு இயல்பாயுள்ளன. அவற்றை யுணர்ந்து சுருதிஸ்மிருதி இதிகாசங்களுக்கு விரோதமின்றிப் பொருள் கோடல் சான்றோர் கடன்.

## காசிகாண்டம்.

## கங்கையின் சிறப்புரைத்த அத்தியாயம்.

ஆதியுகத்தில்யோகத்தான்முத்தியடையுமதன்பின்னை
ரோதயுகத்திலருந்தவத்தான்முத்தியுளதாமோங்கிய
சோதிஞானத்தான்முத்திமூன்றுமுகத்திற்றன்னுயிர்
காதலொடுங்கலியுகத்திற்கங்கைபடியின்வீடடையும்.

அங்கின்மலர்தூய்சிவலிங்கமருச்சித்தோர்களமரரெல்லா
மின்பமெய்தவழிப்பட்டபலனெய்துதல்போலடைந்தவர்தம்
துன்பமகற்றும்புனற்கங்கைதோய்ந்தோர்கடவுணதியினைத்து
நன்குபடியும்பேறனைத்துமொழியாதினிநாநவிலுவராம்.

கடவுட்கங்கைநதிப்படிவான்செல்லவொருவன்கருதுமுனை
யிடர்சூர்பாவமலனையொழிந்தியாண்டுசெல்வோமெனக்கருதும்
விடயமதனின்மனம்போகாதடக்கிஞானவெறுவெளியி
லடையுமவருங்காசிநகரடைவார்பெறும்பேறடையாரால்.

கும்பமொருகைதனிலேந்தியொருகைகுளிர்பூம்புனல்சொரியத்
வம்பொற்கரமொன்றருள்வரதமபயமொருகையாகவமைத்
தம்பர்மதியமொருகோடியொளிர்வதென்னவொளிபரப்பும்
பம்புதிரைவான்புனற்கங்கைதனையுளத்திற்பாவித்தே.

அருவிசேருமருக்கியமேமுதலவழிபாடினிதாற்றித்
தெருளாலென்னைநான்முகனைத்திருமாறனையுமைவானை
மருளிறவத்துப்பவிரதனைமலயச்சாந்தால்வாலரியால்
விரகினமைத்துக்கெழுமலர்தூய்விருப்பினோடும்பணிந்தேத்தி.

கன்னிவாழைக்கனிநூற்றுக்கனியெட்டயுசெழுந்தவசோ
பின்னமறையோர்மகிழ்வெய்தவியற்றுதலிசீருமை
யன்னந்தவனீர்க்காக்கைதுரண்டமுதலவணிசிள்ர்செய்
பொன்னின்மாவில்வெள்ளிதவிலமைத்துக்கங்கையிடைப்போக்கி.

இன்னவாறுமகிழ்சிறப்பபூசைபுரிந்தோரொழுபிறப்பு
முன்னவரியகொடும்பாவமனைத்துநீக்கிமுதுக்குறைவாற்
றன்னையுணர்ந்துமுழுதுலகந்தாளுபுரையுந்தவத்தோனுங்
அன்னவரியபேரின்பத்துறைவாய்ப்படிந்துதிளைத்திடுவார்.

கங்கையின் எஇம்புவிழுந்த அத்தியாயம்.

சழிந்தோரொன்பதினாபுரட்டுக்கங்கையாற்றினெத்துணைநாள்
றழிந்திடாதுகிடந்திடுமற்றந்நாள்காறுமாங்கவர்கள்
விழைந்தவன்போடாமகளிர்வேய்மென்றடந்தோளணைகர்ந்து
கழிந்தசேறன்முருநுயிர்க்குந்தருவினிழல்வாழ்குவரால்.

வெய்யகொடும்பாதகம்புரிந்துவிளிந்தோரொன்புகங்கையிடைப்
பெய்யினவர்தீவினையொருவிப்பெறுதற்கரியவான்கதிசேர்ந்
துய்யுந்தன்மையுரைத்திடுவலுலகம்பூத்ததிருவுந்தி
யையன்றொழுதகேட்டிடுமாமனேநுயர்த்தோனறைகுவனுள்.

புயல்வாய்தடவுமடற்கமுகின்புனிற்றுப்பசுங்காய்க்குலைசிதறக்
கயவாய்வாளைக்களிறுகருங்கலிங்கண்டிலெரருமறையோன்
மயநீர்கேள்வித்துறையனைத்தும்வழுக்கிமறையோர்நெறிசிதைந்
பயிலாநூல்ப்படிற்றொழுக்கம்பயின்றுதிரியுமந்நாளில்.

நல்கூர்ந்தழுதுங்கைக்கோளன்மனைவியொருத்திநலனுகர்ந்து
செல்லற்கரியகொடுங்கானிற்கரந்துசேய்ச்சென்றடிவருந்தி
யல்லல்கூர்ந்தயிழிதுயிலுமறையோன்றன்னையயிலெயிற்றுக்
கொல்லுஞ்சினத்திறலுருமுவையாண்டுக்குறுகிக்கொன்றதுவே.

எரிகட்பருவாய்ப்புலிப்போத்தாலிறந்தமறையோனிடக்காலை
விரிமென்சிறையகழுகொன்றுநவ்விவிசும்பினேகுங்காற்
றிருகுசினத்துநெடும்வேறொர்திவாய்க்கழுகுமதித்திடலும்
பெருகுதிரைவான்புனற்கங்கைப்பேரியாறதனில்வீழ்ந்ததுவே.

இறந்தமறையோன்றனைப்பற்றிமெரிசெய்குஞ்சிகமன்றுதாப்
பிறங்குநிலவுக்கதிருயிழும்பிறைவாளெயிற்றுக்கூற்றுவன்முன்
கறங்கிவிதுயஞ்சுழன்றயாக்கடிதிற்கொடுபோயுய்த்திடலு
மறந்தாழ்நெஞ்சிற்சித்திரகுத்திரனைநோக்கியறைந்திடுவான்.

இன்னோனிழைத்தவிருவினையும்வழுவாதுரைத்திடெனவோடு
மன்னோர்மறவிதாள்வணங்கியையமறைதேரந்தணர்க்குச்
சொன்னவொழுக்கநெறியனைத்துஞ்சுறந்துபிறனில்விழைந்தெவரு
முன்னவரியபாவமிவன்புரிந்ததனைக்கழுடியாதால்.



கற்பின்மகளிர்தமைவலிதிற்கலந்துங்கள்ளுண்மாந்தருட
னற்பினயின்றுங்கொலைகளவுபுரிந்துமறவோர்தமையிகழ்ந்தும்
விற்கலாகாச்செம்பஞ்சிநறவுபகர்ந்தும்வெண்ணிணத்தித்
பற்கண்மறையத்தசைநுகர்ந்தும்பன்னாள்களிப்பினிருந்தனனால்.

எரியுங்கொடியாவுரவத்திற்கற்பகாலமிவன்கிடத்தற்
குரியனென்றுஞ்சினங்கதுவியெரிவாய்நரகிலுய்த்திடெனத்
திருகுசினவெங்கால்படர்சிக்கயாத்துமறையோனைக்
குருதிவாயிற்கொப்புளிக்கக்குத்திரகின்மடுத்தினரால்.

உய்க்குங்காலையவனிடக்காலதனையொருபசுங்குருதி
கக்குந்திவாய்க்கழுகுபுனற்கங்கையாற்றின்வீழ்த்தியதால்
புக்குநம்தகணமவனைப்பொன்செய்விமானத்தினிதேற்றி
நக்கபகம்பொன்சுடர்பரப்புநாகலோகத்தனில்விடுத்தார்.

அனையகடவுட்பெயராற்றங்கரையிலொன்றனலங்கரித்துப்
புனலினேடுமுளமகிழ்ந்துபுனிதமறையோர்க்களிதளிப்பின்
வினையிவிங்கியப்பசுவின்மயிரொன்றொன்றினுக்குக்
கனைவன்டிமீர்பூந்தருநிழலிற்கற்பகாலமினிதிருப்பார்.

கழுகுதான் தின்ன எடுத்தகால் மந்தாகினியில்வீழு அதனால் அம்மறையோன் நரகலோகம்நீங்கி * நாகலோகம் அடைந்தனனெனில் அங்கங்கள் தோறும் அஸ்தி எடுத்துப்புனிதபாத்திரத்தில்வைத்துப்புதுவஸ்திரத்தால்மூடித்தருப்பைக்கயிற்றால்கட்டி இறந்தோர்க்குத்தாயாதர்களிலாயினும், நெருங்கியச்சுற்றத்தாரிலாயினும் ஒருவன் எடுத்து ஏகவாரம் போஜனம்செய்து, அதனைத்தீண்டியபின்பு புனலும் பருகாமல் ஆசாரத்தோடு வாராசி சார்ந்து, ஆங்குப் பிராமண சமுகத்தில் அநுஜ்ஞைவைத்துக்கொண்டு பாத்திரத்தை அவிழ்த்து, அஸ்திக்கு அபிஷேகம் செய்து புதுவஸ்திரத்தில் வைத்து சலத்துள் அழுந்தும்படி ஒரு சிறுசருங்கல்லையும் சேர்த்துக்கட்டி, நாவாய்மீதேறி மணிகன்னிகா கட்டத்துக்கு நேரே கங்கை நடுவண் தாரையில் பெய்யின், மரித்தோரடையும் பேற்றைக் குணிக்கவல்லார் யார். சபிண்டிகர

* நாகலோகம் - தேவலோகம்.

ணத்துக்கு முன்பாயினும் வருஷாப்திகத்துக்கு முன்பாயினும் கங்கையில் அஸ்திசேர்த்தல் வேண்டும். பின்பு சேர்க்ககூடாது என்று அறநூல் மறுக்குமென்ப. கங்கையில் அஸ்தி சேர்த்ததினத்தில் பிராமண போசனம் செய்து பூரிகொடுத்தல் வேண்டும் மேலே கூறியதாரையை பகிரதபார்த்திபன் தேர்க்காற் சுவடு என்ப.

ஸ்ரீகாசியில் பாகீரதி உத்திரவாகினியாய்ச் செல்லாநின்றது. கங்காயாத்திரைசெய்வோர் கங்கையின் சிறப்புரைத்த அத்தியாயம் உரைத்தவாறு, கங்காதேவியைகும்பம் எந்திப்புனல் தெளிக்கும் விதம், இருகரமும், அருள்வரதமும், அபயமும், செய்யும் விதம் இருகரமும் அமைந்து மனத்தில் தியானித்து அருக்கியம் முதலிய பூசனை ஆற்றி, பகீரதனை இமவானைச் சிவனைப் பிரமனைத் திருமாலைச் சந்தனத்தால் அல்லது அரிசியால் செய்து, புஷ்பாதிகளால் ஆராதித்துத்திருவடிதாழ்ந்து வாழைப்பழம், எள், பயறு, துவரைகளைத் தக்கணையோடு பூசாருக்குத்தானம் கொடுத்துப்பொன்னால் வெள்ளியால் அல்லது மாவால் மீன், ஆமை, அன்னம், தவளை நீர்காக்கை, கொக்குமுதலியவைகளைச் செய்து சாநவியில்விடவேண்டும்.

பொன் திருடினவனதுகாலினின்றுதோன்றி சாக்ஷாத்பிரமகத்தி செய்தவனது சிரசிலே குருதாரகமனம் செய்தவனோடு வதிந்து சடத்தினிடம் சேரும் கங்கையோ மகாபாதகங்களைப் போக்குவள் என்பர் விசுவகுணாதரிசிய நூலார். ஹிரண்யஹர்த்தவென்பதற்கு ஹிரணியனைக்கொன்றவனென்றும் பொன்திருடினவனென்றும் பொருள்படும். பொன்திருடல் பஞ்சமாபாதகத்தினொன்று. சிலேடையால் அது செய்தவன் முகுந்தன் பிரமகத்திசெய்தவன் சிவன். குருதாரமாகிய தாரையைப் புணர்ந்தவன் சந்திரன் சடம் சமுத்திரம். கங்கையின் நீராடின் குலம்வருமென்பர். சிலேடையால் சிவசாருபம் வருமென்றும் [illegible] வருமென்றும் பொருள்.



கூபோதகத்தில் நீராடினும் சாநவி நினைக்கப்படியாயின் அதனை ஒப்பாய புண்ணியநதி வேறுயாது. சர்வதீர்த்தமயமாகிய சானவியிலும், திருவரங்கம் பெரியகோயிலுள்ள சந்திரபுஷ்கரணியிலும் தீர்த்தமாடும்போது மற்றையப் புண்ணிய தீர்த்தங்களை ஸ்மரிக்கலாகாது என்ப.

சர்வதேவ மயோ விஷ்ணு
சர்வதீர்த்த மயோ கங்கா.

ஆடி அமாவாசை தினத்தில் கங்கையில் நீராடின் பெரும்புண்ணியம் உளதாகுமென்று கூடல் மான்மியம் கூறும். அப்பாகீரதியில் மணிகன்னிகாகட்டம் முதலிய அறுபத்துநான்கு ஸ்நான கட்டங்கள் உள்ளன. மணிகன்னிகை என்பது கங்கையுள் ஒரு தீர்த்த விசேடம். அதனைத்திருமால் சிவனைநோக்கி தவம்செய்துபெற்றனனென்று காசிகாண்டம் கூறும்.

பகைமைபற்றி யொருவனை யொருவன் அதனில் தள்ளிகொல்லினும் இருவர்க்கும் நற்கதி உண்டாமென்பது யாதவப்ரகாசர் துணிபாம். இதனைத் தென்னாசாரியர் குருபரம்பராப்ராபவம் ஸ்ரீஇளை ஆழ்வார் வைபத்தில் காண்க. அதனில் வேதவாக்கியம் வந்திருக்கிறபடியால் ஈண்டுப் பதித்திலம் எம்மனோர் படிக்கலாகாதென்னுங்கருத்தால்.

கங்கைநீராடாத சிறுகுட்டையும் விஷ்ணு பூசை செய்யாததேவதாந்திர ஸ்தலமும் யாண்டுமில இது அவ்விருவர் உயர்வு உணர்த்தி நின்றது. ஸ்ரீகாசியில் துருக்கரெல்லாம்மணவினை செய்யும்முன்னர் வாத்தியம் கோஷிக்கச்சுற்றத்தாரோடு வந்துகங்கைமாநதியைப் பூசிப்பர். கங்கையில் ஸ்நாநகட்டங்களிலெல்லாம் கங்காபுத்திரர் என்னும் பார்ப்பார் நீராடுவோர்க்குச்சங்கற்பம்சொல்ல உச்சிப்பொழுதுவரையிலும் காத்திருப்பார். அந்நீராடுவோர் தரித்துக்கொள்ளத் திருமண் கோபி சந்தனம் வெள்ளீறுகளை வைத்துக்கொண்டு மிருப்பார்.

இப்பதிகத்தால் கங்கையும் துதிக்கப்படுகிறபடியால் ஈண்டுப் பதித்தாம்.

## பெரியாழ்வாரருளிச்செயல்.

### எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

### திரிபுடைதாளம்.

தங்கையைமூக்குந்தமயனைத்தலையுந்தடிந்தவென்றாசரதிபோய் எங்குந்தன்புகழாயிருந்தரசாண்டவெம்புருடோத்தமனிருக்கை கங்கைகங்கையென்றவாசகத்தாலேகடுவினைகளைந்திடகிற்கும் கங்கையின்கரைமேற்கைதொழநின்றகண்டமென்னுங்கடிநகரே.

சலம்பொதியுடம்பிற்றழலுமிழ்பேழ்வாய்ச்சந்திரன்வெங்கதிரஞ்ச, மலர்ந்தெழுந்தணவுமணிவண்ணவுருவின்மால்புருடோத்தமன்வாழ்வும், நலந்திகழ்சடையான்முடிக்கொன்றைமலரும் நாரணன்பாதத்துழாயும், கலந்திழிபுனலாற்புகர்படுகங்கைக் கண்டமென்னுங்கடிநகரே.

அதிர்முகமுடையவலம்புரிகுமிழ்த்தியழலுமிழாழிகொண்டெறிந்தங், கெதிர்முகவசுரர்தலைகளையிடறு மெம்புருடோத்தமனிருக்கை, சதுமுகன்கையிற் சதுப்புயன்றாளிற் சங்கரன் சடையினிற் றங்கிக், கதிர்முகமணிகொண்டிழிபுனற்கங்கைக் கண்டமென்னுங்கடிநகரே.

இமையவரிறுமாந்திருந்தரசாளவேற்றுவந்தெதிர்பொருசேனை, நமபுரநணுகநாந்தகம்விசிறும்நம்புருடோத்தமன்நகர்தான், இமவந்தந்தொடங்கி யிருங்கடலளவு மிருகரையுலகிரைத்தாடக், கமையுடைப்பெருமைக்கங்கையின்கரைமேற்கண்டமென்னுங்கடிநகரே.

உழுவதோர்படையு முலக்கையும்வில்லு மொண்சுடராழியுஞ் சங்கும், மழுவொடுவாளும்படைக்கலமுடையமால் புருடோத்தமன்வாழ்வும், எழுமையுங்கூடியீண்டியபாவ மிறைப்பொழுதளவினி லெல்லாம், கழுவிடும்பெருமைக்கங்கையின்கரைமேற் கண்டமென்னுங்கடிநகரே.

தலைப்பெய்துகுமுறிச்சலம்பொதிமேகஞ் சலசலப்பொழிந்திடக்கண்டு, மலைப்பெருங்குடையால்மறைத்தவன்மதுரைமால் புருடோத்தமன்வாழ்வு, அலைப்புடைத்திரைவாயருந்தவமுனிவரவபிரதங்குடைந்தாடக், கலப்பைகள்கொழிக்குங்கங்கையின்கரைமேற் கண்டமென்னுங்கடிநகரே.



விற்பிடித்திறுத்துவேழத்தைமுருக்கிமேலிருந்தவன்றலைசாடி, மற்பொருதெழப்பாய்ந்தரசனையுதைத்தமால்புருடோத்தமன்வாழ்வு, அற்புதமுடையவைராவதமதமுமவரிளம்படியரொண்சாந்தும், கற்பகமலருங்கலந்திழிகங்கைக்கண்டமென்னுங்கடிநகரே.

திரைபொருகடல்சூழ்திண்மதிட்டுவரைவேந்துதன்மைத்துனன்மார்க்காய், அரசினையவியவரசினையருளு மரிபுருடோத்தமனமர்வும், நிரைநிரையாகநெடியனயூப நிரந்தரமொழுக்குவிட்டிரண்டு, கரைபுரைவேள்விப்புகைகமழ்கங்கைக்கண்டமென்னுங்கடிநகரே.

வடதிசைமதுரைசாளக்கிராமம்வைகுந்தந்துவரையயோத்தி, இடமுடைவதரியிடவகையுடையவெம்புருடோத்தமனிருக்கை, தடவரையதிரத்தரணிவிண்டிடியத்தலைப்பற்றிக்கரைமரஞ்சாடிக், கடலினைக்கலங்கக்கடுத்திழிகங்கைக்கண்டமென்னுங்கடிநகரே.

மூன்றெழுத்ததனைமூன்றெழுத்ததனால் மூன்றெழுத்தாக்கிமூன்றெழுத்தை, ஏன்றுகொண்டிருப்பார்க்கிரக்கநன்குடைய வெம்புருடோத்தமனிருக்கை, மூன்றடிநிமிர்த்துமூன்றினிற்றோன்றி மூன்றினின்மூன்றுருவானான், கான்றடம்பொழில்சூழ்கங்கையின் கரைமேற்கண்டமென்னுங்கடிநகரே.

பொங்கொலிகங்கைக்கரைமலிகண்டத்துறைபுருடோத்தமனடிமேல், வெங்கலிநலியாவில்லிபுத்தூர்க்கோன் விட்டுசித்தன்விருப்புற்றுத், தங்கியவன்பாற்செய்தமிழ்மாலைதங்கிய நாவுடையார்க்குக், கங்கையிற்றிருமால்கழலிணைக்கீழேகுளித்திருந்தகணக்காமே.

பாகிரதிக்குப் பாலம் கட்டப்பட்டிருக்கிறபடியால் இனிச் செல்வோர் இக்கரையிறங்கி ஆற்றை நாவாயால் கடக்காமல் 'காசிபோகலாம். பனாரிஸ் ஸ்டேஷனிலிருந்து புறப்படும் புகைச்சாட்டுக்கு அவுடுரோயில்கண்டு ரெயில் என்றுபெயர். அது ஸ்ரீஅயோத்திலக்னோமுதலிய நகரங்களின்மேலே செல்லாநின்றது. ஸ்ரீஅயோத்தியைசுவேதர் அவுடு என்பர். காசியினின்று ஸ்ரீஅயோத்தி (உ௱)மயில் தூரத்திலிராநின்றது.

திருவயோத்தி. முத்திதருநகர் ஏழில் முதலிலெடுக்கப்பட்டதும் நூற்றெட்டுத் திருப்பதிகளிலொன்றாயதும் தாரகவாச்சியன் திருவவதாரஸ்தலமும் ஆகிய சாகேதக்ஷேத்திரம் சரயுமாநதிக்கரைமேலிருக்கின்றது.

ஸ்ரீ வைகுண்டத்துக்கு ஸ்ரீஅயோத்தியெனப் பெயரொன்று வேதங்கூறுமென்ப. ஸ்ரீஅயோத்தி ஸ்ரீவைகுண்டத்தினின்று சுவாயம்பு மநுவால் கொணரப்பட்டு புவியில் பொருந்தாமல் சக்கரத்தாழ்வான் மேலே ஸ்தாபிக்கப்பட்டதெனவும், சரயுமாநதி தென்கரைமுதல் தமசாதீரம் வரையில் அகன்று ஆதிபகவனது அவதாரமாகிய மச்சாகாரமாய் சாகேதம், சத்தி, விமலை என்று நாமங்கள்கொண்டது எனவும், அவந்தியைத் திருவடியாகவும் காஞ்சியை இடையாகவும் துவாரகையை உந்தியாகவும், மாயையைமருமமாகவும், மதுரையைக்கண்டமாகவும் காசியை நாசியாகவும் கொண்ட ஸ்ரீமந்நாராயணனுக்கு ஸ்ரீஅயோத்திமுகம் எனவும், தாரகவாச்சியன் அவதார ஸ்தலமுதல், அயோத்தியாபீடம், இரத்தினமண்டபம், கனகமண்டபம், தருமஸ்தானம், தேவஸ்தானம், அரிஸ்தானம், பிராட்டியார் பாகசாலை, பொக்ஷசாலை, அக்கினிகுண்டம், யாகவேதி, உத்தியானவனம், சித்த பீடம், விஷ்ணுஹரிஸ்தானம், ரமணஸ்தானம், அகஸ்தியாச்சிரமம், பாராசரமுனியாச்சிரமம், மகஸ்தானம், சுக்கிரீவ அங்கதாதிஸ்தானம், வசிஷ்டஸ்தானம், கணேச ஸ்தானங்களோடு பலஸ்தான விசேஷங்களும், தந்ததாவள குண்டமுதல் அநுமத் குண்டம், கஜேந்திரகுண்டம், சீதாகூபம், சுக்கிரீவகுண்டம், விபீஷணகுண்டம், வசிஷ்டை திலோதகைசங்கமம், சீதாகுண்டம், கர்ஜூகுண்டம், வித்தியாகுண்டம், கணேசதீர்த்தம், தசரதகுண்டம், கோசலைகுண்டம், சுமித்திராகுண்டம், யோகினி குண்டம் ஊர்வசி குண்டம், மகபரம் ஆர்பரம், பிரகஸ்பதி குண்டம், ருக்குமணி குண்டம், க்ஷீரோதகதீர்த்தம், தனக்ஷய தீர்த்தம், வசிஷ்ட குண்டம் சக்கரதீர்த்தம், பிரமகுண்டம், ரணவிமோசன தீர்த்தம், பாபவிமோசன தீர்த்தம், வைதரணி தீர்த்தம், கோஷார்க்கம், ரதிகுண்டம், கந்திருவகுண்டம், குசுமாயுத குண்டம், மந்தரேசுர தீர்த்தம், இந்திரதீர்த்தம்,



கோபிரதாரதீர்த்தம், ஆர்காகுண்டம், நாகர்குண்டம், நாராயணகுண்டம், வால்மீகிதீர்த்தம், அரிகுண்டங்களோடு பலதீர்த்த விசேஷங்களும உடையதெனவும், சரயுமாநதி இக்குவாகுபூபதிவேண்டு கோளின்படி பகவான் வசிட்டமாமுனிவர்மானதவாவியினின்று கொணர்ந்தமையாலும், அதுதான் திருவவதாரம் செய்யப்போகிற நிகமசிரரத்நத்தைச்சேவிக்கலாமென்று வந்தமையாலும், அம்மாநதிக்குச்சரயு, வசிட்டை, ராமகங்கை, என நாமங்கள் உள்ளன எனவும், அதனில் சகஸ்ரதாரை சுவர்க்கத்துவாரங்களோடு அனேக தீர்த்தங்கள் உள்ளன எனவும், ஸ்ரீஅயோத்திமாநகரமான்மியம் கூறும்.

பெரியாழ்வாரும் குலசேகராழ்வாரும், தொண்டரடிப்பொடியாழ்வாரும், திருமங்கையாழ்வாரும், நம்மாழ்வாரும், திருவயோத்தியை மங்களாசாசனம் செய்திருக்கின்றார்.

நூற்றெட்டுத்திருப்பதியந்தாதி.

ஆர்க்குமிதுநன்றுதீதானாலுநெஞ்சேநீ
பார்க்கும்பலகலையும்பன்னாதே—சீர்க்கும்
திருவயோத்திப்புயலைச்சீரியமெய்ஞ்ஞானத்
தருவையயோத்திற்பொருளையோர்.

ஸ்ரீமத்கம்பராமாயணம்

நகரப்படலம்.

செவ்வியமதுரஞ்சேர்ந்தநற்பொருளிற்சீரியகூரியதீஞ்சொல்
வவ்வியகவிஞராகவரும்வடநூன்முனிவரும்புகழ்ந்ததுவரம்பில்
எவ்வுலகத்தோர்யாவருந்தவஞ்செய்தேறுவாருறைதரிக்கின்ற
அவ்வுலகத்தோரிழிவதற்கருத்திபுரிகின்றதயோத்திமாநகரம்.

நிலமகண்முகமோதிலகமோகண்ணோநிறைநெடுமங்கலநாணோ
இலகுபூண்முலைமேலாரமோவுயிரினிருக்கையோதிருமகட்கினிய
மலர்கொலோமாயோன்மார்பினன்மணிகள்வைத்தபொற்பெட்டி
யோவானோர், உலகின்மேனுலகோவூழியினிறுதியுறையுளோ யா
தெனவுரைப்பாம்.

உமைக்கொருபாகத்தொருவனுமிருவர்க்கொருதனிக்கொழுந்துமலர்மேற், கமைப்பெருஞ்செல்வக்கடவுளுமுதலோர்கண்டிலா நகராகுமென்பான், அமைப்பருங்காதன்முன்பிடித்துத் தவத்தாற் சந்திராதித்தர், இமைப்பிலர்திரிவரிதுவலாலதனுக் கியைப்பலாமுவமைமற்றியாதே.

அயின்முகக்குலிசத்தமரர்கோனகருமளகையுமென்றிவையயரூர், பயின்றவுற்றபடி. பெரும்பாலுமிப் பெருந்திருநகர்படைப்பான், மயன்முதற்றெய்வத்தச்சருந்தத்தமனத்தொழிற்றுணிநர் மறந்தார், புயலுறுதிருமிசெறிவிமையாடத்திநகர்புகலுமாறெவனோ.

புண்ணியம்புரிந்தோர் புகுவதூறாகக மென்றுமீதருமறைப்பொருளே. மண்ணிடையவதிராகவன்றனதுமறத்தொழில் வளர்த்தார், எண்ணருங்குணத்தினவனிதிருந்தில் வேறுமோர்விடமென்றல், ஒன்றுமோவதனின்வேறொருபோக முறையிடமுண்டெனவுரைத்தல்.

தங்குமாபொருளுந்தருமமுந்துணையாத்தம்புலைப்புலன்களைத்தவிர்க்கும், பொங்குமாதவமுஞானமும்புணர்ந்தோர்யாவர்க்கும் புகலிடமான, செங்கண்மால்பிறந்தாண்டளப்பருங்காலந் திருவின் வீற்றிருந்தமைதெரிந்தால், அங்கண்மாஞாலத்தங்ககரொக்கும்பெண்ணகரமற்றெட்டியாதோ.

அனைசெவமவனைவணிசெலமவனைவரும்பெறன்மனிவெலமவனை, புரைசமால்கனிநம்புரவியுந்தேரும்பூதலத்தியாவையுமவனை, விரசவார்முனிவர்விண்ணவரியக்கர்விஞ்சையர் முதலிலோரெவரும், உரைசெய்வாராஞானபோதநுந்துவமைதானிதேவுளோதா.

புண்ணியம் புரிந்தோர் என்னும் பாட்டுரை.

புண்ணியஞ்செய்தோர்சுவர்க்கம் சார்வர் என்பது வேதத்தின் துணிபு–அதுசெய்தற்குரிய இப்புவியில்ராகவபிரானைக்குறித்தல்லது தமக்குரிய தர்மத்தோடு மாதவத்தைச் செய்தார் யார் எனவே எல்லாரும் ராமபிரானைக்குறித்தே தவம் செய்வார் என்பதாயிற்று. எண்ணுதற்கரிய குணத்தோடு அவன் எழுந்தருளியிருந்து உலகங்களை ஆண்டு அருளும் இடமென்னில் அவ்வயோத்தி



யல்லது அநுபவிக்கும் உயர்விடம் வேறு உண்டென்று சொல்லுதல் கூடுமோ கூடாது.

தவம்யாவனைக்குறித்துச் செய்யப்படுகின்றதோ அவனே இனிது உறைதலின் இதுவேபோகம் உறைவிடமாயிற்று. இக்கருத்தை செவ்விய மதுரமென்னும்பாட்டால் தோற்றுவாய்செய்தார்.

இக்கருத்தறியாதார் ராகவனையன்றியென்று ராகவன் தவம் செய்ததாய் அசம்பாவிதமாய் பொருளுரைப்பார்.

"கோவையிந்நகரொடெண்குறிக்கலாதவத்
தேவர்தந்நகரியைச்செப்புகின்றதென்
யாவையும்வழங்கிடத்திகலியிந்நகர்
ஆவணங்கண்டபினளகைதோற்றதே."

இதன் பொருள்.

இந்நகரோடு வரிசையாய் மதுரா, மாயா, காசி, காஞ்சி, அவந்திகா துவாரகா என்று சேர்த்து முனிவர்களால் படிக்கபடாத அவ்விண்ணோர் உலகையாம் புகல்வது எங்ஙனம். அளகைதான் அறியாமல்பகைத்து எல்லாங்கொடுக்கும் செல்வத்துடைய இந்நகரது கடைத்தெருவைப் பார்த்தபின் தோற்றது. முத்திகொடுக்கும் திறனில்லாமையால் தேவருலகு ஸ்ரீஅயோத்தியோடு சேர்த்துப் படிக்கப்படாமல் அது ஒப்பிலது. அளகை ஆவணத்தைக்கண்டு தோற்றமையால் அதுவும் ஒப்பிலது. இக்கருத்தறியாதார் கோ என்றும் ஐ என்றும் பதம்பிரித்து இடர்ப்படுப.

காசிகாண்டம்.

சத்தபுரியின் சிறப்புரைத்த அத்தியாயம்.

"சரயுநதிப்புனல்படிந்துதென்புலத்தோர்கடன்கழித்துத்தழல்செய்வேள்வி, யருமறையோரினிதுவப்பமுறையுமின்னடியிலமையூட்டிப், பரிவினொடுமங்நகரிற்பஞ்சராத்திரியுறைந்து பகலைக்கிரந்தி, விரிகதிர்வெண்மணிகொழிக்கும் வீங்குபுனற் பிரயாகைதனின்மேவினனே."

ஸ்ரீஅயோத்திமாநகரைச் சூரியகுலத்தரசராகிய இக்ஷுவாகுமுதல் குக்ஷிவிகுக்ஷி, புரஞ்ஜயன், அனரண்ணியன் பாணன், பிருது, திரிசங்கு, அரிச்சந்திரன், ரோஹிதாசுவன், குவலயாசுவன், யுவனாசுவன், மாந்தாதா, அம்பரீஷன், முசுகுந்தன், சுசந்தி, துருவசந்தி, பரதன், அசிதன், சகரன், அம்சுமான், திலீபன், பகீரதன், ரகு, மித்திரசகன், அச்மகன், கட்டுவாங்கன், சிவி, அஜன், தசரதன், ஆகிய பல அரசர் ஆண்டனர், அன்னோர் திவ்விய சரித்திரங்களை ஸ்ரீமத்ராமாயணம், வடமொழிமகாபாரதம், ஸ்ரீபாகவதம், விஷ்ணுபுராணம் ஆகிய இவற்றில் காண்க. தென்மொழி அயோத்திமாநகர மான்மியத்துள் ஒருவாறு கூறப்பட்டிருக்கின்றன.

இலங்கேசனாகிய ராவணன் நான்முகனையும் ஐம்முகனையும் குறித்துத் தவம்புரிந்து வரம்பெற்றுத் திரிலோகங்களையும் அழித்துவர தேவர் அதுபொறாது அவனோடுபொருது உடைந்து காலம்நோக்கி அடங்கிக்கிடந்து தயரதச்சக்கரவர்த்தியார் கலைக்கோட்டு மகாவிருடியானை எழுந்தருளச்செய்து, அசுவமேத நடத்தியபோது அவியுண்ண ஆங்குப்போந்த அத்தேவரெல்லாம் குழுமிச்சூழ்ந்து ஆங்கு எழுந்தருளிய கேசவபிரானைத் திருவடிதாழ்ந்து தயரதசக்கரவர்த்தியாகம் செய்யும் இதுவே நல்லமையமாதலால் தேவரீர் மனுஷாவதாரம் செய்து ராவணனைக் கொன்று துயர்களைந் தருள்கவெனப்பிரார்த்திக்கச் சர்வேசன் அநுசரான மூவரோடு திருவவதாரஞ்செய்தருளிப் பன்னீராயிரமாண்டு விபவத்தில் எழுந்தருளியிருந்து தன்னுடைச் சோதிக்கு எழுந்தருளினன். சர்வேசன் சர்வலீலைகளோடுமுன்னர் விபவமாய் எழுந்தருளி இருந்து பின்னர் அர்ச்சையாகவும் எழுந்தருளி இருக்கும் இந்த க்ஷேத்திரத்தை ஒப்பாவதுயாது.

ஸ்ரீஅயோத்தியின் கீழை வாயிலில் ஆஞ்சநேயர் சந்நிதி பிரபலமாயிருக்கின்றது. அதில் பலர் பலதேவ



த்தரசர்பொருட்டு ஸ்ரீமத் ராமாயண பாராயணம் செய்கின்றனர். மோக்ஷகாமிகளாகிய அநேகபெரியோர்கள் ஆங்கு கூடியிருக்கின்றார்கள். யாத்திரைகாரர் சரயுவில் தீர்த்தமாடி தீர்த்த சிராத்தமுதலியசெய்து, ஜநகஸுதானத்தையும், வாயுபுத்திரனையும் சேவிப்பர் - வாயுசுதனை உருத்திராவதாரம் என்ப. பிரமனிடத்திலும், வாயுவிடத்திலும், அநந்தாழ்வானிடத்திலும் உதித்த உருத்திரருக்கு முறையே வைகாரிகருத்திரன், தைசருத்திரன், தாமதருத்திரன் என்று பெயர். இங்ஙனம் ஸ்ரீவராகபுராணம் சாதுர்மாசிய மகாத்மியம் பதினைந்தாம் அத்தியாயம் கூறும்.

வாதாத்ம சந்நிதியில் அநேகவானரங்கள் கூடியேறி யாத்திரைகாரரிடம் உணவுகளை உண்டுபருத்திருக்கின்றன.

பூர்வயோகி, தக்ஷிணயோகி, பச்சிமயோகி, உத்திரயோகி, என்ப. இரகுநாததாஸ் சுவாமிகள் என்ற மகாயோகிகள், இந்த க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருந்து இதற்கு நான்குவருடத்துக்கு முன்னமே தன்னடிச் சோதிக்கு எழுந்தருளினர். அப்பெரியோர் ராமபத்திமையுடையராய் ஊனை அரசச்சேனையில் தொழில் பூண்டிருக்கையில், சேனைக்காவலனது படமாடத்தை ஒரு நள்ளிரவில் இவர் காக்கவேண்டியமுறையில காவாது துயின்றுகொண்டிருக்கப் பக்தவத்ஸலன், ரகுநாததாஸ் சுவாமிகள்போல வேடம் தரித்து முறைப்படி வேறுகாவலாளன் வருங்காறும் காத்தருளிப்போயினன். பின்னர்சுவாமிகள் துயிலெழுந்து நம்முறையில் காக்கத்தவறினேமே என்று அச்சமுற்று கவசம் புக்குப்படமாடம் சாரவும் தாசரதியாரிடத்தில் காவல் ஒப்புக்கொண்ட காவலாளன் என்னிடத்தில் காவல்கொடுத்துப்போன நீர் எதற்கு மீண்டும் வந்தீரென்றான். பரமபாகவதோத்தமர் சற்றே விமர்சனம்செய்து, இது நம்மாருடைய

நாயகன் திருவிளையாட்டென்று திருவுளம்பற்றி அவன் அருள் அங்ஙனமாக யாம் இங்ஙனமிருப்பது எங்ஙனமென்று, சம்சாரத்தொடக்கறுத்து, "இலங்கடந்த நெடுமுடியண்ணலை நோக்கியுலகந்தவஞ்செய்து வீடுபெற்றமலை" யாகிய திருவேங்கடம்வந்து வேங்கடநாதனையும், திருவரங்கம் பெரியகோயில் ஸ்ரீரங்கநாதனையும் திருவடிதாழ்ந்து, திருவணையாத்திரை செய்து ஸ்ரீ அயோத்தியாபுரி சென்று சுவேச்சயா பிராரப்தம் அவர்க்கு இன்மையால் பராயிச்சயா பிராரப்தம், அநுகாவகை சரயுமாநதியில் மணற்பரப்பில் ஒரு ஆச்சிரமம் இயற்றி அதில் எழுந்தருளி இருந்தனர். மறுவருஷத்தில் பிரவாககாலத்தில் சரயுமாநதி அவ்வாச்சிரமத்தை விலகிப் போயிற்று. அக்குறியை இதுபோதும் பார்க்கலாம். இக்காலை அவ்விடம் அரசு, ஆல் முதலிய விருக்ஷசாலங்களும், கனிவிருக்ஷங்களும், வளர்ந்து தழைத்து வாசயோக்கியமாய்ச்சிறுவனமா யிருக்கின்றது. வெம்போன்றதாரினும் ஆங்குச் செல்வோர் காலிட்டு நடப்ப அச்சுறுமாறு யாண்டும் பரிசுத்தமா யிருக்கின்றது. முற்காலத்தில் மகருஷிகள் ஆச்சிரமம் எவ்வண்ணம் இருக்குமோவென்று ஐயப்படுவோர் ஐயமறுத்து விளங்காநின்றது. சுவாமிகள் ஆச்சிரமத்தைச்சூழ்ந்து பல பன்னசாலைகளிருக்கின்றன. அவற்றினும் விருக்ஷமூலங்களினும் முற்றத்துறந்தோர் பலர் வதிகின்றனர். அவர்களுக்கும் யாத்திரைசென்று இரப்போர்க்கும் சுவாமிகள் எவ்விதமாகவோ உண்டி முதலியகொடுத்து ஆதரித்துவந்தார்.

"வித்துமிடல்வேண்டுங்கொல்லோவிருந்தோம்பி
மிச்சின்மிசைவான்புலம்."

சுவாமிகள் அதுவும் மிசைவதில்லை. விருந்தோம்புவதற்கு சாமகிரியைகள் ஒருகால் குறைவுபடுமாயின் அவற்றை சுவாமிகள் தம்செயலாலே நிரப்பித்துக்கொள்வர். ஒரு புண்ணியதினத்தில் பண்டாரத்தில் நெய்



யும் சர்க்கரையும் இலவாகசுவாமிகள் சரயுமாநதிப் புனலையும், மணலையும் வேண்டிய மட்டில் கொணரச்செய்து அவற்றை ஆடையால் மூடித் தமது திருக்கரத்தால் தீண்டி நெய்சர்க்கரையாக்கிச் செலவிட்டுப், பின்பு அவ்விரண்டும் மிகுதியாய்வந்தபோது, முன்னெடுத்த அளவின்படி அளந்து சரயுவிற்சேர்த்தனர். இவ்விசேடத்தை வடதேயத்தோர் தம்மை வினவுவோர் செவிக்கு விருந்திடுவர். இது நடந்தபோது ஸ்ரீ அயோத்திசென்றிருந்த காசிவாசிகளும் சொல்லுவர். சுவாமிகள் தம்மைச் சேவிப்போர்க்கு அகங்காரத்தை விடுக ராமசரணத்தைப் பற்றுக. இவையே இறுதியுறுமுயிர்க்குறுதி என்று சாதித்தருளுவர்.

ஸ்ரீ ஆரியப்பபுலவர் பாகவதம்.

மாயவனபிசாவதாரமுரைத்த அத்தியாயம்.

"புரியும்பாதகம்போக்கிடப்புவிதனிற்படிந்தால்
உரியமாதவருறவுவந்துற்றிடுமுற்றால்
மருவுவெம்பவந்தீர்ந்திடுமால்கதைகேட்பப்
பெருகுடன்புயின்பிறப்பதுஞானமெய்திடுமால்."

என்றபடியாத்திரைசெய்த பயனால் எமக்கும் சுவாமிகள் திருவடி சேவைமுதல் யாத்திரை செய்தகாலத்தில் கிடைத்தது. இப்போது அவ்வாச்சிரமத்தில் சுவாமிகள் சிஷ்யர் ஒருவர் இருப்பதாய்க் கேட்கின்றனம். இவ்வாச்சிரமம் ஸ்ரீ அயோத்திமாநகர்க்கு அண்மையில் தூரத்திலுள்ளது.

ஸ்ரீ அயோத்திவாசிகளில் பெரும்பாலார் ஏகதர்சிகளாகவே இருப்பார்கள்.

அவரெல்லாம் சங்குசக்கரலாஞ்சனமேயன்றி வில் அம்பு முத்திரைகளும் தரித்துக்கொள்வர்.

வேறியர்மேனியில் வடுப்பட்டலாகாதென்று பிறுதி கூறவும் அஃதுணராது ஸ்ரீவைஷ்ணவர்கள் தாபமுத்

இரைதரிப்பது யாங்ஙனமென்று ஐயப்படுவாருமுளர். பார்ப்பார் தேகத்தில் ஆயுதத்தாலே குறிறேலே தீயி னாலே சுடப்பட லாகாதென்றும் தாபமுத்திரைவடு அவசியம் வேண்டுமென்றும், அந்தணர் பரமபதவாழ் வுபெற வலத்தோளில் திருவாழியும் இடத்தோளில் திருச்சங்கும் தரித்துக்கொள்ள வேண்டுமென்று பிர மசூத்திரத்தில் மகோபநிடதமும், சங்காழிலாஞ்சனம் பெற்றோர் வைகுந்தம் சேர்வரென் றிருக்குவேதம் ஏழாம் அஷ்டகம் நான்காம் அத்தியாயம் எட்டாம் அநுவாகமும், பிரமனுக்குந் தந்தையும் பல்லுயிர்க்கு அந்தர்யாமியுமாகிய மாதவனது சங்காழியை இடத் தோளினும் வலத்தோளினும் சோதிபெறத் தரித்தவர்ப ரமபதம் சேர்வரென்று எசுர்வேத ஆரணம் முதற்பருச மும், தீவினையால் இறந்திறக்கும் சீவர்சங்காழிலாஞ்ச னம் பெறின்பரமபதம் சேர்வரென்று சாமவேதம் உத் தரஇருக்கு ஒன்பதாம் அத்தியாயமும், அவ்வாறே அத ர்வணமும், இமையவரும் மனுக்களும் திருவாழி திருச் சங்கைத் தோள்களில் தரித்துக்கொண்டு சுவர்க்கத்தை யும் பூமியையும் காத்தனரென்று அவ்வதர்வணமும், முத்தியை இச்சித்தோரில் சிலர் திருமால் சங்காழியைத் தரிப்பரென்றும் சிலர் அவன் பஞ்சாயுதத்தையும் தரிப் பரென்றும் வெகுஇருக்கில்வர்க்கல சங்கிதையும், சங்காழி தரிப்போர் முத்தராவரென்று பிருகதாரணியோபநிடத மும், திருமாலைத்தியானிப்போர் ஊர்த்துவபுண்டரமும் திரிவிலம் புரிக்குறியும் தரிப்பது விதி என்றும் அவை யே முத்திசாதனமென்றும் கடவல்லியும், அவ்வாறே காடகமும், அவ்வாறே கைவல்லியசாரமும், சங்காழி யும் ஊர்த்துவபுண்டரமும் தரித்தோர் வீடுசேருவரெ ன்று மனுவும், ஆசனத்தையும் சயனத்தையும் ஒழித்து மற்றைய பசுபாத்திராதிகளுக்கெல்லாம் சங்காழி யிலச் சினை தரிப்பித்து வாழ்வோர் வைகுண்டம் சார்வரென்



று சாண்டில்யஸ்மிருதியும், சங்காழியாதல் சக்கரமேயா தல் தரித்தோர் வீடுசேர்வரென்று பதுமபுராணமும், சங்குசக்கரங்களைப் புயங்களிலும் சார்ங்கத்தை உச்சியி லும் கதையை நெற்றியிலும் வாளை இதயத்திலும் தரி ப்போர்க்கு அரியபொருள் எல்லாம் எளியபொருளாகு மென்று ஆக்கினேயபுராணமும், புவியில் ஒவ்வோரிடத் தில் திருக்குவைகளிருப்பதுபோல என்னுடைய சக்கர த்தால் லாஞ்சனம்பெற்றோர் ஆங்காங்கு சிலர் இருப்பி னும் அவர் இருக்கும் நகரைச்சூழ்ந்து மூன்றுயோசனை தூரமுள்ள நிலம் புனிதஸ்தலமென்றும் லாஞ்சனம்பெ ற்ற வரைக்கண்டால் பூதப்பிரேத பைசாசங்களெல்லாம் ஓடுமென்றும் லாஞ்சனம் பெற்றோர் அசுவமேதபல மடைவரென்றும் எம்பெருமான் பெரியபிராட்டியா ருக்கு உரைத்தனனென்று வராகபுராணமும், சங்கா ழியிலச்சினை தரித்தவரே முத்திபெறுவரென்று கந்தபு ராணமும் லிங்கபுராணமும், தமக்கும் பசுபாத்திராதிக ளுக்கும் சங்காழியிலச்சினையிட்டு வாழ்வோர் கோடிகு லம் ஈடேறுமென்று வாமனீயபுராணமும் மச்சியபுரா ணமும், முத்திராங்கிதரான திருமால் அடியார்பக்கல் போகாதீரென்று எமன் கிங்கரர்க்குரைத்தமாற்றம் விண் டுபுராணமும், தருமபத்தினிக்கு மங்கலசூத்திரம்போல திருமாலடியார்களுக்குச் சங்காழி இலாஞ்சனமென்றும், அந்தணர்களுக்குச் சங்காழிக்குறி அவசிய மென்னி னும் பாகவதர்களுக்கு விசேடமென்று கூர்மபுராண மும், தீவினைதொலையச் சங்காழிதரித்தல் வேண்டுமென் று ஆதித்தபுராணமும், லாஞ்சனம் தரித்தோரை இகழ் வார் நரகில்வீழ்வரென்று பிரமகைவர்த்தமும், இருபுயத் தில் சங்காழிதரித்தோரை இகழ்வோர் புன்னாய் விலங் காய்ச்சனித்துப்பின்னர் கிருமியாய் உற்பவித்து அங்கிடப்ப ரென்று வேதப்பொருளை யநுசரிக்கும் பௌடிகபுராண மும், கோகத்திசெய்தானையினும் சங்காழி ஒத்தியதோரு

டையான் பாபந்தொலைந்து வீடுபெறுவனென்றும் திரு
விலச்சினை பெற்றோர் செய்யும் தவந்தானங்களெல்லாம்
ஒன்று அனந்தமாகுமென்றும் பிரமபுராணமும், சங்
காழிதரித்தோர் திருமால்பதத்தை இச்சித்த பரஞானத்
தாயார் என்று இதிகாச சமுச்சயம் புண்டரீகச்சியான
மும் சீதரன் அன்பர் சங்காழிகளை தோளில்சேர்ப்பரென்
றும், அவரிடத்தில் மலர்மகளும் பாமும் இருப்போ
மென்றும் அன்னவர் தேவர்களும் பூஜைபுகழெல்லாம்
பூண்பரென்றும் திகிரிலாஞ்சனம் பெற்றோர் குருக்ஷேத்
திரத்தில் கிரகண புண்ணியகாலத்தில் பெரியோர்க்குச்
செய்த தானபலன் அடைவரென்றும்,இந்திரனுதிஇமை
யோர்சித்தர் இயக்கர் முனிவர்களெல்லாம் திகிரிசங்கு
தாங்குபுயத்தினராய்ச் சித்திபெற்றனர் என்றும் ஆழிவ
லம்புரிதரித்த தோளுடையாரைக் கண்ட அளவே தீவி
னைக்குன்றெல்லாம் அகலாகுமென்றும், திருவாழியிலா
ஞ்சனை வரித்துச் செய்த சிராத்தம் கயாசிராத்த மா
குமென்றும், அவர்க்குக் கொடுத்ததை நெடுமாயன்சுவீ
கரிக்குமென்றும் அவர்க்குாந்த சோறும் நீரும் மேரும்
கடலும் போலாகுமென்றும் நீயும் பாகவத அனுட்டா
னம் செய்க என்றும் பிரமன் நாரதபகவானுக்கு உபதே
சித்தது பிரமாண்டத்துள் விண்டுரகசியம்முதல் அத்தி
யாயம்முதல் பலஅத்தியாயங்களும் சங்காழிபுயம் சேர்
த்தோர் வீடுபெறுவரென்று சிவன் பார்ப்பதிக்குச் சொ
ல்லினது அப்பிரமாண்டத்துள் மோட்சதருமமும், திகி
ரிவளைக்குறியாரை தண்டன் சமர்ப்பித்தோரது நெற்றி
யில்படியும் துகள் எவ்வளவோ அவ்வளவுகாலம் அவர்
பிரமனுலகில்வதிந்து பின்புப் பரமபதம்சார்வரென்றும்
இலாஞ்சனை அஞ்சலிசெய்வோர்குலம் ஈடேறுமென்
றும், தத்தம் வருணத்துக் கொப்பநடந்து திகிரிக்குறி
தோளில் தரித்தோர் நெடுமால் அருச்சனைசெய்ய அரு
கர் என்றும் ஐந்தாம்வேதமாகிய ஸ்ரீமகா பாரதத்துள்



பீஷ்மபருவமும், கண்ணன்கைலாயம் சென்றருளியபோ
து துவாரகைக் காவலரைநோக்கி நாம்திரும்பிவருமளவு
ம்திகிரிச்சங்கம் தரித்தோரின்றல்லாதாரை நகர்க்குள்
விடாதிரென்று மொழிந்ததாய் ஐந்தாம் வேதப்பொரு
ளாகிய அரிவமிசமும் கூறுமென்று இருசமய விளக்க
நூலார் சாதித்தருளுவர்.

உமாதேவி வாமதேவ மகருஷியிடத்தில் சங்காழி
லாஞ்சனம் பெற்றது பாத்மோத்ர புராணம் மலைம
கள் திருவிலச்சினைப்படலம் கூறும்.

இப்பாட்டு அதன் கண்ணது.

தாவமுடன்புண்டரமுந்தனித்ததிருமந்திரமும்பெருந்தாழா
ஆவலுடன்பூசனையுமவைகட்தமுறைமையுமாய்க்குநோக்கிக்.
சாமெனமுன்னிற்பாளுக்கினி யருளிப்பினுங்கருவைக்குவமைகாண
தேவிதனக்கிரஞ்சாதித்திமைமயத்திதனையிகத்தெரித்தானன்றே.

சுலோகம்.

சிரசக்ராந்தேவனும் புசசக்ராம்தசமனு
அசக்ரஜசதேவாணும் பூஜாதானதிரர்த்தகம்.

விக்கிரகங்களுக்கு சிரசில் சக்கரம் வேண்டுமென்று
ம் பார்ப்பாருக்கு புயத்தில் சக்கரம் வேண்டு மென்றும்
சக்கரமில்லாத விக்கிரகம் பூசைக்கு அருகம் அன்று என்
றும் சக்கரமில்லாத துவிசன் தானத்துக்கு அருகன்
அல்லன் என்றும் பொதுநூலாகிய சிற்பநூல் பகரும்.
முத்திராங்கிதமல்லாத தேகம் ஸ்மசான காஷ்டமென்ப.
மேலே கூறியவற் கலசங்கிதை ஆக்கினிய புராணம் முத
லியவற்றின் துணிபால்மாத்துவமதத்தார் பஞ்சாயுதலா
ஞ்சனம் தரிக்கின்றார்போலும்.

பசுபாத்திராதிகளுக்கும் இலச்சினை இடவேண்டு
மென்றசாண்டிலிய மிருதிவாமனிய புராணம் மச்சிய
புராணம் அடிக்கப்பட்டதன்று இவற்றின் துணிபுசோ

த்தி ஆழ்வார் இப்பாசுரம் அருளிச்செய்தார்போலும். இத்துணியால் ஸ்ரீவைஷ்ணவர்களும் வைஷ்ணவர்களும் தங்கள் திருமாளிகையிலும், பாத்திரமுதலிய யாவற்றிலும் திருமண்காப்பும் சங்காழியும் தரிப்பிக்கின்றார்போலும்.

## முதலாயிரம்.

சென்னியோங்குதண்திருவேங்கடமுடையாயுலகு
தன்னைவாழநின்றநம்பீதாமோதராசதிரா,
என்னையுமென்னுடைமையையுமுன்சக்கரப்பொறியொற்றிக்கொண்டு
நின்னருளேபுரிந்திருந்தேனினியென்திருக்குறிப்பே.

திருநாவுக்கரசாகிய அப்பர்சுவாமிகள் அமண்சமயத்தொடக்குண்ட இவ்வுடலோடு உயிர்வாழேன் என்னுடையநாயக நான் உயிர்வாழ்வதற்கு நின்னுடைய இலச்சினை இட்டருள்கஎன்று தூங்கானைமாடத்தீசனைப்பதிகம் பாடி வேண்டி விடைசூலலாஞ்சனம் பெற்றனர்.

## திருநாவுக்கரசுசுவாமிகள்புராணம்.

புன்னெறியாமமண்சமயத்தொடக்குண்டுபோந்தவுடல்
தன்னுடனேயுயிர்வாழத்தரியேனான்றரிப்பதனுக்
கென்னுடையநாயகநின்னிலச்சினையிட்டருளென்று
பன்னுசெழுந்தமிழ்மாலைமுன்னின்றுபாடினார்.

பொன்னார்ந்ததிருவடிக்கென்விண்ணப்பமென்றெடுத்து
முன்னாகியெப்பொருட்குமுடிவாகிநின்றவனைத்
தன்னாகத்துமைபாகங்கொண்டவனைச்சங்கரனை
நன்னுமத்திருவிருத்தநலஞ்சிறக்கப்பாடுதலும்.

நீடுதிருத்தூங்கானைமாடத்துநிலவுகின்ற
ஆடகமேருச்சிலையானருளாலோர்சிவபூத
மாடொருவரறியாமேவந்தவர்திருத்தோளிற்
சேடியர்மூவிலைச்சூலஞ்சினவிடையினுடன்சாத்த.

ஆங்கவர்தந்திருத்தோளிலார்ந்ததிருவிலச்சினையைத்
தாங்கண்டுமனங்களித்துத்தம்பெருமானருளினைத்து
ஆங்கருவிகண்பொழியத்தொழுதுவிழுந்தார்வத்தால்
ஓங்கியசிந்தையராகியுய்ந்தொழிந்தேனெனவெழுந்தார்.



இதனுள் லாஞ்சன விஷயமாய் இத்துணையும் கூறிப் போந்தது யாதுகருதியோ எனில் அதன் மாட்சிவிளக்க வேயன்றிப் பிறிதில்லை.

மனைகள்தோறும் ஸ்ரீராமபத்திரன் விக்கிரக ரூபியாய் எழுந்தருளி ஆராதிக்கப்படுகின்றான். ஒருவர் மனையில் மாத்திரம் சுவர்ண விக்கிரகங்கள் இருக்கின்றன. முன்னொருவர் ஸ்ரீஅயோத்தியா மான்மியம் சிரவணம் செய்தபோது ஸ்ரீஅயோத்தி சுவர்ணமயமென்று புராணிகர்சொல்லக் கேட்டவர் அது பொய்யென்று சொல்ல இவர் உருக்கிக்காணலாமென இட்டிகை எடுத்துருக்க, அது உயர்ந்த பொன்னாக அதனால் சீதாலக்ஷ்மண பரத சத்துருக்கன அநுமத் சமேதராய் இராமபத்திரர் விக்கிரகம் செய்யப்பட்டதென்று அம்மூதாரார் சொல்லுவர். ஏகாதசியன்றி மற்றையதினங்களில் இவ்விக்கிரகங்களைச் சேவிக்க விரும்புவோர் திருநாமமொன்றுக்கு ஒரு ரூபாய் தக்ஷிணைகொடுத்தல் வேண்டும். சரயூநதிக்கரையில் பலஸ்நான கட்டங்களும் கட்டிடங்களு மிருக்கின்றன. யாத்திரைகாரர் ஆங்கும் நகரத்துள்ளும் வதியலாம். சரயுவில் நீராடும்போது ஒருபுடை ஆமையையும் மனத்திற் கொண்டு ஜாக்கிரதையாய் நீராடல்வேண்டும்.

மேலே கூறிய வாதாத்மசர் சந்நிதிக்குப் பக்கத்தில் மைசூர் பரகால சுவாமிகள் மடம் இருக்கின்றது. ஸ்ரீவைகுண்டத்தில் சத்திரங்கட்டுவதுபோல அன்னதானஞ் செய்யத் திருவயோத்தியில் நாட்டுக்கோட்டையார் சத்திரங் கட்டுகின்றார். இக்காலத்தில் தர்மகுட்சமத்தை அறிந்தவர் அவரேயன்றிப்பிறரிலர். சாகேத க்ஷேத்திரம் ரெயில் ஸ்டேஷனுக்கு இரண்டுமயில் தூரத்தில் உள்ளது. இதற்கு இருபதுமயில் தூரத்தில் நந்திக்கிராமமிருக்கின்றது. யாத்திரைகாரர் ஆங்குச்சென்று சடாகுண்டத்தில் நீராடி பரதாழ்வானைத் திருவடிதாழ்வர். இன்னும் ஸ்ரீஅயோத்தியின் சிறப்புகளை எல்லாம் அத

ன் மான்மியத்தா லுணர்க நந்திக்கிராமமாவது பெருமாள் பாதுகம் பரதாழ்வாரால் அர்ச்சிக்கப்பட்டு உலகாண்ட இடம்.

கிளைகண்டுநீங்குபடலம்.

நந்தியம்பதியிடை நாதன்பாதம்
செந்தனிக்கோல்முறை செலுத்தச்சிந்தையான்
இந்தியங்களைஅவித் திருந்தமெய்யினான்
அந்தியும்பகலும்நீர் அருந்தகண்ணினான்.

பாதுகாசகஸ்ரம்.

"நீராச்சியபாலனஞ்செய்யுங்காலத்தில் ஒருசூத்திரனும் தவஞ்செய்யவில்லை; பிராமணப்பிள்ளை யொருவரும் மரணமடையவில்லை; மேலும் லவணாசுரன் உபத்திரவம் முதலியவை யொன்றுமுண்டாகவில்லை. இவைகளனைத்தும் ராமராச்சியத்திலுண்டானபடியால் அவனைப் பார்க்கிலும் பாதுகையே சரியாய் ராச்சியபாலனஞ் செய்கிறவளென்பது தாத்பரியம்."

**லக்னோ.** திருவயோத்திக்கு அப்புறமும் கோமதி நதிக்கரை மேலும் உள்ளதாகிய இலக்குமணபுரி என்னும் இந்த லக்னோ கண்ணுக்கினிதாய பெரியபட்டினமாயிராநின்றது. தங்குவதற்கு இடமும் வாகனமும் கிடைக்கும். நைமிசாரணியத்துக்குச் செல்வோர் லக்னோவினின்று பிரிந்து சண்டோசிக்குப்போகும் புகைச்சாடுமார்க்கத்தில் சாண்டிலி என்னும் ஸ்டேஷனில் இறங்கவேண்டும்.

**சாண்டிலி.** லக்னோவுக்கு முப்பது மயில் தூரத்தில் இருக்கின்ற இந்த ஊருக்கு இருபது மயில் தூரத்தில் நைமிசாரணியம் இராநின்றது. அது நூற்றெட்டுத் திருப்பதிகளி லொன்று. பிரமன் தன்னைப் பிரார்த்தித்த இருடிகள் தவம் செய்வதற்குக் குசையை நேமிபோலச் சுருட்டிவிடுத்த விடமாகலின் அது அப்பெயராயிற்று.



திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

வாணிலாமுறுவல்சிறுநுதற்பெருந்தோள் மாதரார்வனமுலைப்பயனே, பேணினேனதனைப்பிழையெனக்கருதிப் பேதையேன்பிறவிநோயறுப்பான், ஏணிலேனிருந்தே னெண்ணினேனெண்ணி யிளையவர்கலவியின்திறத்தை, நாணினேன்வந்துன் திருவடியடைந்தேன் நைமிசாரணியத்துளெந்தாய்.

சிலம்படியுருவிற் கருநெடுங்கண்ணார் திறத்தனாயறத்தையேமறந்து, புலன்படிந்துண்ணும் போகமேபெருக்கிப் போக்கினேன் பொழுதினைவாளா, வலம்புரிதடக்கைமாயனேமாயா வானவர்க்கரசனேவானோர், நலம்புரிந்திறைஞ்சுந் திருவடியடைந்தேன் நைமிசாரணியத்துளெந்தாய்.

சூதினைப்பெருக்கிக்களவினைத்துணிந்து சுரிகுழல்மடந்தையர்திறத்துச், காதலேமிகுத்துக்கண்டவாதிரிந்த தொண்டனேன்நமன்றமர்செய்யும், வேதனைக்கொடுங்கிநடுங்கினேன்வேலை வெண்டிரையலமரக்கடைந்த, நாதனேவந்துன்திருவடியடைந்தேன் நைமிசாரணியத்துளெந்தாய்.

வம்புலாங்கூந்தல்மனைவியைத்துறந்து பிறர்பொருள்தாரமென்றிவற்றை, நம்பினாரிறந்தாலமன்றமர்பற்றி யெற்றிவைத்தெரியெழுகின்ற, செம்பினாலியன்ற பாவையைப்பாவி தழுவெனமொழிவதற்கஞ்சி, நம்பனேவந்துன்திருவடியடைந்தேன் நைமிசாரணியத்துளெந்தாய்.

இடும்பையாலடர்ப்புண் டிடுமினோதற்றென் றிரந்தவர்க்கில்லையேயென்று, நெடுஞ்சொலால்மறுத்தநீசனேனந்தோ நினைக்கிலேன்வினைப்பயன்றன்னைக், கடுஞ்சொலார்கடியார் காலனார்தமரால் படுவதோர்கொடுமுறைக்கஞ்சி, நடுங்கிநான்வந்துன் திருவடியடைந்தேன் நைமிசாரணியத்துளெந்தாய்.

கோடிய மனத்தாற் சினத்தொழில்புரிந்து திரிந்துநாயினத்தொடுந்திளைத்திட்டு, ஓடியுமுழன்றுமுயிர்களேகொன்றே னுணர்விலேனதலால் நமனார், பாடியைப் பெரிதும் பரிசழித்திட்டேன் பரமனேபாற்கடல்கிடந்தாய், நாடிநான் வந்துன் திருவடியடைந்தேன் நைமிசாரணியத்துளெந்தாய்.

நெஞ்சினால் நினைந்தும் வாயினால் மொழிந்தும் நீதியல்லாதன செய்தும், துஞ்சினார் செல்லுந் தொன்னெறிகேட்டே துளங்கி

னென் விளங்கனிமுனிந்தாய், வஞ்சனேனடியேன் நெஞ்சினிற் பிரியா வானவாதானவர்க் கென்றும், நஞ்சனே வந்துன் திருவடியடைந்தேன் நைமிசாரணியத்து ளெந்தாய்.

ஏவினார் கலியார் நலிகவென்றென்மே லெங்ஙனே வாழுமா றைவர், கோவினார் செய்யுங் கொடுமையை மடித்தேன் குறுங்குடி நெடுங்கடல்வண்ணா, பாவினாரின்சொற் பன்மலர் கொண்டுன் பாதமே பாவிநான் பணிந்தேன், நாவினால் வந்துன் திருவடியடைந்தேன் நைமிசாரணியத்து ளெந்தாய்.

ஊனிடைச்சுவர்வைத் தென்புதூண்நாட்டி யுரோமமேய்ந் தொன்பதுவாசல், தானுடைக்குரம்பை பிரியும்போதுன்றன் சரணமேசரணமென்றிருந்தேன், தேனுடைக்கமலத் திருவினுக்கரசே திரைகொள்மா நெடுங்கடற்கிடந்தாய், நானுடைத்தவத்தாற் றிருவடியடைந்தேன் நைமிசாரணியத்து ளெந்தாய்.

ஏதம்வந்தணுகா வண்ணம்நாமெண்ணி யெழுமினோதொழுது மென்றிமையோர், நாதன்வந்திறைஞ்சும் நைமிசாரணியத்தெந் தையைச்சிந்தையுள்வைத்துக், காதலேமிகுத்த கலியன்வாயொலி செய் மாலைதான்கற்றுவல்லார்கள், ஓதநீர்வையக மாண்டுவெண் குடைக்கீ ழும்பருமாகுவர்தாமே. *

## நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி.

ஓதிவுயில்லாத வென்போல்வார்க்குய்யலாம்
போதிவுண்டேனும் பிறர்க்கறிஞ - பாதிய
நைமிசாரண்ணியத்து நாதரடியாரோடும்
இம்மிசார்வுண்டாயினால்.

புராணங்களெல்லாம் சூதமாமுனிவராலே பகவான் பிருகுமாமுனிவர் குலதிலகராகிய சௌனகாதி மகருஷிகள் எண்பத்தெண்ணாயிரவருக்கு அவ்வாரணியத்தில் மகத்தலையில் கூறப்பட்டன. அவ்வடவியை புராணங்களாகிய பைங்கூழ்விளையும் செய்திலன் என்னலாம். பாரதயுத்தம் நடந்தகாலை பந்துகலகத்தைச் சகியாத பலராமர் தீர்த்தயாத்திரை வியசமாய்ப் புறப்பட்டுப் பிரபாசம் மேற்கே செல்லும் சரச்சுவதி, மதூதகம், பிந்துசாரம், திருணகூலம், சுதரிசனம், விசாலம், பிரம



தீர்த்தம், சக்கரதீர்த்தம், சரச்சுவதி, யமுனா சங்கமதீர்த்தங்கள், கங்காசங்கம தீர்த்தங்கள், ஆகிய புண்ணிய தீர்த்தங்களில் நீராடி நைமிசவனம் எழுந்தருளினார். அப்போது ரோம அர்ஷணர் என்னும் சூதமாமுனிவர் புராணம் சொல்லிக்கொண்டிருந்தார். பல பத்திரர் ஆங்கு எழுந்தருளலும் பகவான் சௌனகாதிமாமுனிவரெல்லாம் எழுந்து வலம் வந்து தண்டன் சமர்ப்பித்துக் கைநீர், அடிநீர், உண்ணீர், கொடுத்து ஆசனத்தில் எழுந்தருளி இருக்கச்செய்தனர். அக்காலை பலராமர் அச்சூதரைக் கடைக்கணித்துச் சர்வ சாஸ்திரங்களை உணர்ந்தும், வியாசமாமுனிவர் மாணாக்கனாய்த் தன்னை வைத்தும் தருமபாலகனாகிய எம்மைக்கண்டு எழுந்திராமலும் அஞ்சலிசெய்யாமலும், வேதியரிருப்புக்கும் மிகவுந்த ஆசனத்தில் வீற்றிருக்கும் இவன் நம்மால் * ஒறுக்கப்படத்தக்கவனென்று சாக்கிரத்தால் ஒச்சலும் தலைதுணிந்து சூதமாமுனிவர் விண்ணேறினர். சுற்றத்தார் மாய்தலைப் பொறுக்காமல் தீர்த்தயாத்திரையை முன்னிட்டுப் போந்த பலபத்திரர் பிரபாதியாகிய சூதபுராணிகரைக் கொன்றருளினர். பின்பு சௌனகாதியரெல்லாம் பலராமரை நோக்கி எம்பெருமானே அச்சூதருக்கு ஆயிரமாண்டு ஆயுளும் பிராமணீகமும் கொடுத்து யாங்கள் புராணம் கேட்டோம். பிரமவித்தாகிய அவரைக் கொன்றமையால் தேவரீர் பிரமகத்தி அடைந்தீர். அடியோங்களும் புராண சிரவணத்தை யிழந்தோம் என்று கூறலும், பலபத்திரர் கலக்கமுற்று உரோம அர்ஷணர் புத்திரராகிய உக்கிரசிரவசுக்கு வரங்கொடுத்து அவராலே புராணம் சொல்லச்செய்கின்றோம். பாபம் தொலைய நீவிர் எமக்குப் பிராயச்சித்தம் விதியுமெனச் சௌனகாதியர் பலராமனைநோக்கி இல்வலன்மகனாகிய பல்வலனைக்கொன்று எமதிடரைக்களைந்து பாரதவருஷம் முழுதும் வலம்வந்து தீர்த்தயாத்திரை செய்யின் தோஷம் நீங்குவீர் என்று விதித்தப் பின்பு உக்கிரசிர

வசால் புராணம் கேட்டனர். மேலேகூறிய சாண்டிலியில் தங்க இடமும் நைமிசாரணியம் செல்ல வாகனமும் கிடைக்கும்.

ஸ்ரீகாசியிலிருந்து உத்தேசம் ௱௪0 மயில் தூரத்தில் கயாக்ஷேத்திரமும் நடுவண் பக்ஸார், டைநாபூர், பாங்கிப்பூர், முதலிய பெரிய நகரங்களு மிருக்கின்றன. சோணமாநதி மார்க்கத்திற் செல்லாநின்றது. ஸ்ரீமத்கயா செல்வோர் பாங்கிப்பூரிலிறங்கி வேறுவண்டி ஏறுவார். அதற்கு ௩௱௩0௮ மயில் தூரத்திலிருக்கின்ற கல்கத்தாவுக்குச் செல்வோர் இறங்காது போவார். ஸ்ரீகாசியிலிருந்து புறப்பட்டு நடுவில் தங்காமலே ஸ்ரீமத்கயாசாரலாம். தங்குவதற்கு பாங்கிப்பூரில் இடமும் இரண்டுமயில் தூரத்திலிருக்கின்ற கங்கைக்குப் போய்வர வாகனமும் கிடைக்கும்.

**ஸ்ரீமத்கயா.** ஆத்மாவே புத்திரனாய்ச் சனித்தல் அருமறை துணிபாதலால் ஒருவன் தான்மணந்த ஒருத்தியைச்சேர்ந்து ஒரு புத்திரனைப் பெற்று மீண்டும் அவளைப் புணர்வானாயின், அவன் தாயைப்புணர்ந்தவனாவான் என்பது அறநூல் துணிபாகவும், ஒருவன் பலபுத்திரரைப்பெறின் அவரில் எவனாயினும் எக்காரணத்தாலாயினும் ஸ்ரீமத் கயாக்ஷேத்திரம் சென்று பிண்டபிரதானம் செய்வான் என்னும் கருத்தால் ஒருவனுக்கு அநேகபுதல்வர், உளராதல் வேண்டுமெனத் தர்மசாஸ்திரங்களெல்லாம் கூறுகின்றன என்ப. ஸ்ரீமத் கயாக்ஷேத்திரம் மிருதிகளாலும்; க்ஷேத்திரமொன்றனையும் புகலாத இதிகாச சிரேஷ்டமாகிய ஸ்ரீமத் ராமாயணத்தாலும் சொல்லப்பட்டது. ஸ்ரீமத் ராமாயணம் சுவேதாரணியமென்ற திருவெண்காட்டைக் கூறிற்றன்றோ எனில் கூறிற்றன்று சுவேதாரணியத்தில் உருத்திரன் கூற்றைஉதைத்தாற்போல ராகவபிரான் காலை உருட்டினனென்று சொல்லப்பட்டிருத்தலால் உபமானமாய் எடுக்கப்பட்



டதேயல்லது அது கூறப்பட்டதாகாது. இதனால் க்ஷேத்திரத்தைக் கூறவேண்டுமென்பது முனிவர்க்குக் கருத்தன்மை அறிக. கயாசிராத்தம் செய்யாதபுத்திரன் புத்திரனல்லன் அவனைப் பெறோரும் புத்திரனைப் பெற்றோரல்லர். விலங்கைப் பெற்றோராவார்.

பிரயாகாமுண்டம், காசிதண்டம், கயாபிண்டம் எனவும், பாண்டுரங்கம் நாதபிரமம், ஜகந்நாதம் அந்நபிரமம் ஸ்ரீமத் கயாபிண்டபிரமம் எனவும் இது க்ஷேத்திரராஜா எனவும் சொல்லுப. ஸ்ரீமத் கயாவில் பல்கு நதிக்கரைமேலிருக்கின்ற கோயிலுள் ஸ்ரீவிஷ்ணுபாதமும் அதனைச்சூழ்ந்து பிரமபதம், உருத்திரபதம், முதலிய தேவர்களின் பாதங்களும், ருஷிகளின் பாதங்களும், இருக்கின்றன. யாத்திரைகாரர் பஞ்சகயை, அஷ்டகயை, மகாகயை. இவற்றில் தமது சக்திக்கு அடுத்த ஒன்றையாயினும் இரண்டையாயினும் மூன்றையுமாயினும், செய்வர். சாமானியமாய் யாவரும் பல்குநதியில் நீராடிச் சிராத்தம்செய்து விஷ்ணுபதத்தில் பிண்டபிரதானம் செய்வா. அதுவே போதுமானதென. அமையும் இப்பரப்பெல்லாம் ஸ்ரீமத் கயாமான்மியத்தால் உணர்க. அது தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றது. அதன் சாரசங்கிரகத்தை எடுத்து ஈண்டுப்பதித்தாம்.

சாரசங்கிரகம்.

ஸ்ரீவைஷ்ணவோத்தமனாகிய கயாசூரன் ஸ்ரீ அச்சுதபிரானை நோக்கி அருந்தவம்புரிந்து பிறரால் அழிவுறாவரன்: பெற்றுத் தனதுடலைப் புனிதமாக்கிய ஆற்றலையும், மகாபாதகராயினரும் அவன் மெய்யைத்தீண்டிச் சுவர்க்கம்புகுந்த ஆற்றையும், யமலோகம் பாழாதலைப்பற்றி கூற்றுவன் மனம்வருந்தி இந்திராதி தேவரோடு சென்று நான்முகனுக்குணர்த்த, அவ்வயன் சங்கரனையுடன்கொண்டு சென்று ஸ்ரீசர்வேசன் திருமுன்னர்ப்பணிவாக விண்ணப்பஞ்செய்து கைகூப்பிநிற்க, அவ்வாதிபகவன் கயாசூரனை வலியடக்கத்தக்க உபாய

முறைதருளிய ஆற்றையும், சதுர்முகன் கயாசுரனை யிரந்து அவன் உடலில் வேள்விபுரிந்த வாற்றையும், பூர்ணாகுதிசெய்த பின்னரும் அவன் சாகாமே எழக்கண்டு, அவன் தலையில் தருமசிலையைப்பெய்த ஆற்றையும், பின்னும் அவன் எழவே தேவரெல்லாரையும் அச்சிலையின்மேல் ஏறி நிற்கச்செய்த ஆற்றையும், மீண்டும் அவன் எழமுயலவே ஸ்ரீகதாதரனை எழுந்தருளச்செய்த ஆற்றையும், பின்னர் கயாசுரன் வலியோய்ந்து ஸ்ரீகதாதரனைத் துதித்தல்செய்து பிதிர்பொருட்டு வரம் பெற்ற ஆற்றையும் பிதிரர் எல்லாரும் தமது குலத்தில் பலபுத்திரருளராயின், அவரில் ஒருவன் ஸ்ரீமத் கயாக்ஷேத்திரம் வந்து அவனுடைய காலினாலேனும் நம்மைக்குறித்துச் சிறிது நீர் இறைத்தல் செய்யானோ? என்னுங் கருத்தால் தமது குலம் அழியாது என்றென்றும் விளங்க ஆசிக்கின்ற ஆற்றையும், தருமமாமுனிவருக்குத் திருக்குமாரத்தியாகிய தருமவிரதை கணவன்சாபத்தால் தருமசிலையாகிய ஆற்றையும் பிரமன் தான்செய்த யாகத்தின்பொருட்டுக் கற்பித்த பிராமணர் கட்டளையிகக்கக்கண்டு அவரைச்சபித்த ஆற்றையும், பின்னர் அவ்வையன் அவ்வந்தணரை உயரச்செய்து கயாசிராத்தத்துக்கு அவரையே உரியராக்கிய ஆற்றையும், பரத்துவாசமாமுனிவர் கசியபபதத்தில் பிண்டபிரதானம் செய்கையில் இரண்டு கரங்கள்தோன்ற, அவர் அன்னைசொற்படி பீஜமும், க்ஷேத்திரமுமுடைய இருவருக்கும் பிண்டபிரதானம் செய்த ஆற்றையும், சக்கரவர்த்தித் திருமகனும், வீடுமரும், தருமபுத்திரரும் பிண்டபிரதானம் செய்த காலைமுறையே தசரதசக்கரவர்த்தியாரும், சந்தனுமகாராசனும், பாண்டுமகாராசனும் எதிர்த்தோன்றிய ஆற்றையும் கலியுகத்தில் ஸ்ரீஜநார்த்தனன் இலிங்கருபமாயிருந்து தேவதாந்திரபாருக்கும் முத்தியளிக்குமாற்றையும், பல்குதீர்த்தமுதலிய தீர்த்தங்களின் மகிமையையும், வடவிருக்ஷத்தின் மகிமையையும், கயாசிராத்த

51



விதியையும், கிரௌஞ்சபதத்திலும், அகத்தியபதத்திலும், சூரியபதத்திலும், கார்த்திகேயபதத்திலும், பஞ்சாக்கினிபதத்திலும், கசியபதத்திலும், உருத்திரபதத்திலும், பிரமபதத்திலும், ஸ்ரீவிஷ்ணுபதத்திலும் பிண்டப்பிரதானஞ் செய்யவேண்டிய ஆற்றையும், அதனால் பிதிரரும் செய்தவனும் எய்தும் பேற்றையும், ஒருவன் தனக்கும் உயிரோடு வாழாநின்ற தன்னைச் சார்ந்தவருக்கும் ஸ்ரீஜநார்த்தனன் கரத்தில் பிண்டப்பிரதானம் செய்யவேண்டிய ஆற்றையும் ஸ்ரீமத் கயாமான்மியம் கூறுகின்றது.

ஸ்ரீமத் கயாக்ஷேத்திரம் ஏனைக்ஷேத்திரம் போறதன்று மிருதியாலும் இதிகாச சிரேஷ்டமாகிய ஸ்ரீமத்ராமாயணத்தாலும் அது ஆதரிக்கப்பட்டது.

---

கோயிலுக்குச் சிறிது தூரத்தில் கட்டிடங்கள் மத்தியில் வடவிருக்ஷமிராநின்றது. யாத்திரைக்காரர் அதனை வலம்வந்து தண்டம் சமர்ப்பித்து அருச்சிப்பார். இக்க்ஷேத்திரத்தில் க்ஷவரமும் ஸ்தல உபவாசமும் செய்யவேண்டுவதில்லை.

114591

அன்னசிராத்தம் செய்யும் பார்ப்பார் தாம் தங்கியிருக்கும் மனையிலாயினும், அக்ஷயவடத்தின்கீழ் கட்டடத்திலாயினும் கயாவாலரை வரித்து சிராத்தஞ்செய்து கோயில்வந்து பிண்டபிரதானம் செய்வார். எசமானியாரும் எக்காலத்தும் கூடி பிண்டபிரதானம் செய்வராதலின் தனியே அதுசெய்ய விரும்புவோர் அன்று முறைகாரருக்குச் சிறிது பொருள்கொடுத்துச் சந்நிதிக்கதவைச்சார்த்தி மற்றையோரைச் சிறிது நேரம் நிறுத்தவேண்டும். ஆமசிராத்தமாயின் கோயிலில் செய்யலாம், கோயிலிலும் நதிக்கரையிலும் பருவதசிகரத்திலும் சிராத்தம் செய்யும்படி விதியுளது சூத்திரர் ஆமசிராத்தமேயல்லது இரணியசிராத்தம் செய்யவும் உரியரல்லர் அஃதுணராது திரமிடதேயத்தில் தங்குலத்தாரை வரி

த்து அன்னசிராத்தம் செய்து பிதிர்சாபம் பெறும் சில சங்காசாதியார் சம்பம் ஸ்ரீமத்கயாவில் நடவாது. இவர் ஆங்குகயாவாலரை வரித்து ஆமசிராத்தமே செய்தல் வேண்டும். சாஸ்திரீயமான ஆமசிராத்தம் செய்தலுக்கு நானுவாரரியின்கடையில்விற்கும்பண்ணியங்களைவாங்கி கயவாலரை வரித்து அருத்திசிராத்தம் செய்ததுபோல பாவனைசெய்து பிண்டபிரதானம் செய்யலாம். யாத்திரைகாரருக்கு கயாவாலர் எல்லா உதவியும் செய்வர். இவர் குமாஸ்த்தாக்களும் பிராயாகவாலர் குமாஸ்த்தாக்களைப்போல யாத்திரைகாரரை யாண்டும் நாடுவர், கயாவாலர் என்போர் யாகஞ்செய்வதற்குப் பிரமனால் கற்பிக்கப்பட்ட பிராமணர். அவர் அந்நான்முகனால் சாபம்பெற்று வறிஞராய் வருந்திப் பின்பு அத்தேவனால் வரம்பெற்று புரோகிதத்தொழிலுக் குள்ளாயினர். பிராமணருள் ஸ்ரீவைஷ்ணவர் முதலிய எச்சாதியாரும் அவரையே வரித்து சிராத்தம் செய்வர். அவர் ஆசாரமிலரென்பதும் ஒருதினத்தில் பல இடங்களில் பிராமணார்த்தம் உண்பர் என்பதும் உண்மையே. ஒருவனுக்குரிய சொத்தில் பாதி விலைபெற்றிருந்த ஸ்ரீமத் கயாசிராத்தம் இப்போது ஐந்துருபாய் விலையில் நிற்கின்றது. பிரயாகையில் வசிக்கும் திராவிடதேயத்தோரிடத்திலிருந்து அவர்க்குட்பட்ட கயாவாலரொருவருக்கு ஒருசீட்டுப் பெற்றுப்போய், ருபாய் ஐந்து கொடுத்தால் அவர் தங்க இடம் கொடுத்து சிராத்தம் செய்துவைத்துப் புகைச்சாட்டியும் ஏற்றிவழி விடுவர் சீட்டுக்கொடுத்தவர்க்கு ஐந்துருபாயில் தரவு உளது. பிண்டபிரதானம் செய்த உடனே அக்ஷயவடத்தின்கீழ் ஸ்ரீமத்கயாவாலர் உட்கார்ந்து சிராத்தம் செய்தோனுக்கு சந்தனம்பூசி பூமாலை போட்டு மேலே கூறியாங்கு "முண்ட, தண்ட, பிண்டங்களைச்சொல்லி ஒருபூமாலையால் முதுகில் அடித்து தட்டிக்கொடுத்து, நினது பிதிரெல்லாம் சுவர்க்கம் சார்ந்தனர் என்று சொல்லி உச்சாகப்படுத்தி, சுபலம்



சய்யாதானம் முதலிய தானங்களும் கேட்பர். சுபலத்துக்கு நூறுருபாயும் பிறதானங்களுக்கு இருபது ருபாயும் கொடுப்பின் பெருமகிழ்வோடு ஆசிகூறுவர். ஐந்துருபாய்ச் சீட்டுபெற்றவர்களுக்கு மற்றவை எல்லாம் செய்து அக்ஷயவடத்தின்கீழ் ஒன்றும் செய்யார். சீட்டுப்பெறாமலே ஸ்ரீமத்கயாவந்து ஐந்துமுதல் தன்னால் இயன்றது கைகொடுத்து முடித்துக்கொள்ளின், தரவுத்தொகையுள்பட ஸ்ரீமத் கயாவாலர்க்குச் சேரும்.

பிரயாகத்தில் தாராகஞ்சத்திலுள்ள நந்தேயத்தோர் வலியச் சீட்டுக்கொடாமல் விடார் தமக்குத்தரவு கிடைத்தலின். பாசுராமனால் சுவர்க்கத்துக்குக் கட்டப்பட்டிருந்த படியை ராகவபிரான் உடைக்காவிடின் இவர் அதற்கும் சீட்டுக்கொடுத்து சாவோரிடத்தில் பணம்பறிப்பார் போலும் பரமபதத்தில் கிரைப்பாத்திக்குச் சீட்டுகொடுப்போரும் பெறுவோரும் உளராயினபோது ஸ்ரீமத் கயாசிராத்தத்துக்குச் சீட்டு கொடுக்கப் பெறுதல் குற்றமன்று.

ஸ்ரீமத் கயாவாலர், பார்ப்பதிக்குக் குருசிவன் அச்சங்கரனுக்குக் குரு சரச்சுவதி, அத்தேவிக்குக்குருபிரமன் அத்தேவனுக்குக் குரு பெரியபிராட்டி, அவட்குக் குரு அவள் காந்தன், என்னும் மாத்துவமதாநுசாரிகளாகலால், இனம்பற்றித் திராவிடதேய மாத்துவரில் சிலர் ஆங்குகுடியேறி இருக்கின்றார். ஸ்ரீமத்கயாவாலர் மாத்திரம் பிராமணரேயலது, அவரது பெண்டாட்டிகள் சூத்திரஸ்திரிபோல்வார். அப்பெண்கள் தளிகைசெய்து இவர் உண்ணார். சயனகாலத்திலன்றி அவரைத் தீண்டார். மாத்துவ பிராமணர்களும் அவர் ஸ்திரிகளும் தமது சக்திக்கு அநுகுணமாய்த் தலைக்குச் சிலவீடுகளை ஒப்புக்கொண்டு தளிகை செய்துவைத்துப் போவர். ஸ்ரீமத் கயாவாலர் தாம் எடுத்துண்டு மிச்சிலை ஸ்திரிகளிடம் கொடுக்க அவர் அருந்திப் பாத்திரங்களைச்சுத்திசெய்துவைப்பார்.

ஸ்ரீமத் கயாவில் செம்பினாலும் கருப்புக்கல்லினாலும் ஸ்ரீவிஷ்ணுபாதம் செய்துவிற்பார்; செய்யச்சொல்லின் பொன்னினாலும் வெள்ளியாலும் செய்வர். தசாவதாரம் முதலிய விக்கிரகங்கள், நகாசுபோட்ட பித்தளைத் தாம்பாளங்களும், நார்மடிகளும், கற்பாத்திரங்களும் ஆங்கு வாங்கலாம். இதற்கு ஆறுமயில் தூரத்தில் புத்தகயை யிருக்கின்றது ஆங்குப் போய்பார்த்து வருவாருமுளர். இதனின்று புறப்பட்டு மத்தியபட்டினங்களில் தங்கியேனும் தங்காமலேனும் பிரயாகம் சாரலாம்.

கயாவாலருள் ஸ்ரீமாந், கங்காவிஷ்ணு சோபேலால் என்பார் சகல சாஸ்திர பாரங்கதர் பரமவைதிகர் ஸ்ரீராமபக்தர் இடம் பொருள் ஏவல் எல்லாம் குறைவின்றி உடையவர். யாத்திரைகாரரிடத்தில் பேரன்புடையவர் சி. எஸ். ஐ. என்னும் பட்டம்பெற்றவர்.

பொருட்செலவிற்கும் காலதாமதத்துக்கும் அஞ்சுவோர் ஸ்ரீபிரயாகம், ஸ்ரீகாசி, ஸ்ரீஅயோத்தி, ஸ்ரீமத்கயாசென்று மீண்டும் பிரயாகம் வந்து தமதுதேயம் செல்வார். அவற்றுக்கு அஞ்சாதார் பிரயாகையில் இருந்தபடியே சென்று கான்பூர், ஆக்ரா, ஸ்ரீமதுரை ஸ்ரீகோகுலம் விருந்தாவனம், கோவத்தனம், டில்லி, மீரட்டு, அமிர்தசரசு, லாகூர், அரித்துவாரம், வதரியாச்சிரமம் முதலிய க்ஷேத்திரங்களையும் பட்டினங்களையும் சேவித்துப் பார்த்துக்கொண்டு மீண்டுங் கான்பூர்வந்து, அவ்வூரில் பிரியும் வேறு தூமரதம் ஏறி லக்னோசென்று ஆங்கு வேறுவண்டி ஏறிப்போய் மேலே கூறிய சாண்டிலி ஸ்டேஷனில் இறங்கி நைமிசாரணியம் சென்று மீண்டு லக்னோ மார்க்கமாய் திருவயோத்தி, ஸ்ரீகாசி, ஸ்ரீமத்கயா, மீண்டும் பிரயாகம் சேர்ந்து தேயம்செல்வர். மேலே கூறிய கான்பூர் முதலியவற்றிற்குச் செல்லும் மார்க்கத்தை மொழிவாம்.



**கான்பூர்.** பிரயாகைக்கு - ௧௨௦ - மயில் தூரத்திலிருக்கின்ற இவ்வூர் கங்கையாற்றின் கரைமேலுள்ள பெரியபட்டினம். இங்கிருக்கின்ற மந்திரத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானுக்குப்பிரயாகைநாராயணன் என்று திருநாமம். யாத்திரை காரர் அக்கோயிலில் தங்கலாம் வாகனங் கிடைக்கும். சிலவருடங்களுக்கு முன் இந்நகரத்தில் பெரிய கலகம் நடந்து, ஒரு தோட்டத்திலுள்ள கிணற்றில் பலபேர்கள் தள்ளப்பட்டார்கள் அத்தோட்டமும் கிணறும் இப்போதும் இருக்கின்றனவாம்.

**டூண்டலா.** இவ்வூரினின்று புகைத்தேர் பிரிந்து ௧௫-மயில் தூரத்திலுள்ள ஆக்ரா, பரத்புரி ரிவாரி என்ற நகரங்களின்மேல் சென்று பண்டிகியைச் சாருகின்றது.

**ஆக்ரா.** யமுனை யாற்றின்கரை மேலுள்ள இம்மாநகரம் அக்பர் என்போரால் உண்டாக்கியதாகையால் ஆக்பர் பாத் என்னும் பெயராயிற்று. மிலேச்சநகரமாயினும் அது பார்க்கத்தகுந்ததா யிராநின்றது. இதனில் தாஜ்மகால் என்னும் பெரியமண்டபம் இருக்கின்றது. அதனை ஒப்பாயது யாண்டுமிலது. இது வல்லது வேறு சில கட்டிடங்க ளிருக்கின்றன. அங்குள்ளா ரொருவனை உடன்படுத்திக்கொள்ளின் யாவற்றையும் பார்க்கலாம்.

**ஆத்ராஸ்.** புகைச்சாடு இவ்வூரினின்றுபிரிந்து மதுரைக்குச் செல்லாநின்றது.

**ஸ்ரீமதுரா.** கண்ணபிரான் திருஅவதார ஸ்தலமும் காளிந்திக்கரைமேலுள்ளதும் ஆகிய இம்மாநகர்சப்தபுரியிலும் நூற்றெட்டுத்திருப்பதியிலும் ஒன்று.

ஸ்ரீபெரியாழ்வாரும் ஆண்டாளும், திருமங்கையாழ்வாரும் மங்களாசாசனம் செய்திருக்கின்றனர்.

நூற்றெட்டுத்திருப்பதி அந்தாதி.

செல்வமும்பிருடம்பு சேரவுரித்தாக்கி
வல்வினையினீங்குமினோ மாந்தர்காள் - தொல்லை
வடமதுரையான்கழலே வாய்த்த தஞ்சமென்று
இடமதனைசெய்தான் பிறந்து.

தேவாசுரயுத்தத்தில் அச்சுதப்பிரான் அசுரரை அமரக்களத்தில் வீட்டியருள அவரெல்லாம் அவனியில் அரசராய்ப் பிறந்து கொடுங்கோலோச்சினர் அன்னவர் கொடுங்கோலோச்சவே புவியில் தருமங் குறைந்து அதர்மம் மிகுந்தது.

திருக்குறள்.

“ஆபயன்குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவானெனின்.”

அவனியாள் அக்குறைதலையும் மிகுதலையும் பொறுதாளாகி ஆவுருவங்கொண்டு அயனுலகு சார்ந்து வேந்தர் விளைக்கும் கொடுந்துன்பை அவ்வயனுக்கு அறிவித்தலும், அப்பிரமன் சங்கரேந்திராதி தேவரோடு பாற்கடலணைந்து, எல்லாம் வல்லசர்வ சுவாமியைத் திருவடிதாழ்ந்து விண்ணப்பம் செய்தலும், ஆங்கு அசரீரி வாக்குப்பிறந்தது. நான்முகன் அதனையுணர்ந்து தேவர்களைப்பார்த்து, “வாசுதேவன் வசுதேவருக்கு திருக்குமாரனாய் அவதரித்துப் பூபாரம் நீக்கியருளுவான். அரமகளிரும் நீவிரும் பூசார்த்தமாக கோபஸ்திரீகளாகவும், யாதவர்களாகவும் அவதரிமின். அனந்தாழ்வானும் சுவாமிக்கு மூத்தோனாக அவதரித்தருளுவான். பகவன் மாயையும் ஒரு காரியார்த்தமாய்ப் பெண்ணுருக்கொள்ளும் என்றோதித் தேவர்கட்கும், பூதேவிக்கும் விடைகொடுத்தருளிச் சென்றான்.

மதுராபுரியில் உக்கிரசேன மகாராசனுக்குக் குமாரனாகிய கஞ்சன் தனது உடன்தோன்றினாளாகிய தேவகியாரை வசுதேவருக்குத் திருமணம்புரிவித்து, மணமக்களை அவர் மனைக்கண் உய்க்கும்பொருட்டுத் தானே கோல்கொண்டு ரதத்தை நடாத்திச் செல்லும்போது ஏ கஞ்சா? தேவகி வயிற்றிற்பிறக்கும் மகவுகளில் எட்டாவதால் நீ இறுதியடைவாயென்று அசரீரியுண்டாயிற்று, கஞ்சன் அதுகேட்டு மனம்வருந்தி, அப்போதே



தேவகியாரது குழலைப்பற்றி அவளைக் கண்டங்காண வாளுருவினான். அவ்வேலை வசுதேவர் கஞ்சனைநோக்கி இனி இவள் பூத்துப் புனலாடிக் கருவுற்றன்றோ மகவுயிர்ப்பாள். அல்லது உம் அவளது எட்டாவது மகவாலன்றோ நின்னுயிர்க்கு இறுதியுண்டாகும் அவள் பெறும் குழவிகளை எல்லாம் நின்னிடம் கொடுக்கின்றேன். இசைந்தது செய்வாய். இவளையொன்றும் செய்யாய் என்று வேண்டினர். கஞ்சன் இவளை உயிர்க்கொலைபுரிவதில் பயனில்லை. அவள் பெறும் குழவியைக் கொன்று விடுவோம் என்று தேவகியாரையும் வசுதேவரையும் அவர் மனைக்கண்விடுத்துப்போயினான். பின்னர் தேவகியார் கருவுற்று மகவுபெறுதலும் வசுதேவர் முன்வாய்மைசொன்னபடி, அக்குழவியைக் கஞ்சனிடம் கொணர்ந்தனர் அவன் அதனைப்பார்த்து இரங்கி எட்டாவது குழவியாலன்றோ நான் உயிர்மாய்வேன். இதனை நீர் கொண்டுபோமென அவரும் மகவை எடுத்துச் சென்றார். உடனே பகவான் நாரதமாமுனிவர் எழுந்தருளிக் கஞ்சனைநோக்கி என்செய்தனை. எட்டாவது பிள்ளையாது. ஒவ்வொருபிள்ளையும் எட்டாவதாகும். தேவகி வயிற்றுப்பிள்ளையால் நீ முடிவதற்கு ஐயமில்லை. நீ முற்பிறப்பில் காலநேமி என்ற அசுரன். மற்ற அசுரரெல்லாம் உன்னைச்சேர்ந்தவர்களாய் பிறந்திருக்கின்றார்கள். இப்பிறப்பிலும் உங்களைமாய்க்க ஆதிபகவன் தேவகிநந்தனனாய் அவதரித்தருள்வான். சிலதேவர்களும் யாதவர்களாய் அவதரித்திருக்கின்றார்கள் என்றோதிப்போயினர். அக்கணமே கஞ்சன் தேவகியாரது மகவை மீண்டும் கொணர்ச்சொல்லி அதனை உயிர்க்கொலைபுரிந்து அத்தேவகியாரையும் அவர் பதியையும் பெருந்தளையிட்டுச் சிறைச்சாலையில் அடைத்து அவர் பெறும்குழவிகளையெல்லாம் கோறல்செய்து சாரசந்தன், பிரயம்பன், பகன், சாணூரன், திருணவர்த்தன், முதலியோரைத் தனக்கு நட்பாளராகச் செய்து, யாதவர்களை விரோதித்துக்கொ

ண்டிருந்தான். அக்காலே யாதவர்களெல்லாம் கஞ்சன் செலுத்தும் கொடுங்கோலால் திசாதிசை ஓடி உயிர் வாழ்ந்தனர். தேவகியார் பெற்ற ஆறு குழவிகள் கஞ்சனால் முடிவுபெற்றபின்னர் தேவகியார் ஏழாவது கருப்பமுற்றார். வசுதேவரது மற்றொரு மனைவியாகிய ரோகிணி என்பாள் அவரது நட்பாளனாகிய நந்தகோபன் மனைக்கண் இருந்தாள். மாயோன் யோகமாயையாலே தேவகியாரது வயிற்றுக்கருவைச் சங்கருஷணம்செய்து, அவ்வுரோகிணிவயிற்றில் வைத்தருளினான். தேவகியாரது கருப்பம் கலைந்ததென்று கஞ்சன் முதலியோர் நினைந்திருந்தார். பின்பு தேவகியார் கருப்பமடைதலும் அசரீரி சொன்னபடி எட்டாவது மகவாலே வாணாள் முடியுமென்று கஞ்சன் முன்னினும் அச்சமுற்றிருந்தான். சிங்கமாதத்தில், கிருஷ்ணபட்சத்தில், அஷ்டமியில், ரோகிணி நட்சத்திரத்தில், விருஷபலக்கினத்தில், சந்திரோதயகாலத்தில், கருநாயிறு உதித்தாற்போல அச்சுதபானு திருவவதரித்து ஸ்ரீயபதியாய் திருமருமார்பனாய், நீலமேக சாமளமூர்த்தியாய் சதுர்ப்புஜனாய், சங்குசக்கர கதாதரனாய், கிரீடகேயூர குண்டலதரனாய் கௌஸ்துபமணிமார்பனாய், பீதாம்பரதரனாய் வசுதேவருக்கும் தேவகியாருக்கும் சேவைசாதித்தருளலும், அத்தரிசன விசேஷத்தால் அவ்விருவரும் பரமஞானம் அடைந்து, பரமாத்மனைத் துதித்துச் சனகாதியரும் பெறாதபேறு அடியோங்கள் பெற்றோம், தேவரீர் இங்ஙனம் சேவை சாதித்தருள அடியோங்கள் எத்தவம் புரிந்தோமோ எனலும், திருமகள் காந்தன் நீவிரிருவீரும் முன்னமே எம்மைக்குறித்து மாதவம் புரிந்தீர். யாம் நுமக்கு எதிர்த்தோன்றி வரங்கேண்மின் என்றலும் நீயிர் எமது மாயையால் சூழப்பட்டு வீடுபேற்றைக் கேளாமல் மூன்றுவர்த்தி உங்கட்குப்புத்திரனாய் அவதரிக்கும்படி கேட்டனிர். அவ்வண்ணம் வரந்தந்து நீவிர் பிரச்னியாகவும், சுதபசாகவும் உதித்தபோது உமது வயிற்றில் பிறந்



தோம். அப்போது எமக்குப் பிரச்னிகருப்பன் என்று பெயர். பின்பு நீவிர் அதிதியாகவும் காசிபபிரசாபதியாகவும், ஆயினபோது உபேந்திரனாய் உமது வயிற்றில் பிறந்து வாமனனாகவும், திரிவிக்கிரமனாகவும் ஆயினோம். இப்போது மூன்றாம் அவதாரமும் செய்தோம். இச்சன்மத்திலே நீவிர் வீடடைவீர் என்றருளி அவரை மாயையால் கதுவச்செய்தலும் தேவகியார் பரமஞானம் நீங்கிப் பகவனை நோக்கி இத்திருவுருவத்தோடு தேவரீர் எழுந்தருளி இருப்பிரேல் கஞ்சன் வருத்துவனே என்று வருந்தி அஞ்சினார். அப்போது கேசவபிரான் வசுதேவரைக் கடைக்கணித்து, எம்மைத் திருவாய்ப்பாடியில் நந்தகோபன் திருமாளிகையில் விடுத்து ஆங்குப் பிறந்திருக்கும் யசோதையின் மாயைப்பெண்ணை இங்குக்கொணர்மின். உமது கால்விலங்கு தெறிக்கும் கவாடங்களெல்லாம் உமக்கு வழிவிடும் என்று திருவாய்மலர்ந்தருளிப் பிறந்தவண்ணமாய்ச் சிசுவடிவமாயினான் அவ்வேலை பகவன் மாயையால் சிறுமழையும் மேகத்தொனியும் இருளும் உளவாயின. காவலாளரெல்லாம் பேருறக்கம் கொண்டார். உடனே * ஆனகதுந்துபியார் தம்பாலகனாகிய ஆலிலைப்பாலகனைக் காத்தால் ஏந்தலும், அவர் கால்விலங்கு பூட்டுவிட்டது கதவங்களெல்லாம் தாமே திறந்துகொண்டன. திருவநந்தாழ்வான் பொருக்கென வந்து குடையாயினன்.

சென்றாற் குடையா மிருந்தாற் சிங்காசனமாம்
நின்றால் மரவடியாம் நீள்கடலுள் - என்றும்
புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்
அணையாம் திருமாற் கரவு.

ஸ்ரீ ஆளவந்தார் இப்பாட்டுப்பொருளை சுலோகத்தால் சாதித்தருளினர். காகுஸ்தர்க்குக் கடற்கிறைவன் வழிவிட்டாற்போல யமுனையாறு இருபுறத்திலும், புன-

* ஆனகதுந்துபியார் - வசுதேவர்.

லை பிரிந்து நடுவே வழிவிட்டது. வசுதேவர் நந்தகோபன் திருமாளிகை சென்று தமது திருக்குமாரனை விடுத்து, ஆங்குபகவன் நியமனத்தால் பிறந்த மாயமகளை ஒருவருமறியாமலே எடுத்துக்கொண்டு மீண்டுவந்து சிறைச்சாலை யுட்புகுந்து சேக்கையில் வைத்தலும், வசுதேவர் காலில் தளை பூண்டுகொண்டது, கவாடங்கள் எல்லாம் தம்மைச் சார்த்திக்கொண்டன. உடனே பெண்ணாகவந்தமாயை அப்போது பிறந்தாற்போல பெருங்குரலிட்டு அழுதது. காவலாளர் எல்லாம் அக்குரல் கேட்டுச் சென்று தேவகியார் கருவுயிர்த்தாரென்று கஞ்சனுக்கு ஓதினார். அவன் வழக்கம்போல வசுதேவர்கொணர்வாரென்று இறையும் தாழாது கால்விசைத்தோடிச் சிறைச்சாலை யுட்புகுதலும், தேவகியார் மாயக்குழவியை மார்பில் அணைத்துக்கொண்டு, கஞ்சனை நோக்கி ஆணலன்றோ நீ உயிர்மாய்வை. பெண்ணால் என்னாகும். இச்சிசுவை யொன்றும் செய்யாதி என்று அவர் பெற்ற குழவி அதுவே என்று அவன் நம்புமாறு வேண்டினர். பெண்ணாயினும் ஆணாயினும் எட்டாவது மகவால் எனக்கு மரணமுண்டாகுமாகலின், அதனை உயிர்மாய்ப்பேனென்று, மாயமகவைக் கரத்தால் இருகாலைப்பிடித்து ஈர்த்து கருங்கல்லில் ஓச்சலுறலும் அக்குழவி கைபினின்று வழுவித் திருவாழி, திருச்சங்கு, கதை, சூலம், வில், பாணம், கேடயம், கத்தி ஆகிய படைகள் பற்றினவாய், இருநாலுகரத்தோடு மேலேசென்று உன்னைக் கொல்பவன் யாங்கணோ இருக்கின்றான். என்னைக்கோறலில் பயன்யாது என்றேறிப்போயிற்று. கஞ்சன் எட்டாவது மகவால் நமக்கு மரணமுண்டாகும் என்று தெய்வமும் * சூத்திரம் கூறிற்று. வீணே குழவிகளைக் கொன்றோம். நம்மைக்கொல்பவன் யாங்கணிருக்கின்றானோ என்று மனம் வருந்தி வந்து வசுதேவரையும் தேவ

* சூத்திரம் - பொய்.



கியாரையும் வணங்கித் தெய்வச்செயல் எங்ஙனமோயிருக்கின்றது. அஃதறியாமல் உங்களை வருத்தினேன். சிசுக்களையெல்லாம் கொன்றேன், நீவிர் மன்னித்தல்வேண்டும் என்று அபராத க்ஷாபணம் செய்துகொண்டு சிறைச்சாலையினின்று அவ்விருவரையும் விடுத்துப்போயினான்.

“ஊழிற்பெருவலியா வுளமற்றொன்று
சூழினுந்தான் முந்துறும்,”

பின்னர் கஞ்சன் அமைச்சர்களை அழைத்து நிகழ்ந்தவாறு உணர்த்தலும், அவ்வமாத்தியர் இவ்வுலகில் பிறந்திருக்கின்ற குழவிகளையெல்லாம் கோறல் செய்வோம். நீ வருந்தாதியென்று பூதனை முதலியோரை யேவினர்.

ஸ்ரீபாகவதத்தில் ஸ்ரீமதுரையில் நடந்த விருத்தாந்தங்கள் இடை இடைவரும். அவற்றை எல்லாம் ஈண்டு உரைப்பிற் பெருகும். இந்தமதுரை புண்ணியக்ஷேத்திரமல்லது பெரியபட்டினம். இங்கிருந்த ராதா கிருஷ்ணன் என்னும் ஒருதனாட்டியர் திராவிடதேயத்திலிருந்து யாத்திரார்த்தமாக வரும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு திருநாமம் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் கொடுத்துவரும்படி செய்திருக்கின்றார்.

**கோகுலம்.** பலராமன் திருவவதார ஸ்தலமும், கண்ணபிரான் வளர்ந்தருளிய க்ஷேத்திரமுமாகிய இது நூற்றெட்டுத் திருப்பதிகளில் ஒன்று. இதற்குத் திருவாய்ப்பாடி என்னும் பெயர்.

ஸ்ரீபெரியாழ்வாரும் ஆண்டாளும் திருமங்கையாழ்வாரும் மங்களாசாசனம் செய்திருக்கின்றனர்.

### நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி.

“கலந்தமரரோதிங் கலைகண்டாரோடும்
பொலிந்ததிருநாட்டிருக்கப் போவீர் - மலிந்தபுகழ்
அண்டராய்ப்பாடி யமலரடி பாடியார்
தொண்டராய்ப்பாடித் தொழும்.”

**விருந்தாவனம்.** கண்ணபிரான் திருவவதாரஞ்செய்து திருவாய்ப்பாடியில் வளர்ந்தருளிய பின்னர், யாதவரெல்லாம் விருந்தாவனத்தில் குடியேறினர், ஆங்கு வாசுதேவன் அநேக அற்புதச்செயல்கள்செய்தருளினன், மதுரை, கோகுலம், விருந்தாவனமாகிய இவற்றில் முகுந்தபிரான் செய்தருளிய திருவிளையாடல்களை எல்லாம் ஸ்ரீபாகவதத்தால் உணர்க; இப்பிருந்தாவனத்தில் மேலே கூறிய ராதாகிருஷ்ண பாகவதசிரேஷ்டரால் விசேஷ பொருட் செலவிட்டு பஞ்சபிரகாரத்தோடு ரங்கமன்னார் சந்நிதி கட்டப்பட்டிருக்கின்றது. பிறர்கையாலுண்ணாத வடதேயத்தோரெல்லாம் திராவிட தேயத்தோர் போல ரங்கமன்னார் முதலிய சந்நிதிகளில் தீர்த்தப்பிரசாதம் சுவீகரிப்பார்.

மாதவன் நிவேதனத்தை யுண்போர் நித்தராய் அவனை அடைவரென்று ருக்குவேதம் இரண்டாம அஷ்டகம் இரண்டாம் அத்தியாயம் இருபத்துநான்காம் வர்க்கமும், அவ்வாறே எசுவேத, ஆரணமும், அவ்வேத சாகை இரண்டாம் அஷ்டகம் நான்காம் பிரச்சம் ஆறும் அநுவாகமும், அதர்வணமும் திருமால் நிவேதனம் நுகரபஞ்ச ஆகுதி சமர்பணாதி செய்யவேண்டுவதில்லையென்று பாரத்துவாசஸ்மிருதியும், சாண்டில்ய ஸ்மிருதியும், இன்னும்பிரமாண்டம், ஸ்ரீபாகவதம், ஸ்மிருதிசங்கிதை, பௌஷ்டிகம், அரிபக்தி சுகோதயம், பரமேச்சுரசங்கிதை, நாரதியத்தில் விண்டுதத்துவம், ஆரிதஸ்மிருதி, பாரத்துவாசசங்கிதை, வசிட்டசங்கிதை, சாத்துவிதசங்கிதை, மகாசங்கிதை, பதுமபுராணம் ஆகிய இவைகளும், நாராயணன் தீர்த்த பிரசாதங்களை உண்ணின் முத்திபெறுவரென்று விதந்தோதுமென்றும், அவற்றில் ஆரிதஸ்மிருதி நாராயணன் பிரசாதத்தை ஒருவனுக்கு ஒருவன் கொடுப்பின் அதை உபவாசதினமென்று கொள்ளானாயின் அவன் பின்பு உண்பவை யெல்லாம் சுராபானமாகுமென்றும், தேவகாரியமும் பிதுர்காரியமும் நெடுமால் நிவேதனத்



தால் செய்யின் விசேட பலனெய்துவரென்று பதுமபுராணம் உத்தரகாண்டம் பகருமென்றும் இருசமய விளக்கநூலார் சாதித்தருளுவார்.

**கோவத்தனகிரி.** கோபாலரெல்லாம் இந்திரயாகஞ்செய்ய எத்தனித்ததும் முகுந்தன் அதனைக்கேட்டு இந்திரனுக்குச் செய்வதை இம்மலைக்குச் செய்யுங்களென்று சொல்லினன். அக்கோபாலரெல்லாம் அதற்குடன்பட்டு அடிசிலமைத்து, இம்மலையை யாராதித்ததும் இந்திரன் வெகுண்டு சப்தகாளமேகங்களையும் ஏககாலத்தில் பெய்யும்படிச் செய்தான். அச்சுதபிரான் கோபாலர்களும் ஆன்களும் படும் பேரின்னலை நோக்கியக் கோவத்தனகிரியை ஏழுநாள்வரையிலுங்குடையாக எடுத்துப்பிடித்துக் காத்தருளி இந்திரனால் துதிக்கப்பட்டான். யாத்திரைகாரர் ஒரு காவதவழி சுற்றளவுள்ள அக்கோவத்தனகிரியை வலம்வந்து தண்டன் சமர்ப்பிப்பர். பிரதக்ஷணம் செய்யும்போது மார்க்க மத்தியில்தங்குவதற்கு இடங்கள் உள்ளன. கோகுலம், விருந்தாவனம், கோவத்தனம், ஆகிய இவைகள் மதுராபுரிக்கு ஒருகாவததூரத்துக்குள் உள்ளன. அவற்றுக்குப்போக மதுரையில் வாகனம் கிடைக்கும்.

வடதேயத்திலுள்ளோர் திராவிடதேய ஸ்ரீவைஷ்ணவர்களைப் பரமாசாரியராகப் பாவித்து, அவரது ஸ்ரீபாததீர்த்தஞ் சுவீகரித்து ஆராதித்துப் பொருளுதவியும் செய்து அனுப்புவர். சிறிதுகால் ஒரே இடத்தில் தங்கி ஒரு தனிகனை அனுசரித்தால், அவன் திராவிடதேயத்தினின்று சுவாமிகள் எழுந்தருளியிருக்கின்றார்களென்று தன்னைச் சார்ந்தவர்களுக்கு அறிவித்து, சுவாமிகளை ஆசனத்தில் எழுந்தருளச்செய்து, அத்தேயத்தோன் ஒருவனைக்கொண்டு ஸ்ரீபாகவத பாராயணம் செய்வித்து, அச்சுவாமிகளுக்குத் தன்னாலும் பிறராலும் விசேஷபொருள் கைகூடச்செய்வான். அக்ஷராப்பியாசமும்

செய்யாத சுவாமிகளாயினும் திருமண்காப்புத் திருத்தமாய்த் தரித்துக்கொண்டு அவன் எத்தனைநாள் ஸ்ரீபாகவத பாராயணம் செய்கிறதென்று சங்கற்பித்துக்கொண்டானோ அத்தனை நாள்வரையிலும் சுவாமிகள் பகலில் தளிகை யமிசை செய்யாமலிருக்கவேண்டியதை மாத்திரம் வேண்டுவான். சுவாமிகள் அவன் வேண்டுகோளுக்கிணங்கி அருணோதயத்துக்கு முன்னமே தயிரும் பழஞ்சோறும் சுவீகரித்து கண்ணன் நித்திய உபவாசம் போல உபவாசம் செய்யவந்து ஆசனத்தில் எழுந்தருளியிருந்து பழஞ்சோறு மயக்கத்தால் தூங்கிவிழுவர்.

எப்பொருளையும் சுத்திசெய்வதாகிய நீரிலே போட்டப்படுகின்றமையாலும் இரவிலே நன்குமூடிக் காப்புச் செய்யப்படுகின்றமையாலும் பழஞ்சோறு மிக பரிசுத்தமாயதென்று சோளதேயத்தோர் அதனை உண்கின்றனரென்று விசுவகுணதரிசி நூலார் அசதியாடுவர்.

இவ்விதம் ஸ்ரீபாகவதம்படிக்கும் வழக்கம் மதுரைமுதலிய இடங்களில் விசேஷமாயுண்டு. சுவாமிகள் இரண்டு சுலோகம காதுக்கினிமையாய் இராகத்தோடு சொல்லவல்லாரானால் அவரைச்சரச்சுவதி அவதாரமென்பர். இனி ஆதாஸ் ரோட்டினின்று தொண்ணூற்றேழுமயில் தூரத்தில் டில்லிமாநகரமிருக்கின்றது.

டில்லி:—இந்நகரம் யமுனை யாற்றின் மேலைக்கரையில் இருக்கின்றது, பஞ்சபாண்டவர்கள் அஸ்தினபுரத்தினின்று கிருஷ்ணபரமாத்துமனை முன்னிட்டுக்கொண்டு காண்டவப்ரஸ்தம் என்னும் வனம்வந்தார் அப்போது சகநாதன் பாண்டவர்கள் அவ்வனத்தில்வதியும்படித் திருவுளம்பற்றித் தெய்வத்தச்சனாகிய விசுவகர்மாவை அழைத்துக் காடுகொன்று நாடாக்கி எயில் இழைத்து அந்நகர்க்கு இந்திரன் பெயரால் இந்திரப்ரஸ்தம் என்று பெயரிட்டருளினன்.



## வில்லிபுத்தூர் ஆழ்வார் பாரதம்.

### இந்திரப்பிரத்தச்சருக்கம்.

அங்கண்மாஞாலமுழுவதுங்கொடுத்தற்காயர்தம்பதியினைத்துதித்த, செங்கண்மால்முதலாங்கிளைஞரும்வயிரத்தேர்முதற்சேனையுந்தாமும், வெங்கண்மாசுணத்தோனெண்ணமெய்த்திசையும்வெளிப்படவேந்தரைவரும்போய்த், தங்கண்மாதவத்தாற்காண்டவப்பிரத்தமென்னுமத்தழல்வனமடைந்தார்.

போயவப்புகுந்தபொழுதுபைங்கடலும்பூவையும்புயலுநேர்வடிவின், மாயவற்கெவ்வாறிவ்வழியிவர்கள்வாழ்வரென்றொருசிந்தைவெய்தி, நாயகக்கடவுடன்னைமுன்னுந்துநாகர்நாயகனுநண்ணி, மேயகட்புலன்களிக்கிடத்திருமுன்னின்றனன்விச்சுவகன்மா.

நுண்ணிதினுணர்ந்தோருணர்தருஞ்சிற்பநூலறிபுலவனைநோக்கித், திண்ணிதினமரர்சேகரன்மொழிந்தான்றேவருமனிதரும்வியப்ப, மண்ணினும்புயங்கர்பாதலமுதலாமற்றுளவுலகினுமதராம், விண்ணினுமுவமையிலதெனக்கடிதோர்வியனகர்விதித்தியென்றே.

தேவினுக்கேவயோனியிற்பிறந்தோரினுஞ்சிறந்தயாவர்க்கும், பூவினுமெவ்வெவ்வுலகினுமுன்னம்புந்தியாலியற்றியபுரங்கள், யாவினுமழகும்பெருமையுந்திருவுமின்பமுமெழுமடங்காக, நாவினும்புகலக்கருத்தினுநினைக்கவரியதோர்நலம்பெறசமைத்தான்.

மரகதங்கோமேதகந்துகிர்தரளம்வைரம்வைடூரியநீலமெனி மணிபுட்பராகமென்றிவற்றிற்காகரமித்தமாநகரின், றரிமுதலிமையோரனைவரும்புகழ்ந்தாராடகப்பொருப்பினையழித்துத், தானியினாகமொன்றமைத்தவாவென்றுதபதியர்யாவரும்வியந்தார்.

என்பதியழகுகுலைந்ததென்றெண்ணியிந்திரன்வெறுக்கவுமியக்கர், மன்பதிபொலிவுசிதைந்ததென்றிடவுமற்றுளவானவர்பதிகள், புன்பதியாகிப்போயினவெனவும் புனையவப்புத்தியாற்புவிமே, லன்பதியதுவொன்றியற்றினனென்று நாரணாதிகடுதித்திடவும்.

சந்திராபதமுந்தினகரபதமுமிருபொழுதினுமெழச்சமைத்த, மந்திராதிகளுமஞ்சமுமதிலுமகாதோரணமணிமறுகுங், கொந்திரநின்றசோலையுந்தடமுங் கொற்றவன்கோயிலுநோக்கி, யிந்திராபதியவ்விந்திரன்பெயரா லிந்திரப்பிரத்தமென்றிட்டான்.

இப்பாரதத்தில் “ஒரோனந்தனைத்தேட” என்ற பாட்டுப் பாடப்பட்டும் சிலபாட்டுக்கள் மாற்றப்பட்டு மிருக்

கின்றன மேலே கூறிய பாட்டு வில்லிப்புத்தூர் ஆழ்வாரால் பாடப்படவில்லை என்பதை வாக்குபேதத்தாலே அறியலாம். வடமொழி மகாபாரதத்துள் அப்பாட்டுப் பொருளுள்ள சுலோகம் இல்லை. கல்கத்தாவில் பங்காளியால் அச்சிடப்பட்டிருக்கிற ஸ்ரீமகாபாரதத்துள் அவர் மதக்கொள்கைக் கிணங்க அநேக ஆயிரம் சுலோகங்கள் எடுக்கப்பட்டும், சேர்க்கப்பட்டும், வேறுபடுக்கப்பட்டும் இருக்கின்றன. ஸ்ரீகிருஷ்ண துவாரகாவாசி என்னும் சுலோகமும் அதிலில்லை. ஸ்ரீமத் கம்பராமாயணத்தில் "எழுந்தனர் கறைமிடற்றிறையும்" முதலிய சில பாட்டுக்களை "எழுந்தனர் கடகளிற்றிறையும்" என்று சிலர் திருத்திவைத்திருக்கின்றனர்.

சுதேச அரசர்களுக்குப் பின்னர் இந்த இந்திரப்பிரத்தம் மிலேச்ச சக்கரவர்த்திகளால் ஆளப்பட்டு டில்லி எனப் பெயர்பெற்றது. இதில் மிலேச்ச சக்கரவர்த்தி அரண்மனை பெரிதாயும் கண்ணுக்கினியதாயும் இராநின்றது. அஸ்தினபுரமும் குருக்ஷேத்திரமும் இந்நாட்டில் உள்ளன. அவற்றுக்குப் போகவேண்டின் அங்குள்ளோரை வினவி வழிதெரிந்துகொள்க. இந்த டில்லி முதல் முல்டான்வரையிலுமுள்ள புகைச்சாடுமார்க்கத்துக்குச் சிந்து பஞ்சாப் டெல்லி ரயில்வே என்று பெயர். லாகூரில் பிரிந்து பெஷாவர் வரையிலுள்ள நாமசகடமார்க்கத்துக்கு பஞ்சாப்நார்தர்ன் ஸ்டேட்டு ரயில்வே என்று பெயர். டில்லிக்கு ௪௦-மயில் தூரத்தில் மீரட்டும், அதற்கு ௩௫-மயில் தூரத்தில் முசபர் நகரும் அதற்கு ௩௯-மயில் தூரத்தில் சாரங்கப்பூரும், அதற்கு ௨௦௫-மயில் தூரத்தில் அமிர்தசரசும், அதற்கு ௩௨-மயில் தூரத்தில் லாகூரும், அதற்கு-௧௭௪-மயில் தூரத்தில் ராவல்பிண்டியும், அதற்கு-௫௮-மயில் தூரத்தில் சிந்துநதிக்கரைமேலே அடக்கும் இருக்கின்றன. அடக்குக்கு அப்புறம் மிலேச்ச பூமியானபடியால் சுதேசிகள் அதனைக்கடந்து செல்லார் அதனைக்கடந்து சென்றோர்



பிரஷ்டராவார். அடக்கு என்பதற்கு அதுவே பொருள். மேலே கூறியவெல்லாம் பார்க்கத்தகுந்த பெரியபட்டினங்கள். அரித்துவாரத்துக்குச் செல்வோர் அவற்றில் சாரங்கப்பூரில் இறங்கி அரித்துவார் பிராஞ்சுவண்டியேறிச்செல்வார்.

அங்கம் வங்கம் கலிங்கம் ஸௌராஷ்டரம் மகதம் என்னும் இவ்வைந்து தேயங்களுக்கும் யாத்ரார்த்தமாகவன்றி லௌகிகார்த்தமாகச் செல்லின் புநஸம்ஸ்காரம் செய்துகொள்ளவேண்டுமாம். அதை விதித்த இம்மிருதி சுலோகம் கௌமுதிவியாக்யாநத்தில் உதாகரிக்கப்பட்டிருக்கிறது. சிந்துநதிக்கு அப்புறமாகிய மிலேச்ச பூமிக்கும் மேலேகூறிய ஐந்துதேயங்களுக்கும் செல்லாகாதென்னும் விதி பார்ப்பாருக்கும் ஆன்ற ஒழுக்கமுடைய பிறருக்குமே யலது மாம்சபக்ஷகராகிய அசசூத்திரருக்கு இல்லையென்க.

சுலோகம்.

அங்கவங்ககலிங்கேஷு ஸௌராஷ்டரமகதேஷுச
தீர்த்தயாத்ராம்விநாயாத: புநஸம்ஸ்காரமர்சதி.

**சாரங்கப்பூர்.** இவ்வூரில் தங்குவதற்கு இடம் கிடைக்கும். இதற்கு ௨௮-மயில் தூரத்தில் ரூட்கியும், அம்மாநகர்க்கு ௧௮-மயில் தூரத்தில் அரித்துவாரமும் இருக்கின்றன.

**அரித்துவாரம்.** சப்தபுரியில் ஒன்றாகிய இந்த க்ஷேத்திரம் மாயாத்துவாரம் என்றும் அரித்துவாரம் என்றும் கங்காத்துவாரம் என்றும் பெயருடையதாய் பரமபதத்துக்கு யாரும் ஏறும் ஏணியாய்க் கங்காநதிக்கருகில் இராநின்றது.

கங்கைமாநதி இமாசலத்தின்மேலே வந்து இந்த க்ஷேத்திரத்தில் பூமியில் இறங்குகிறபடியால் இதற்கு கங்காத்துவாரம் என்று பெயர்.

## காசிகாண்டம்.

### சப்தபுரியின் சிறப்புரைத்த அத்தியாயம்.

பொன்னகரி ஐயர்மாயாத்துவாரமென்றும் பொருவிலரித்துவாரமென்றுங், கன்னடங்களைக் கங்கைசுழித்திடைபோதலிற் கங்காத்துவாரமென்று, மின்னணைமுப்பெயருடைத்தாய் வைகுந்தத்தினிதேறுமேனியாச, மன்னியமாயாபுரியிலினிதிருந்தானருந்தவத்து மறைவல்லோனே.

பகவான் சுகப்பிரமமகா யோகியார் எழுந்தருளியிருந்த நீலதாரை என்ற தலமும் பரிக்ஷித்து மகாராச பாகவதர் காட்டாகிய ஸ்நானகட்டமும், தக்ஷ பிரஜாபதியாகம்செய்த இடமும் அரிதுவாரத்துக்குச்சமீபத்தில் இருக்கின்றன. அரித்துவாரத்தில் தங்குவதற்குப்பொதுச்சாலைகள் அநேகம் இருக்கின்றன இங்கே எம்பெருமான் சயன திருக்கோலமாய்ச் சேவைசாதிக்கின்றான்.

**ருஷிகேசம்.** அரித்துவாரத்தினின்று இந்த க்ஷேத்திரம் சற்றேறக்குறைய க௫ — மயில் தூரத்தில் கங்கைக்கரைமேல் இமயமலைச் சாரலில் இராநின்றது. இங்கு பரதாழ்வான் ஆச்சிரமம் இருக்கின்றது இதிலிருந்து பார்த்தால் இமயமலையை நன்கு தரிசிக்கலாம். அவ்வாச்சிரமத்தில் இப்போது சில பெரியோர் வதிகின்றனர்.

**தபோவனம்.** இது இமாசலத்தின்மேலே. இராநின்றது. இங்கு இளையபெருமாள் சந்நிதி இருக்கின்றது.

தேவப்பிரயாகை, ஸ்ரீநகரம், நந்தப்பிரயாகை, கருணப்பிரயாகை ருத்திரப்பிரயாகை. சோசியமடம், விஷ்ணுப்பிரயாகை, பண்டுகேசுவம், ஆகிய க்ஷேத்திரங்களும், பட்டினங்களும் இமயமலை மேலேவதரியாச்சிரமத்துக்குச் செல்லும் மார்க்கத்தில் உள்ளன. வதரிகேதாரம் அம்மார்க்கத்துக்குப் பக்கத்தில் இருக்கின்றது மேலே கூறிய க்ஷேத்திரங்கள் ஒன்றில்பிரிந்து செல்லும்மார்க்கத்தால் அதற்குச் செல்லவேண்டும். அவ்வழியை அங்குள்ளோரை வினவித்தெரிந்துகொள்க. வதரி ஆச்சிரமம் சென்றோர் கேதாரம் செல்லாராயின் அவர்க்குச் சுரநோய் வரும் என்பர்.



**வதரியாச்சிரமம்.** இந்த மகா க்ஷேத்திரம் நூற்றெட்டு திருப்பதியில் ஒன்று. இதில் எழுந்தருளியிருக்கும் பெருமானுக்கும் தாயாருக்கும் வதரிநாராயணன் அரவிந்தவல்லித்தாயார் என்று திருநாமம். ஸ்ரீமந்நாராயணன் மகாதவத்தனாய் இந்த க்ஷேத்திரத்தில் இலந்தைமரத்தின்கீழ் பதுமாசனத்தில் எழுந்தருளியிருந்து நரனுக்கு உபதேசம் செய்தருளுகின்றான்.

### திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

முற்றமூத்துக்கோல்துணையாமுன்னடிநோக்கிவளைந்து
இற்றகால்போல்தள்ளிமெள்ளவிருந்தங்கிளையாமுன்
பெற்றதாய்போல்வந்தபேய்ச்சிபெருமுலையூடுயிரை
வற்றவாங்கியுண்டவாயான்வதரிவணங்குதுமே.

முதுகுபற்றிக்கைத்தலத்தால்முன்னொருகோலூன்றி
விதிர்விதிர்த்துக்கண்சுழன்றுமேற்கிளைகொண்டிருமி
இதுவென்னப்பர்மூத்தவாறென்றிளையவரேசாமுன்
மதுவுண்வண்டுபண்கள்பாடும்வதரிவணங்குதுமே.

உறிகள்போல்மெய்ந்நரம்பெழுந்தூன்தளர்ந்துள்ளமெழுந்து
நெறியைநோக்கிக்கண்சுழன்றுநின்றுநடுங்காமுன்
அறிதியாகில்நெஞ்சமன்பாயாயிரநாமஞ்சொல்லி
வெறிகொள்வண்டுபண்கள்பாடும்வதரிவணங்குதுமே.

பீளைசோரக்கண்ணிடுக்கிப்பித்தெழமூத்திருமித்
தாள்கள்நோவத்தம்மில்முட்டித்தள்ளிநடவாமுன்
காளையாக்கிக்கன்றுமேய்த்துக்குன்றெடுத்தன்றுநின்றான்
வாளைபாயுந்தண்டடஞ்சூழ்வதரிவணங்குதுமே.

பண்டுகாமரானவாறும்பாவையர்வாயமுதம்
உண்டவாறும்வாழ்ந்தவாறுமொக்கவுரைத்திருமித்
தண்டுகாலாவூன்றியூன்றித்தள்ளிநடவாமுன்
வண்டுபாடுந்தண்டுழாயான்வதரிவணங்குதுமே.

எய்த்தசொல்லோடீளையேங்கியிருமியிளைத்துடலம்
பித்தர்போலச்சித்தம்பேசியயராமுன்
அத்தனெந்தையாதிமூர்த்தியாழ்கடலைக்கடைந்த
மைத்தசோதியெம்பெருமான்வதரிவணங்குதுமே.

பப்பவப்பர் மூத்தவாறு பாழ்ப்பதுசீத்திரளை
ஒப்பவைக்கள் போதவுந்தவுன்றமர் காண்மினென்று
செப்புநேர்மென்கொங்கைநல்லார் தாஞ்சிரியாதமுன்னம்
வைப்புநன்வாழ்வுமானான் வதரிவதரிவணங்குதுமே.

ஈசிபோமினீங்கிரேல்மினிருமியிளைத்தீருள்ளம்
கூசியிட்டீரென்றுபேசுங் குவளையங்கண்ணியர்பால்
நாசமானபாசம்விட்டு நன்னெறிநோக்கலுறில்
வாசம்மல்குதண்டுழாயான் வதரிவணங்குதுமே.

புலன்கள்நையமெய்யில்மூத்துப்போந்திருந்துள்ளமெள்கி
கலங்கவைக்கள்போதவுந்திக் கண்டபிதற்றுமுன்
அலங்கலாயதண்டுழாய்கொண்டாயிரநாமஞ்சொல்லி
வலங்கொள்தொண்டர்பாடியாடும்வதரிவணங்குதுமே.

வண்டுதண்டேனுண்டுவாழும்வதரிநெடுமாலைக்
கண்டல்வேலிமங்கைவேந்தன் கலியனொலிமாலை
கொண்டுதொண்டர்பாடியாடக்கூடிடில்நீள்விசும்பில்
அண்டமல்லால்மற்றவர்க்கோராட்சியறியோமே.

## நூற்றெட்டுத்திருப்பதியந்தாதி.

தாட்கடிமையென்று தமையுணரார்க்கெட்டெழுத்தும்
கேட்கவெளியிட்டருளுங் கேசவனை — வேட்கையொடு
போவதரிதாயினும் போய்த்தொழுவோநெஞ்சமே
மாவதரியாச்சிரமத்து.

இந்தக்ஷேத்திரத்தில் அதிசீதநீர்ச்சுனையாகிய நாரதகுண்டமும், அதிகஉஷ்ணநீர்ச்சுனையாகிய தப்தகுண்டமும் இருக்கின்றன. மார்க்கங்களிலும் இவ்விடத்திலும் மிருகசஞ்சாரமிருப்பினும் பயமில்லை. யாத்திரைகாரரை அவை ஒன்றும் செய்யா: சோரபயமுமில்லை. யாத்திரைகாரர் தங்குவதற்கு இடங்கள் உள்ளன. இந்தக்ஷேத்திரத்தைப்பற்றிய மற்ற விசேடங்களையெல்லாம் தலப்புராணத்தால் உணர்க. அது பன்னிரண்டு அத்தியாயத்தில் உள்ளது. இங்கு பெருமாளுக்கு ஆராதனம் செய்வோரும், பரிசாரகரும், பக்கங்களில் உழுதொழில் புரிவோரும் இருக்கின்றார். இவரெல்லாம் பனிக்காலம் வந்தவுடனே கோவிலைச்சார்த்தி நெய்யைவார்த்து கோயி



லெல்லாம் அப்பி தானியங்களையெல்லாம் புவிக்குள் புதைத்துப்போய்ப் பாண்டிகேசுவம் முதலிய விடங்களில் வதிந்து பனிதொலைதலும், வந்து பூசை முதலிய செய்வார். ருஷிகேசம் முதல்வதரியாச்சிரமம் வரையில் மார்க்கத்திற் பலவிடங்களில் யாத்திரை காரர்களுக்கு வேண்டிய உணவுப்பண்டங்களைப் பலதேசத்து அரசர் கொடுக்கச் செய்திருக்கின்றனர். மேலேகூறிய ஸ்ரீநகரம் முதலியவெல்லாம் பெரிய பட்டினங்களாக விருக்கின்றன. நடக்கக் கால்வலியில்லோர் டோலியின் மேல் அல்லது சுமப்போன் முதுகின்மேல் செல்வார். வடதேயத்துள்ள சுகவாசிகளும் எவ்வித கஷ்டப்பட்டாயினும் வதரியாத்திரை செய்வார், ஆங்குச்செல்வோரெல்லாரும் தமது சாமக்கிரிகைகளை ஆட்டின்மேலே ஏற்றிப்போவார். மலைமேலே மார்க்கமத்தியில் கங்கைமாநதி அநேக கால்வாய்களாக ஓடும். வதரியாச்சிரமத்திற்கு அப்புறம் சிறிது தூரத்தில் பிரமகபாலமிருக்கின்றது. யாத்திரைகாரர் ஆங்குப்போய்ப் பிண்டப்பிரதானம் செய்வார்.

கங்கைக்கு உத்பத்தி ஸ்தானம் சர்வேசன் திருவடியாகவும் அப்பாகீரதி தங்கியிருந்த விடம் மானசசரசாகவும் இருக்க இமையமலைமேல் கால்வாய்களெல்லாம் ஒன்றாய்ச்சேர்ந்து விழுமிடங்களையெல்லாம் கங்கோத்பத்தி என்பர்.

இன்னும் வடநாட்டில் ஸ்ரீஆழ்வார்கள் மங்களாசாசனம்செய்த திருச்சிங்கவேள்குன்றம் திருச்சாளக்கிராமம் திருக்கங்கைக்கரைக்கண்டம், திருப்பிருதி, திருத்துவாரகை திருப்பாற்கடல், என்னும் திருப்பதிகளும் ஜகந்நாதம் கோகன்னம் முதலிய க்ஷேத்திரங்களும் சமந்தபஞ்சகம் பிரபாசம் முதலிய அநேகதீர்த்தங்களும் மிதிலை முதலிய புண்ணியநகரங்களும் உள்ளன அவற்றுக்குச்சென்றோரைவினவி மார்க்கம் தெரிந்துகொள்க.

ஸ்ரீஅயோத்தி, மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்திகை, துவாரகை, யென்னும் முத்திதரும்நகர் ஏழில் திருவயோத்தியும் திருமதுரையும், திருகச்சியும் திருத்துவாரகையும் ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்த திருப்பதிகள். அரித்துவாரமென்னும் மாயாபுராணஸ்தலம் திருக்கச்சி திருப்பதிகளிலொன்றன்றியும்பொய்கையாழ்வார் அவதாரஸ்தலம். அதனில் அருளாளர் சந்நிதியேயன்றி ஏகாம்பரேசர் சந்நிதியுமிருக்கின்றது. காசி இப்போது சிவக்ஷேத்திரம். அவந்திகையில் மேலே கூறியபடி இரண்டுசந்நிதிகளுமிருக்கின்றன.

### நூற்றெட்டுத்திருப்பதியந்தாதி.

பெருநகரை மண்ணுக்க பூந்துழாயார் போகத்
திருநகரை சிந்தித்திராதே அருளாளன்
கச்சித் திருப்பதியா மத்திரூர்க் கண்ணனெனுள்
இச்சித்திருப்பதியாமென்று.

"காசிமுதலாகிய நன்னகரியெல்லாங் கார்மேனியருளாளர் கச்சிக்கொவ்வா" என்று ஸ்ரீமத் வேதாந்த தேசிகர்சாதித்தருளினர்.

### காஞ்சிப்புராணம்.

### இரண்டாவதுகாண்டம்.

நிலத்திடைச்சிறந்ததகவெனப் பகலகின்புகழயோத்திமதுரை, மலர்ப்பொழிற்காசியவந்திகைதுவரை மாயைவண்காஞ்சியென்றுரைப்ப, மலத்தருவம்பறச்சுகமேமுத்தியேம்பகிசாஞ்சிமற்றதனகட், பலப்பலதனியுமேழுநாலகங்கம்பகர்தரும வறூஉண்மூன்றதிகம்.

கங்காயாத்திரை புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி, இந்த மாதங்களில் செய்யலாம். அவற்றில் மார்கழி முதல் குளிர் மிகுதியுளதேனும் அப்போது யாத்திரைசெய்வோர் தேகாரோக்கியம் பெறுவார். மார்கழிமாதம் யுத்தயாத்திரைக்கும் எடுக்கப்பட்டது. குளிருக்கு அஞ்சுவோர் புரட்டாசி முதல் மூன்றுமாதங்களில் யாத்திரை செய்யலாம். அக்காலம் சிதோஷ்ணம் மிதமான நல்லகாலமாயினும்அப்போது



யாத்திரை செய்வோர் திருவேணி சங்கமதில் மாகஸ்நானபலம். அடையார் ஏனைச் சித்திரை, வைகாசி ஆனி ஆடி ஆவணி இந்த மாதங்கள் வெம்மை மிகுதியும் புதுப்புனலால் நீர்க்குற்றமும் வியாதிகள் விளைவு முள்ளகாலமாதலால் அம்மாதங்களில் யாத்திரை செய்யலாகாது.

யாக்கையையாப்புடைத்தாகவைத்தாலன்றே அறங்கள் செய்யலாம். தூமசகடத்தில் நெடுந்தூரம் யாத்திரை செய்வோர் தமது ஆசாரங்குறைவுபடாமல் அன்னபானாதிகளைக் காலந்தவிராமல் உண்ணவேண்டும் "மிகினுங் குறையினு நோய் செய்யுநூலோர்வளி முதலாவெண்ணியமூன்று" என்னும்இப்பாட்டுப்படி ஒருவன்பகுதிக்கொத்த அளவேயன்றிக் காலத்திற்கு முன்னும்பின்னும் உண்ணினும் நோயுண்டாகும். ஆசாரமுதலியவிரதங்களெல்லாம் அவற்றை யாருவோர் தம்முடலுக்கு ஒத்த பகுதியை அறிந்து செய்யின் எடுத்தது முற்றுப்பெறும் இல்லாவிடின் சிறிது காலம் வருந்தியது மட்டில்லாபமாய் இடைமுறியும். பன்னிரண்டு நாழிகையில் உச்சிக்கடன் கழித்து உண்ணும்படி அறநூல் விதிக்கின்றதாம்.

யாத்திரைகாரர் தமது பொருள்களை கள்வர்கவராவண்ணம் சேமிப்பதோடு ஸ்ரீகாசிமுதலிய புண்ணிய க்ஷேத்திரங்களில் மனோ வாக்குக் காயங்களால் தாம் ஒரு சிறிய பாவமும் செய்யாவகைத்தம்மைக் காத்துக்கொள்ளவேண்டும் பாபம் தொலைத்து புண்ணியம் எய்தச்சென்ற க்ஷேத்திரத்தில் பாபம் செய்வது குளிக்கப்போனவிடத்தில் சேற்றைப் பூசிக்கொள்ளுதலை யொக்கும் அன்றியும் யாத்திரை செய்யும் க்ஷேத்திரத்தில் பாவம் செய்பவர் பலராலும் சீ! சீ! யென்றிகழப்படுவார் நரகத்திலும் அழுந்திக்கரையேறார். இதுநிற்க.

அறம் பொருள் இன்பம்வீடுகளை எய்தக்கருதினோன் பலசிறப்புக்களிற் பலநூல்களை ஆராய்ந்து பல அறங்களை வருந்திச்செய்வதினும் திருவள்ளுவர் ஒன்றை ஐயந்

திரிபற உணர்ந்து அதன்வழி நிற்பானாயின் அச்சென்மத்திலே அவற்றைப் பெறுவான்.

ஒன்றேபொருளெனின் வேறென்பவேறெனி
னன்றென்பவாறு சமயத்தார்—நன்றென
வெப்பாலவருமியை பவே வள்ளுவனார்
முப்பான்மொழிந்த மொழி.

எப்பாலவரும் என்கையாலே அறுசமயத்தாரே யன்றிப் பிறமதத்தாரும் வரையாது கைக்கொள்ளும் நூலும் அதுவே என்க. அது பிறபாடையிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

எல்லாப்பொருளுமிதன்பா லுளவிதன்பா
லில்லாதவெப்பொருளு மில்லையாற்—சொல்லாற்
பரந்தபாவாலென்பயன் வள்ளுவனார்
சுரந்தபாவையத் துணை.

என்கையாலே திருவள்ளுவரில் இல்லாத பொருள் உலகிலே யில்லை எப்பொருளுமுள்ள திருவள்ளுவரில் கைம்முறுக்கி இது உளதோ என்றானுக்கு "ஈர்ங்கைவதிரார்கயவர் கொடிறுடைக்குங்—கூன்கைய ரல்லாதவர்க்கு" என்னுமிப்பாட்டி லதுவுமுளதென்று கூறினான் என்ப. அங்ஙனமாயின் அறம் பொருளின் பங்களைமுப்பாலாற் கூறி வீட்டை யாதாற் கூறினாரோவெனின், அகத்தியனாருந் தொலகாப்பியனாரும் வீடுபேற்றிற்கு நிமித்தங் கூறுதலன்றி வீட்டின்றன்மை தமிழாற் கூறாரதுபற்றி வள்ளுவநாயனாரும் மெய்யுணர்தலாலிமித்தமாத்திரங் கூறினார். இதனைத்தொல்காப்பியப்பாயிரத்துட்காண்க. இவர் வீட்டின்றன்மை கூறிற்றிலராயினும் அதற்குரிய தெய்வத்தை" தாம்வீழ்வார் மென்றோட்டுயிலினினிதுகொ—றாமரைக் கண்ணா னுலகு" என்னும் அருமைத்திருக்குறளால் ஓதியருளினார். "புலத்தலிற்புத்தேணாடுண்டோ நிலத்தொடு—நீரியைந்தன்னாரகத்து" என்றபடித்தாமரைக்கண்ணா னுலகும்லோகாந்தரம் என்



பாருமுளர், அது பொருந்தாது புலத்தலில் என்னும் பாட்டு ஊடலுவகையிலே "புலவாக்காலும் அத்தலையளி பெறலாயிருக்க அஃதிழந்து புலவியான் வருந்துவதென்னை என்றாட்கு அவள் சொல்லியது" ஆகலானும் "தாம் வீழ்வார்" என்னும் பாட்டு புணர்ச்சி மகிழ்தலுள்ளே நிரதிசயவின்பத்திற்குரிய நீ இச்சிற் றின்பத்திற்கின்னையாதல் தகாதென்ற பாங்கற்குச் சொல்லியது "ஆகலானும் பேரின்பத்திற்குச் சிற்றின்பத்தை உவமமாக்குவராகலானும் அதிகாரத்தானும் பாட்டானும் நிரதிசய வின்ப வீடு தாமரைக்கண்ணானுலகு என்பது தெற்றெனத்தெளிக. மோக்ஷ இச்சேத் ஜனார்த்தனாத் என்பதனானு மறிக. "அகரமுதலவெழுத்தெல்லாமாதி - பகவன் முதற்றேயுலகு" என்னும் முதற்பாட்டு அவ்விறைவனையே வாழ்த்தும் இறைவனுக்கு அறுகுணமுண்மை ஸ்ரீவைஷ்ணவசித்தாந்த நூற்றுணிபென்க.

"இறைவனியங்குதிணைக்கண்ணு நிலைத்திணைக்கண்ணும் பிறவற்றின் கண்ணுமவற்றின்றன்மையாய் நிற்குமாறெல்லார்க்கு மொப்ப முடிந்தாற்போல அகர முயிர்க்கண்ணுந்தனி மெய்க்கண்ணுங் கலந்தவற்றின் றன்மையேயாய் நிற்குமென்பது சான்றோர்க்கெல்லாமொப்பமுடிந்தது. அகரமுதலவென்னுங் குறளான் அகரமாகிய முதலையுடைய வெழுத்துக்களெல்லா மதுபோல விறைவனாகிய முதலையுடைத்துலகமென வள்ளுவனாருவமை கூறியவாற்றானுங் கண்ண னெழுத்துக்களி லகரமாகின்றேன் யானே யெனக்கூறியவாற்றானும் பிறநூல்களானுமுணர்க" என்று தொல்காப்பியத்துளோதியவாற்றானும் அகாரவாச்சியன் எம்பெருமானே என்றுணர்க. இறைமைக் குணங்களிலராயினாரை உடையரென்கருதி அறிவிலார் கூறுகின்ற புகழ்கள் பொருள் சேராவாகலின் "இருள் சேரிருவினையுஞ் சேராவிறைவன் பொருள்சேர்புகழ் புரிந்தார்மாட்டு" என்று கூறி அவைமுற்றவு

முடையஇறைவன் இன்றொன்று தந்துணிபு தோன்
றுமாறு பொருட்பாலில் "மடியிலாமன்னவ னெய்துமடியளந்தான் றாயதெல்லாமொருங்கு" என்றும், காமத்துப்பாலில் "தாம்வீழ்வார் மென்றோட்டுயி லினிதுகொ றாமரைக்கண்ணா னுலகு" என்றும் ஓதியருளினார்.

"அகரமுதல" மலர்மிசையேகினான் "கோளில்"
என்னும் பாட்டுக்கள் கடவுள் மூவரையும் உணர்த்தின
என்பதற்கு, மலர்மிசையேகினான் என்னும்பாட்டுப்பிர
மனை உணர்த்திற் றென்பது நன்னூல் விருத்தியுரை
செய்த சங்கர நமச்சிவாயப் புலவர்க்கும் உடன்பாடா
யிற்று. "எல்லாச் சமயத்தோராலும் வணங்கப்படும் ப
டைப்புமுதலிய வைந்தொழிற்கு முரிய வெல்லாக்கடவு
ளாகிய நின்றொருவனே யென்பார் அருகனை நான்
முகனென்றுங் கூறினார்" என்றும் "இவ்வாறு வள்ளு
வநாயனாரும்" மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ்வார்" எனவரையாது கூறுதல்கா
ண்க". என்றும் "பூமலியசோகின்புனைநிழலமர்ந்தநான்
முகற்றொழுது நன்கியம் புவனெழுத்தே" என்றும்சூத்
திரஉரையில் எழுதினர். வள்ளுவநாயனார் அவர்கூறிய
முப்பாலுக்கேற்ப கடவுள் வாழ்த்தில் சத்துவ முதலிய
குணம்பற்றித் தேவரை நாட்டினாரேயன்றிப் படைப்பு
முதலிய தொழில்பற்றி நாட்டிலராகலானும், அதுவேய
வர்க்குக் கருத்தாயின் "மலர்மிசை யேகினான்" என்னு
ம் பாட்டை முதலில் வைத்தம்முறைமை தோன்ற ப
டைப்புமுதலியதொழிலை விரித்துணர்த்துவாராகலானும்
பவணந்திமுனிவர்க்கு மாயை உடன்பாடன்றுபோல
ஐந்தொழிலு முடன்பாடன்றாகலானும், அருகனுக்கு
நான்முகனென்று பெயருண்மைபற்றி "நான் முகற்றொ
ழுது நன்கியம் புவனெழுத்தே, என்றோதினாராகலா
னும், அன்றியும் அசோகினிழலி லமர்தல் நான்முகற்



குரித்தன்மையாகலானும், அவ்விருவர்க்கு மக்கருத்தன்
மையறிக.

மேலேகூறிய "அகரமுதல" முதலிய மூன்றுப்பா
ட்டுக்களும் கடவுள் மூவரையும் உணர்த்தினவென்பது
பரிமேலழகர்க்கு உடன்பாடன்று "கடவுள் வாழ்த்திற்
கேற்ப எண்டும் பொதுவகையாற் பற்றற்றா னென்றார்"
என்று துறவு பத்தாம் பாட்டுரையில் எழுதினர்.

திருவள்ளுவர் வடநூல் ஒன்றனையும் பதிகமாகக்
கொள்ளாமற் செய்யப்பட்டதென்ப அது இதிகாசங்க
ளாகிய ஸ்ரீமத்ராமாயணம் ஸ்ரீமகாபாரதம் அறநூலாகிய
மனுமுதலியவைகளைக் கொண்டே செய்யப்பட்டது அவ
ற்றின் அருமைப் பொருள்களை பாட்டுக்களிற் காண
லாம் அதுநோக்கியே பாரதம் பாடிய பெருந்தேவனார்
"பாரதம் ஸ்ரீராமமதை" என்றுபாடினார்.

எப்பொருளும்யாருமியல்பினறிவுறச்
செப்பியவ்ளுவர்தாஞ்செப்பவரும்-முப்பாற்குப்
பாரதஞ்சீராமகதைமனுப்பண்டைமறை
நேர்வனமற்றில்லைநிகர்.

"பரிமேலழகரும்" எல்லா நூல்களினும் நல்லன
எடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல் இவர்க்கி
யல்பாகலின்" என்று கொல்லாமை இரண்டாம் பாட்டு
ரையில் எழுதினார்.

தமிழ்நூல்பலவற்றையும் திராவிட வேதமென்பர்.
பரிசோதித்து ஒப்பிட்டுப் பார்க்குமளவில் ஆழ்வார்கள்
அருளிச்செயலும் திருவள்ளுவருமே திராவிடவேதங்க
ளாக நிற்கும் மற்றவையெல்லாம் வாக்குமாத்திரமே
யாமொழியும். திராவிடவேதம் நாலாயிரத்துள் நான்கு
வேதார்த்தங்களை வாக்கியங்களோடு காணலாம் அது
நோக்கியே வள்ளுவநாயனாரும் "குறுமுனிவன் முத்த
மிழும் என்குறளும் நங்கைச்சிறுமுனிவன் சேய் என்று

பாடினர். வேதம்தமிழ்செய்தவித்தாகிய ஸ்ரீசடகோபர் திருத்தாயாருக்கு உடைய நங்கையார் என்றுதிருநாமம் திருவள்ளுவர்செய்த குறளைப் புகழ்துமோ பரிமேலழகர் செய்த உரையைப்புகழ்துமோ அதுநிற்க.

கங்காயாத்திரை முதலிய தீர்த்தயாத்திரை பலம் க்ஷேத்திர யாத்திரைபலம் தானபலம் முதலிய நற்பயனெல்லாம் யாவர்க்கோ எனில் "அறவினையாதெனிற் கொல்லாமை கோறல்-பிறவினையெல்லாந் தரும்" என்றும் "தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றாற்றேரி-னருளாதான் செய்யுமறம் என்றுங் கூறினமையால் உயிர்களெல்லாம் சர்வேசன் சொத்துக்களென் றுணர்ந்து அவைமாட்டு அருளுடையார்க்கேயலது பிறர்க்கில்லை என்க. உயிர்கள் அவன் சொத்துக்களென்பதைவேதாந்த சாஸ்திரங்களாலன்றித்வம்மே அஹம்மே என்னும் ஸ்ரீபட்டர் அருளிச்செயலானுந்தெளிக. "பொருளற்றார் பூப்பரொருகா லருளற்றா ரற்றார்மற்றாதலரிது" என்கையாலே அருளற்று உயிர்க் கொலைசெய்தவன் எக்காலும் உய்யான். நன்றாகுமாக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக் - கொன்றாகு மாக்கங்கடை "என்னும்பாட்டால் ஊரக்கமெய்து வார்க்குவேள்வித்தலையில்கொலையைவிதித்து ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்—பின்சாரப் பொய்யாமை நன்று" என்னும் பாட்டால் எல்லார்க்கும் கொலையை விலக்கியருளினார் "நிலையஞ்சி நீத்தாருளெல்லாங் கொலையஞ்சிக் கொல்லாமை சூழ்வான்றலை" என்னும் பாட்டால் அவ்வறத்தின துயர்ச்சி கூறியருளினார். திருவள்ளுவரால் எய்தும் பயன்பலவாயினும் அதனைப்படித்தோன் முதலில் பெறவேண்டியது கொல்லாமையே "ஒன்றாக நல்லது" என்னும் பாட்டால் அதனையே அவர் உறுதிப்பொருளாகக் கூறினர். சிலர் புலால் தாம் உண்ணாவிடினும் தமக்கு மிக்காருக்கும் ஒப்பாருக்கும் அச்சத்தாலாதல் நட்பாலாதல் புண்ணிர்





ஒழுக உயிர்பதைப்பக் கொலைசெய்து "விலங்கிற்கும் புள்ளிற்கும் காடே புலங்கெட்ட புல்லறிவாளர்வயிறு என்றபடி மிருகத்திற்கும் பறவைக்கும் சுடுகாடாகிய வயிற்றையுடைய புல்லறிவாளரை விலாப்புடைக்க ஊட்டுவர் அவ்வூட்டுவோரும் உண்ணுவோரும் தவிராது பெறுவதெரிவாய் நரகமல்லது யாது.

கொல்லான்புலாலைமறுத்தானைக்கைகூப்பி
யெல்லாவுயிருந்தொழும்.

இப்பாட்டால் கொல்லாமையும் தின்னாமையும் உடன்வேண்டுவனவாயின. இவ்விரண்டறமும் ஒருங்குடையான் மறுபிறப்பில் தேவரின் மிக்கானவன் என்பது கருதி "எல்லாவுயிருந் தொழும்" என்று அப்பயனது பெருமைகூறினார்

தாம்கொல்லாவிடினும் பிறர் கொன்றுகொடுத்த ஊனைப்பகுவாய் திறந்து விலாப்புடைக்க அடைப்போர் செய்யும் ஸ்நானதான பூசைகளுக்கு ஏதேனும் சிறிது பலமுளதாமோ வெனின் பன்றி ஏகாதசி விரதமிருந்து அமேத்திய பாரணைசெய்யின் அதற்கு உளதாகும் பலமிவர்க்கு முளதாகும். இவர் நற்கருமங்கள் செய்து புலாலுண்ணலும் பன்றி விரதமிருந்து அமேத்தியபாரணைசெய்தலும் தம்முள்ளே ஏற்றக்குறைவின்றி யொப்பாகும். திருவள்ளுவரை யோதி புணர்ந்தும் பழவினையை மேற்கொண்டு ஊன்றின்போர் கொலைமறுத்தலைப் படிப்பினும் கொலைமறுத்தலைச் செய்வரோ செய்யார்.

கொலைமறுத்தல்.

"புலையனைப் புலையரென்னும் புத்தியற்ற மாந்தரே, புலையனார் மலம்புசிக்க நாடுமீது புத்தியோ,புலையருக்கு ளொக்குமும் மையென்றுரைத்த புல்லரும், புலையராகி நரகினுட் புகுவரையமானையே." "பறையனைப் பறையனென்று பறைந்திடு மனிதர் கேளீர், பறையர் தம் மலத்தைத் தின்ற பன்றியைப் புசிப்பதென்னோ, கறை

யதேயாகு மந்தக் கறிதனைக் கலத்திலிட்டு, மறையவே
வைத்துத் தின்னு மனிதரோ பறையர் கண்டீர்'' ''புலை
யென்னும் புலைதீரப் புனலென்னும் புனன் மூழ்கி, யலை
கின்ற முழுமுடாறிவென்ன வறிவென்ன், புலையன்றன்
மலமுண்ணு மெமையுண்ணும் புலையர்க்குக், குலமென்
நலமென்ன கூகூவென்றன கோழி.''

''இங்ஙனம் இவன் பிதா நடந்தபடியே நடக்கவே
ண்டுமென்றறியாமற் சொன்னான். பிதாபிச்சை யெடுத்
தானென்று மகனும் பிச்சை யெடுக்க வேண்டுமோ?
அது வேண்டியதில்லை. எவனானாலும் பிறவியன்பாய்
மாமிசம் விட்டவனே விட்டவன். சிலகாலந்தின்றுகொ
ண்டுதிரிந்து நடுவிலே எனக்கு ஞானம் வந்ததென்று
விட்டு விட்டானாகில், ஒருபலனுமில்லை. அப்படி விடுகிற
பொழுது முன்னந்தின்ற வாயையுங் கையையுங் கூட
விட்டுவிட வல்லவோ வேண்டும்? அல்லாதபோதுவிட்
டதிற் கூட்டேயல்ல, ஆனபடியினாலே, தின்றவன் தின்
றேவரவேண்டும், நடுவிலே விடவொண்ணாதென்ற வன
வில், அவனை நோக்கிச்சிரித்துமேலுத்தரங் கூறுகின்றார்.

மாநிலத்தில் பாலர்பித்தர் தெளிந்தும் இழுக்குஇய
ற்றின் ஊன் உண்டோர் மறுக்கொணாது—நீசொன்னது
நல்லதுதான், இப்பூமியினிடத்து ஒருவனை நீகுழந்தை
யாயிருக்கிற காலத்தில், மலத்தைத் தின்றாயென்று அவ
ன்பெரியவனா யிருக்கிற காலத்தில் முன் கண்டிருந்தவர்
கள் சொல்லக்கேட்டானாகில், அறியாத காலத்திற்செய்
ததை இப்பொழுது நீசொல்ல லாவதேதென்று கோபி
ப்பானன்றி முன்புதின்ற வாயுங் கையுமிருக்க இனிவிட்
டதனால் பிரயோசன மில்லையென்று பின்புந் தின்னக்
கண்டிலேம்; அதுவன்றியும், ஒருவனைப்பைத்தியந் தொ
டுத்திருந்த காலத்தில் மலாதிகளையுந் தின்று தின்னாத
வீடுகளிலும் வாங்கித் தின்றுகொண்டு திரிந்தானேயானா
லும், பைத்தியந் தெளிந்தகாலையில்தின்னாதவிட்டினும்



வாங்கித் தின்று மலாதிகளையுந் தின்னக் காணோம்; அது
வன்றியும் உலகத்திலன்னை உண்டாகிய பெண்ணும் ஆ
ணும் சிறுபிள்ளையா யிருக்கிற காலத்தில் சீலை உடுத்தா
மல் அபிமானம் பலருங்காணத் திரிந்தார்களாயினும்,
பெரியவர்களான காலத்திலும் சிறுபோதிற் பலருங்கண்
ட அபிமானத்தை இனி ஏன் மறைக்கிறோமென்றுபின்
பும் சீலை உடுத்தாமலிருக்கக்காணோம்; இதுபித்தனுக்கு
மொக்குமாதலின், மாமிசந் தின்றவன் தின்றே வரவே
ண்டுமென்கிறது யோக்கியமன்று. விவேகம்வந்தபோது
விடுகிறதேயோக்கியம்.''

யாகத்திலன்றி ஊன்தின்போன்முதலியவெண்மரு
நரகமடைவாரென்றும் அறியாப்பருவத்தில் ஊனுண்
டோராயினும் பின்புண்ணாதார் நரனொன்றுக் கொரு
அசுவமேதபலன் அடைவாரென்றும் காசிகாண்டத்தின்
இப்பாட்டுக்கூறும்.

இல்லொழுக்கங் கூறிய அத்தியாயம்.

அருமகத்தன்றியூன்சுவைத்துடலம்வீக்குவோனதற்குடன்படு
வோன், கருவியிற்குறைத்தோன் பகர்ந்துளோன்கொணர்ந்தோன்
வியந்துளோன் கடுகெனவேவுந், திருவிலியதனை யட்டவனிவர்க
ளெண்மருந்திநரகடைவார், பரிவினூன்விடுத்தோர்நாடோறும்பு
விமகம்புரிபலம்பெறுகுவாரால்.

கொலைமறுத்தலில் மகத்தலையில் ''ருத்திராவிப்பா
கம் முதற்கொடுத்து மற்றுள்ள தேவர்கட்கு முறைதவி
ராது பின்பு அவிப்பாகங் கொடுதலின்'' என்று சொல்
லப்பட்டிருக்கின்றது. அங்ஙனம் சாஸ்திரமும் சம்பிர
தாயமுமிலவாம். உருத்திரருக்குக்காட்சியில் அவிப்பாகங்
கொடுத்து அசுசி நிவர்த்திக்காக நீராடுவாராம்.

அகத்தியனாருந் தொல்காப்பியனாரும் வள்ளுவநாய
னாரும் வீட்டின்றன்மை தமிழாற்கூறாரெனவே அத்தமி
ழிற்குரியருத்திரன்வீடுபெறுவானோமாட்டானோ வெனி
ன் வருணாச்சிரமபேதம் உடலுக்கேயன்றி உயிர்க்கில்லை.
வீடெய்துதல் உயிரேயாகலின் ''அற்றது பற்றெனில்—

"உற்றதுவீடுயிர்—செற்றது - மன்னுறில் - அற்றிறைபற்றே" என்றும் "பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று நிலையாமை காணப்படும்" என்றும் ஆழ்வாரும் நாயனாரும் சாதித்தருளினமையால் பற்றற்றான் பற்றினைப்பற்றிய பற்றற்றான் எக்குலத்தானாயினும் வீடுறுவான்.

பிராமணரை யல்லாதார் மறுபிறப்பில் பிரமகுலத்திற்பிறந்து வீடெய்துதல் வேண்டுமென்பாருமுளர் - உடலோடு தொலையும் பிறப்பு வீடெய்தற்கு காரணமாகாதென்றும் வேதத்துக் கதிகாரியல்லாதார் தமிழ்நூலாலே அறங்களையறிந்து முத்திபெறலாமென்றும் கூறுப. ஸ்ரீபாஷ்யகாரர் முதலாயினோர் தர்மவியாதனையும் விதுராழ்வாரையும் சுட்டிச் சூத்திரர்க்கு வீடுண்டென்பாராம்.

சசூத்திரர் அசசூத்திரர் எனச் சூத்திரரிருதிறத்தாரவர். அவரில் குலந்தோன்றியது முதல்முடை நாற்றப்புலாலுண்ணாதவராய் பிரமபேசத்துக் குதித்தவராய் ஆன்றவொழுக்கினராயுள்ளார் சசூத்திரராவார் சசூத்திரர் புராணங்களைப்படிக்கவும் ஆமசிராத்தத்தில்வேதியருக்குப்படைத்து வெஞ்சியபலாதிகளைக்கொண்டு அவுபாசனஞ்செய்யவுஞ் விட்டு அடுக்களை அக்கினியையெடுத்து ஒருயாகம் செய்யவும் அவர்பாகம்செய்த அன்னத்தை அந்தணருண்ணவும் விதியுளதாம். கேரளதேயச்சூத்திரர்தாமாதுரரான பார்ப்பாருக்குப் பிறத்தல்பற்றித்தம்மை சசூத்திரரெனவைத்துப்பேசுவர்அதுபொருந்தாது. பார்ப்பார் சூத்திரஸ்திரியை மணக்கலாமென்னும் விதியை மேற்கொண்டு மணந்த சூத்திரஸ்திரிக்குப் பிறந்தவர் சசூத்திரராவரோ யன்றிப் பெற்றதாய் தந்தையர்கலங்கி வருந்த கேரளஞ்சென்று ஆங்குகண்ட சத்திரங்களிலுண்டு காமாதுரராய்த்திரியும் பிராமணக்காளைக்குப் பிறந்தவரும் சசூத்திரராவரோ? ஆகார்வேதியர் சசூத்திர ஸ்திரியை மணக்கலாமென்னும் விதி இக்கலியுகத்தில்லாமையால் எத்தேயத்திலும் சசூத்திரரில்ல



கேரளதேயச்சூத்திரர் தம்மை சசூத்திரராய் வைத்து ஸ்ரீபாகவதாதி புராணங்களை யெல்லாம் படிப்பார்மேலே கூறியவற்றை யெல்லாம் விதித்தநூலே இக்கலியில் விலக்கியபடியால் அதனையே அநுமதித்தல் வேண்டும். இது நிற்க மதுமாம்ச பக்ஷகராகிய ஏனை அசசூத்திரலக்ஷணமாவது உலகிலுள்ள அவலக்ஷணங்களெல்லாம் அவராபரணமே. அதனை விளம்பின்வாய் கயப்புறும் வேதியர்க்கு மடைத்தொழில் புரிய வுரிய சூத்திரர்மாத்திர மிக்கலியுகத்திலரே அன்றி அவரை அத்தொழிற்குள்ளாக்கி யாளுஞ் சூத்திரர் திராவிடதேயத்தில் இப்போது சிலருளர். அந்தணரைத் தமக்குப் பரிசாரகத்தொழிலினுடன் படுத்துஞ் சூத்திரர் வாழ்நாள் குறைவர். அதற்குக் கைகூடும் பலன் அதுவேயன்றிப்பிறிதில்லை.

கலி ஐயாயிரவருடம்முடிந்த பின்பு இப்போதிருக்கின்ற சுவல்பவிஷ்ணுகலையும் அடியோடு முடியுமென்றும எல்லாரும் தேகமேயாத்துமாபோகமே மோக்கமென அறந்துறப்பார்களென்றும் எஞ்சியசிலரும் பாடண்டராவாரென்றும் கங்கையும் மகிமை குறையுமென்றும்தத்துவஞ்சொல்லும் விஷ்ணுபுராணங் கூறும். "நாளெனவொன்றுபோற் காட்டியுயிரீரும்-வாளதுணர்வார்ப்பெறின்." என்றும "நாச்செற்றுவிக்குள்மேல் வாராமுனல்வினை மேற்சென்று செய்யப்படும்" என்றும் "நெருநலுளனொருவனின்றில்லையென்னும் - பெருமையுடைத்திவ்வுலகு" என்றும் கூறியபடி. யாவும் கங்கைமகிமை குறையுமுன்னர் யாவரும் ஒருதரமாயினும் கங்கையாத்திரைசெய்வது உசிதமாம். அது மற்றையவரினும் சூத்திரர் தவிராமல் செய்யவேண்டியது அவசியமாம் கங்காதேவியும் சூத்திரரும் ஒப்பாரு மிக்காரு மில்லாத ஒருவனது திருவடியிற்றோன்றின படியால் அவ்விருவரும் உடன்பிறப்பினராயினர் சகோதரவாச்சல்யம்பெரிதாகலால் உடன்பிறந்தவளைக் கண்ணாரக்காண விரும்பா

தார் யார் பாகீரதிக்கும் சூத்திரருக்குமுள்ள முறைமை "அஸ்மாகம் பதரீசக்கரம - யுஷ்மாகம் பதரீவனம்" என்னும் நியாயம் போன்றதென்று அசதியாடினு மாடுவர். அங்ஙனமன்று அம்முறைமை சுருதி மிருதி இதிகாசபுராணங்களாலே யாப்புறுத்தப்பட்டது.

ஸ்ரீபட்டர் அருளிச்செயல்.

திருவரங்கம பெரியகோயிலில் நம்பெருமாள் திருவரையில் திருமஞ்சனதிரவியத்தால் மஞ்சணிறமாகும்வஸ்திரமும் திருமார்பில் ஒருபூமாலையும் சார்த்திக்கொண்டு திருமஞ்சனங்கண்டருளும் வழக்குண்மையால் அப்போது ஸ்ரீபட்டர் மங்களாசாசனத்துக்கெழுந்தருளி ஆ! ஆ! இந்த அவசரம் பெருமாள் சேதனனைத் தனது சொத்தென்று பலப்பிரமாணங்களால் சாதித்தருளச் சேதனன் உடன்படாது மறுக்கப் பெருமாள் சேதனன் தனது சொத்தே என்று பிரமாணம் செய்வது போன்றிருக்கின்றது என்று லௌகிக சம்மந்தமாய் இச்சுலோகம் சாதித்தருளினார்.

சுலோகம்.

த்வம்மேஹம்மேகுதஸ்தத்ததபிகுதஇதம்வேதமூலப்ரமாணாத்
ஏதச்சாநாதிஸித்தாதநுபவவிபவாத்தந்தர்ஹாக்ரோசஏஷா [த்
க்வாக்ரோசஸ்தஸ்யகீதாதிஷுமமவிதிதாகோத்ரஸாக்ஷிஸுதீயா
ஹந்தத்வத்பக்ஷபாதிஸஇதிநாகலஹேமருக்யமத்யஸ்தவத்வம்.

| | |
|---|---|
| த்வம்மே. | நீ என்னுடைய சொத்து. |
| அஹம்மே. | நான் தேவரீருக்கு சொத்து அல்லேன், எனக்கே உரியவன். |
| குதஸ்தத். | நீ உனக்கே உரியவன் என்பது எத்தாலே. |
| ததபிகுதஃ. | தேவரீருக்கு நான் சொத்தென்பது எத்தாலே. |
| இதம்வேதமூலப்ரமாணாத். | நீ எனக்கு சொத்தென்பது வேதமாகிய மூலபிரமாணத்தாலே நன்குவிளங்கும். |
| ஏதச்சாநாதி ஸித்தாதநு பவவிபவாத். | நான் எனக்கே உரியவனென்பது நெடுநாளாயுள்ள அடியேனுடைய அநுபவ பிரபாவத்தாலே உறுதியாகும். |



| | |
|---|---|
| ஹந்தாக்ரோசஏஷஃ. | இந்த உன்னுடைய அநுபவம் என்னுடைய ஆக்ஷேபத்தோடு கூடியதாயிருக்கிறது. |
| க்வாக்ரோசஸ்தஸ்ய. | இந்த என்னுடைய அநுபவம் தேவரீரால் எங்கே ஆக்ஷேபிக்கப்பட்டிருக்கிறது. |
| கீதாதிஷு மமவிதிதஃ. | என்னுடைய கீதைமுதலியவாக்குக்களாலே ஆக்ஷேபிக்கப்பட்டிருக்கிறது. |
| கோத்ரஸாக்ஷீ. | தேவரீர் கீதை முதலியவற்றால் ஆக்ஷேபித்ததற்கு சாக்ஷியார். |
| ஸுதீஸ்யாத். | அதற்கு மெய்ஞ்ஞானமுடையோர் சான்றுவார். |
| ஹந்தத்வத் பக்ஷபாதிஸ. | ஆச்சரியம்! ஆச்சரியம்! நல்லசாக்ஷி கோரினீர் அவரெல்லாம் உம்முடையபக்ஷபாதிகளென்று எனக்குத்தெரியுமே. |
| இதிநாகலஹேமருக்யமத்யஸ்தவத்வம். | ஏ-சுவாமி இங்ஙனம் ஜீவாத்மாவோடு கலகம் நேரிட மத்தியஸ்தர்கள் கிடைக்காததினால் நீ என்னுடைய சொத்தே என்று மஞ்சட்பாவாடையுடுத்துப்பூமாலைதரித்துப்பிரமாணம் செய்யத்துணிந்தாற்போல இப்போது சேவை சாதித்தருளுகின்றீர். |

கங்காயாத்ராப்ராபவம்.

முற்றிற்று.

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளே சரணம்.

ஸ்ரீசடகோபயதீந்திர மகாதேசிகர்
பொன்னடிகள் வாழ்க.

# ரெயில்வேவிதிகள்.



ஸ்ரீ

பிரயாணிகளுக்கு வேண்டிய சில முக்கியமான ரெயில்வேவிதிகளும் ரெயில் சத்தங்களும் ஈண்டுப் பதிக்கப்பட்டன.

## மத்ராஸ் ரயில்வே விதிகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| முதலாவது வகுப்பு | மயில் ஒன்றுக்கு | பை | | கஅ |
| இரண்டாவது | ௸ | ௸ | ,, | எ |
| மூன்றாவது | ௸ மேல் ௸ | | ,, | உ |
| மூன்றாவது வகுப்புப்பிற வண்டிகள் | ௸ | | ,, | க-இ |

## புகைக்குடி.

புகைக்குடிக்கிறதற்காக குறிக்கப்பட்டிருக்கிற வண்டியிலன்றி மற்றைய வண்டிகளில் மற்ற பிரயாணிகள் சம்மதமில்லாமல் யாராயினும் புகைகுடித்தால் இருபது ரூபாய் அபராதத்துக் குள்ளாவார் வண்டியில் புகைக்குடிக்கக்கூடாதென்று தடுக்கப்பட்டப்பின்பும் குடிப்பாராயின் அவர் ரெயில்வே உத்தியோகஸ்தரால் வண்டியைவிட்டு இறக்கப்படுவார். இவ்விதி எல்லா ரெயில்வேகளுக்குமுண்டு. ஆகையால் புகைநாற்றத்தை பொறுக்காத பிரயாணிகள் குடிக்கிறவர்களைத் தைரியமாய்த் தடுக்கலாம்.

## போகவர டிக்கெட்டு.

இந்தரெயில்வேயில் முதலிரண்டு வகுப்புக்களுக்கு ஒன்றைசத்தத்தில் ராயச்சூருக்குஉட்பட்ட ஸ்டேஷன்க



ளுக்கு இரண்டுமாதகாலத்திற்கும் அதற்குமேல்பட்ட இதரரெயில்வே ஸ்டேஷன்களுக்கு நான்குமாதகாலத்திற்கும் ரிடடர்ன் டிக்கெட்டுக் கிடைக்கும்.

## நோயாளிக்கு உதவி.

பிரயாணம்செய்யும் நோயாளியோடுகூடவே ஒருவன் இருக்கவேண்டியது அவசியமென்று ஐரோப்பிய வைத்தியர் சர்டிபிகெட்டு கொடுத்தால் அந்த நோயாளி முதல்வகுப்பிற் செல்லின் இரண்டாவது வகுப்பு டிக்கெட்டுபெற்று அம்முதல்வகுப்பிலும் இரண்டாவது வகுப்பிற்சென்றால் மூன்றாவது வகுப்புடிக்கெட்டு பெற்று அவ்விரண்டாவது வகுப்பிலும் ஒருவன்போகலாம். இவ்விதி எல்லாரெயில்வேகளுக்கு முண்டு. ஈஸ்டு இந்தியன் ரெயில்வேயில் இரண்டாவது வகுப்பிற் செல்லும் நோயாளியோடுகூட இன்டர்மீடியேட்டு வகுப்பு டிக்கெட்டுபெற்று ஒருவன் செல்லலாம். இன்டர்மீடியேட்டு வகுப்பு வண்டியிற் செல்லும் நோயாளியோடுகூட மூன்றாவது வகுப்பு டிக்கெட்டுப்பெற்றவன் போகக்கூடாது.

## பாடகர்கள்.

பாடகர்களும், தாசிகளும், கூத்தாடிகளும், ரெயில்வேஅதிகாரியின் உத்திரவின்பேரில் மூன்றாவதுவகுப்பு டிக்கெட்டுப்பெற்று இரண்டாவது வகுப்பிலும் இரண்டாவது வகுப்பு டிக்கெட்டுப்பெற்று முதல்வகுப்பிலும் சாமான்களுக்கு குறைந்தசத்தங் கொடுத்தும் போகலாம். இவ்விதி எல்லா ரெயில்களுக்கு முண்டு.

## கிரேட்டு இந்தியன் பெனின்சுலா ரெயில்வே.

| | | | | |
|---|---|---|---|---|
| முதலாவது வகுப்பு | மயில் ஒன்றுக்கு | பை | | கஉ |
| இரண்டாவது வகுப்பு | ௸ | ௸ | ,, | சு |
| மூன்றாவது | ௸ மேல் ௸ | | ,, | ங |
| மூன்றாவது வகுப்புப்பிற வண்டிகள் | | ௸ | ,, | உ-இ |

## போகவர டிக்கெட்டு.

நூறுமயிலுக்குக் குறைந்த தூரத்திற்கு இரண்டு மாதகாலத்திற்கும் அதற்கு மேற்பட்ட தூரத்திற்கு நான்குமாதகாலத்திற்கும் முதலிரண்டுவகுப்புக்களுக்கு ரிட்டரன் டிக்கெட்டு பெற்றுக்கொள்ளலாம்.

## தங்குதல்.

நூறுமயில் பிரயாணஞ் செய்த எந்த வகுப்புப் பிரயாணியும் ஒருவிடத்தில் ஒருநாள் தங்கலாம். நூறுமயிலுக்குட்பட்ட தூரத்திற்கு டிக்கெட்டு வாங்கிய பிரயாணி நடுவில் எத்தனை ஸ்டேஷன்களில் இறங்கினாலும் இருபத்துநான்கு மணிநேரத்துக்குள் சேர்ந்துவிடவேண்டும்.

ரிட்டரன் டிக்கெட்டும் ஓரோடிக்கெட்டும் பெற்றுக்கொண்டபிரயாணிகள் இறங்கி ஏறும் தேதியை ஸ்டேஷன் மாஸ்டரைக் கொண்டு டிக்கெட்டில்பதிந்துகொள்ளவேண்டும் இவ்விதி எல்லாரெயில்வேகளுக்குமுண்டு.

கல்லியாணியிலிருந்து போகவர டிக்கெட்டு கல்யாணியிலிருந்து பம்பாய்க்குப் போகவர ஒன்றரை சத்தத்தில் மூன்று வகுப்புக்களுக்கும் ரிட்டரன் டிக்கெட்டு பெறலாம்.

இந்தலயனில் மழைக்காலத்தில் இரவில் பிரயாணி வண்டியில் புனாவிலிருந்து நாசிகைக்கும் நாசிகையிலிருந்து புனாவுக்கும் போகக்கூடாது. இரவில் வண்டி ஓட்டுவது அபாயகரமென்று கம்பேனியாருக்குத் தோன்றும் பக்ஷத்தில் கர்ஜத்திலும், லானேலியிலும், காசாராவிலும் இகத்புயியிலும் நிறுத்திவிடுவார்.

## ஈஸ்டு இந்தியன் ரெயில்வே.

| | | | அ. | பை. |
|---|---|---|---|---|
| முதலாவது | வகுப்பு | மயில் ஒன்றுக்கு | ௧ | ௫ |
| இரண்டாவது | ஷை | ஷை | ௦ | ௯ |
| இன்டர்மீடியேட் | ஷை. | ஷை | ௦ | ௪ |
| மூன்றாவது | ஷை | ஷை | ௦ | ௨ |



## போகவர டிக்கெட்டு.

நூற்றைம்பது மயிலுக்கு மேற்பட்ட தூரத்துக்கு நான்குமாதகாலத்திற்கு முதலிரண்டு இன்டர்மீடியேட்டு இந்த மூன்று வகுப்புக்களுக்கும் ஒன்றரை சத்தத்தில் ரிட்டரன் டிக்கெட்டு பெற்று இஷ்டமான விடத்தில் இஷ்டமானகாலம்வரையில் தங்கலாம்.

## எழுப்புதல்.

இராத்திரி மேல்வண்டியிலும் பிரயாணி வண்டியிலும் செல்லும் முதலிரண்டுவகுப்புப் பிரயாணிகள் நித்திரை செய்துகொண்டிருக்கிற தம்மைஎந்த ஸ்டேஷனிலாவது எழுப்பும்படி வேண்டிக்கொண்டால் எழுப்பிவிடகார்டுகளுக்கு கம்பெனியாரால் உத்திரவு செய்யப்பட்டிருக்கிறது எக்காரணத்தாலாவது கார்டுகள் அவ்விதம் செய்யத்தவறினால் கம்பெனியார் ஜவாபுதாரியாகமாட்டார்கள்.

## வேலைக்காரர்கள் டிக்கெட்டு.

முதல்வகுப்பிற் செல்லும் பிரயாணி மூன்றுவேலைகாரர்களையும் இரண்டாவது வகுப்பிற்செல்லும் பிரயாணி இரண்டு வேலைகாரர்களையும் மூன்றாவது வகுப்புச் சத்தங்கொடுத்து மேல்வண்டியில் அழைத்துப் போகலாம் மேல்வண்டியில் போகும் மற்றவர் இன்டர்மீடியேட்டு வகுப்புச் சத்தங்கொடுத்துப்போகவேண்டும்.

## கிளை லயன்.

நான்குமாதரிட்டரன் டிக்கெட்டு பெற்றோர் பாராகர், ராஜமால், மகங்கீர்; மொகாமெகாட்டு, கிக்காகாட்டு, தார்கிகாட்டு பனாரிஸ், ஆக்ரா ஆகிய இவ்வெட்டு விடங்களுக்கு வேறு கிளைவண்டி ஏறிச்செல்லும்போது தனியே சத்தம் கொடுக்கவேண்டுவதில்லை சத்தமில்லாமலே ஒருதரம்போய் வரலாம். மூன்றாவது வகுப்பு டிக்கெட்டு பெற்றோர் சத்தங்கொடுக்கவேண்டும்.

சென்னையிலிருந்து தோண்டுமன்மார் மார்க்கமாய்.

ஸ்ரீகாசிக்குப்போவதற்கு.

முதல்வகுப்புச் சத்தம் ரூபா ௧௧௭—௧௩—௦
இரண்டாவதுவகுப்புச்சத்தம் ரூபா ௫௫—௮—௦
மூன்றாவதுவகுப்புச் சத்தம் ரூபா ௨௩—௧௩—௦

இன்னும் மற்ற சத்த விபரங்களை மாத மாதம் பிரசுரமாகும் ரெயில்வே கயிடு புத்தகத்தைக் கொண்டு தெரிந்துகொள்க.



ஸ்ரீ

# பிழைதிருத்தல்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தல். |
|---|---|---|---|
| ௧ | ௬ | பூமிக்குபிராமணசாதி | பூமிக்குப்பிராமணசாதி |
| ,, | ௧௩ | சத்துவகுணத்தைபுல்லிங்கமெனவும் | சத்துவகுணத்தைப்புல்லிங்கமெனவும் |
| ௨ | ௨ | வடவெல்லையாக சிற்பநூலார் | வடவெல்லையாகச் சிற்பநூலார் |
| ௩ | ௪௨ | மாத்திரை | மாத்திரம் |
| ௪ | ௪௦ | சூத்திரத்துக்குபொருள் | சூத்திரத்துக்குப்பொருள் |
| ,, | ௧௮ | தலபுராணங்கள் | தலப்புராணங்கள் |
| ௫ | ௨௭ | தேவரிர் | தேவரிற் |
| ,, | ,, | பாகவானை | பகவானை |
| ௮ | ௮ | மாத்திரை | மாத்திரம் |
| ௧௦ | ௧௧ | வானரச்சேனை | வானரசேனை |
| ௧௩ | ௧௧ | சொல்லிகும்பிட்டு | சொல்லிக்கும்பிட்டு |
| ௧௯ | ௪௦ | முப்பத்திநுன்கு | முப்பத்துநான்கு. |
| ௨௦ | ௬ | இக்குகைசனை | இக்குகைகளை |
| ௨௩ | ௫ | மிதமாகயிருத்தலால | மிதமாகவிருத்தலால் |
| ௨௬ | ௨௪ | கொண்டுச்சில | கொண்டுசில |
| ,, | ௨௦ | பீடிக்கபட்ட | பீடிக்கப்பட்ட |
| ௨௭ | ௭ | சக்கரத்தாழ்வானை | சக்கரத்தை |
| ௨௮ | ௧௬ | முப்பத்திநுன்கு | முப்பத்துநான்கு |
| ௩௩ | ௭ | முன்னர்தாமும் | முன்னர்த்தாமும் |
| ,, | ௪௮ | எதிர்தோன்றி | எதிர்த்தோன்றி |
| ௪௨ | ௨௦ | யமுனாசங்கமத்தில் | யமுனாகங்காசங்கமத்தில் |
| ,, | ௩௧ | மணப்பரப்பில் | மணற்பரப்பில் |
| ௪௩ | ௧௧ | உடலினராயதிராவிட | உடலினராய்த்திராவிட |
| ௪௩ | ௧௬ | பிரயகவாலா | பிரயாகவாலா |
| ௪௪ | ௪௨ | நான் | நான்கு |
| ௪௫ | ௨௨ | தொலைந்து | தொலைத்து |
| ௪௬ | ௧௧ | முப்பத்திநுன்கு | முப்பத்துநான்கு |
| ௪௮ | ௪௯ | மெயர் | பெயர் |
| ,, | ௨௪ | குறித்து | குறித்தது |
| ,, | ௨௩ | முப்பத்திநுன்கு | முப்பத்துநான்கு |
| ௪௯ | ௨௦ | தாரமாகிய | தாரகமாகிய |
| ,, | ௨௩ | பிராணபிரயாண | பிராணப்பிரயாண |
| ௫௩ | ௩ | சாம்பராயிற்று | சாம்பராயிற்று |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தல். |
|---|---|---|---|
| ருகூ | உக | செத்தாரைசாவார் | செத்தாரைச்சாவார் |
| ,, | கூ0 | சாவாரைசாவார் | சாவாரைச்சாவார் |
| ருசா | எ | யடையாருமுளர் | யடைவாருமுளர் |
| ருசு | உரு | வவ்விதருமம் | வவ்வித்தருமம் |
| ருஅ | க0 | காசிபடமும் | காசிப்படமும் |
| சுஅ | கஅ | நீர்காக்கை | நீர்க்காக்கை |
| கூக | கசா | யெருவன் | யொருவன் |
| எஉ | கூஉ | இந்திரதீர்த்தம் | இந்திரத்தீர்த்தம் |
| அ0 | கூ | மென்று | மென்றும் |
| அஉ | க | தொலைந்து | தொலைத்து |
| அரு | கக | ராமபத்திரர் | ராமபத்திர |
| அகூ | உகூ | சௌன்காதியர் | சௌனகாதியர் |
| கூக | சா | பெறேரும் | பெற்றோரும் |
| ,, | கஎ | பிண்டபிரதானம் | பிண்டப்பிரதானம் |
| கூகூ | க0 | போறதன்று | போன்றதன்று |
| க00 | கூஉ | சுகாம்தபசாகவும் | சுதபசாகவும் |
| க0சா | கஉ | தீர்ததபிரசாதம் | தீர்த்தப்பிரசாதம் |
| ,, | உகூ | பாத்துவாசங்கிதை | பாத்துவாசசங்கிதை |
| க0கூ | கக | செல்லாகாது | செல்லலாகாது |

இவைபோன்ற எழுத்துப் பிழைகளைக் கண்டு களைந்துகொ

114691